GOKULAM


கோகுலம்



ரூ.6/-

மே 2003

வழி தவறிய நாய்க்கு வீட்டுக்குச் செல்ல வழி காட்டுங்கள்!



கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2234 5622, 23, 24
தொலைநகல் :
044 - 2234 5621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com


பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-

வெளிநாடு
(விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம்
கவர்ந்த இதழ்


8

கோடை விடுமுறைப் போட்டி - I

திருச்சி மாணவர் ஸ்பெஷல்


25


32

பறக்கும் பாலூட்டி!

குறும்பன் டென்னிஷ்

- போலந்து நாடோடிக் கதை


35


40

யாருக்கு, எத்தனை ஐஸ் கிரீம்?

- ஜாலியான விளையாட்டு

மே 2003 மலர் : 21 இதழ் : 4

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.



கதை எழுத ஆர்வமுள்ளவர்களுக்கு, இதோ ஒரு மகிழ்ச்சியான செய்தி! சிறுவர் இலக்கியம் செழிக்கத் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட அழ. வள்ளியப்பா, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர். அவர் நினைவாக இந்த ஆண்டும் போட்டி அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது.

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி

1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம்.

2. கதைகள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என எதைப் பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழியுடன் அனுப்ப வேண்டும்.

3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும்.

4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையை கதையுடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. இது குறித்து எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5. இதில் கலந்து கொள்ள கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

6. கதைகளை முதல் முறை வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.

7. முடிவு தேதி 31.5.2003. இதற்குப் பின் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டா.


8. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தர வேண்டும்.

9. கதைகளை 'ஆசிரியர், கோகுலம், 47, N.P. ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் 'அழ. வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி' என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

10. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானது.

முதல் பரிசு - ரூ. 500/-
இரண்டாம் பரிசு - ரூ. 300/-
மூன்றாம் பரிசு - ரூ. 200/-

கொ.மா. கோதண்டம்



தண்ணீர் காட்டிய குரங்கு!

மாணவர்கள் மலையின் அடர்வனத்தின் ஒற்றையடிப் பாதையில் நடந்து மலையேறிக் கொண்டிருந்தார்கள். காட்டுவாசிச் சிறுவன் நீலன் முதலில் வழிகாட்டிக் கொண்டு சென்றான். எங்கிருந்தோ அருவி விழும் சத்தம் கேட்டது. ஆற்றில் வந்த தண்ணீரைக் குடித்தார்கள். அது இளநீர் போல இனித்துக் கிடந்தது. அங்கே சிற்றுண்டி உண்டார்கள்.

"வாழைப் பழங்கள் இருக்கட்டும் சாமி, அப்புறம் வேண்டியிருக்கும்" என்றான் நீலன்.

காட்டுப் பறவைகளின் ஒலிகளும் காற்றுக்கு மரக்கிளைகள் ஆடும் ஒலிகளும் ஏதோ இசை நிகழ்ச்சிபோல கேட்டுக்கொண்டிருந்தன. அவர்கள் ஒரு குன்றின் உச்சிக்கு ஏறிவிட்டார்கள்.

அங்கிருந்து பார்த்தால் தூரத்து ஊர்கள் குழந்தைகள் கட்டிய விளையாட்டு வீடுகளாய் காட்சியளித்தன.

"சினிமாவுல வர்ற மாதிரி இந்த மேகங்களுக்கு மேலே நாம சவாரி செஞ்சா எப்படி இருக்கும்?" ஒரு மாணவன் கேட்டான்.

"சினிமாவுல வர்ற மாதிரியே இருக்கும்" என்று அடுத்த மாணவன் சொன்னதும் அவர்கள் கலகலவென்று சிரித்தனர்.

"சரி நீலா, அடுத்து எங்கே போகணும்?"

"இந்தச் சரிவுல இறங்கி அடுத்த மலைவரைக்கும் போயிட்டு வந்துடுவோம் சாமி."

நீலன் ஒரு இடத்தை அவர்களுக்குக் காட்டினான். மரத்து உச்சிக்கிளையில் ஒரு குரங்கு அமர்ந்திருந்தது. ஒரு மலைப் பாம்பு அதை நோக்கிக் கிளையில் மெல்ல ஊர்ந்து சென்றது.


அருகில் போகும் வேளையில் ஒரு பையன் "ஹோ" என்று சத்தமிடவே திரும்பிய குரங்கு மலைப் பாம்பைப் பார்த்ததும் உச்சியிலிருந்து கீழே குதித்து ஓடியது.

''நல்ல வேளை குரங்கு தப்பிச்சிடிச்சி."

"சாமி, இந்த வனம் ரொம்ப தூரம் நீண்டு விரிஞ்சி இருக்கு. இங்க ஆயிரக்கணக்குல மிருகங்கள் இருக்கு. ஏதோ ஒண்ணு எங்கேயோ ஒண்ணைக் கொன்னு தின்னுட்டுத்தான் இருக்கும். இது சகஜம்."

"ஆமாம் நீலா, குரங்குகளை வேறு எது கொன்னு சாப்புடும்?"

"மலைப் பாம்பு, சிறுத்தை, புலி, ஆத்துல முதலை தான் குரங்குகளுக்கு எதிரி. ஆத்துல தண்ணி குடிக்க வரும்போது ஒளிஞ்சிருந்து லபக்குன்னு முதலை புடிச்சி விழுங்கிடும். இப்படி இருந்தாலும் குரங்குகள் கூட்டங் கூட்டமாக சந்தோசமாகத் தான் வாழும். ஆனால் சில



சமயம் குரங்குகள் கூட்டமாகக் கூடி புலியக் கூட கடிச்சி கொன்னுடும்."

"நீலா குரங்குகள் மனுசங்களை ஏதும் செய்யுமா?" _ இளங்கோ.

"நாம கையை ஓங்குனா அதுவும் கையை ஓங்கும். நாம பல்லைக் காட்டினால் அதுவும் பல்லைக் காட்டும். நாம செய்யற மாதிரியே குரங்குகள்

செய்யும் சாமி."

"ஆமாம். நமக்குத் தெரிஞ்ச தொப்பி வியாபாரி கதையும் இதைத்தான் சொல்லுது."

"சாமி, பொதுவா காட்டு மிருகங்கள் சாப்பிட்டது போக மிச்சம் இருந்தால் அடுத்த பிராணிக்கு விட்டுட்டுப் போயிடும். குரங்குகள் புலி, கரடி வரும்போது மற்ற பிராணிகளுக்குச் சத்தம் செய்து தப்பிக்க வழி செய்து காப்பாத்திடும்."

அப்போது மரங்களின் மேலே குரங்குகள் கூட்டமாக ஆரவாரம் செய்தவாறே தாவி ஓடின. மரங்களிலிருந்து அத்திப் பழங்கள் சலசலவென்று கீழே விழுந்தன. அதைப் பொறுக்கி எடுத்த நீலன் மாணவர்களிடம் தந்து "சாமி, இந்தப் பழங்களைச் பிச்சிப் பாருங்க. புழு இருந்தா கீழே போட்டுடுங்க. இல்லேன்னா நல்லா ஊதிட்டுச் சாப்பிடுங்க. இது மலை அத்திப்பழம், நல்லா இருக்கும். உடம்புக்கும் சத்து கூடும்."

"ஆமாம் நீலா! ரொம்ப நல்ல ருசியாத் தான் இருக்கு"– பூங்கோதை.

"சரி வாங்க அடுத்த மலைக்குப் போகலாம்." – நீலன்.

அவர்கள் இறங்கி நடந்தனர். சிறிது தூரத்தில் மலையையே மறைத்து ஒரு வகை காட்டுப் புல் ஆள் உயரத்தில் காய்ந்து போய் கிடந்தது. மரங்களும் அதிகமில்லை.

"சாமி, இப்ப இதுக்குள்ளேதான் நாம் போகப் போறோம்."

"என்னப்பா, பயமா இருக்கே! கீழே மலைப் பாம்பு போனாக் கூட தெரியாதே!"

"ஏன், புலி இருந்தால் கூட தெரியாதாக்கும்!"

"பேசாம வாங்க சாமி. நான் தான் முதலில் போகப் போறேன். ஒண்ணும் பயமில்லே, இருங்க வர்றேன்."



அவன் ஓடிச் சென்று, ஒரு மரத்தில் ஏறி சில கிளைகளை ஒடித்தான். இறங்கி, கவட்டைகளாக V போல மரப்பட்டை நாரால் கட்டி ஆளுக்கு ஒன்றாகத் தந்தான்.

"சாமி, இதை உங்க நெஞ்சுக்கு நேரா கூர்மையான பகுதி முன்னால இருக்கிற மாதிரி புடிச்சிக்கிட்டு வாங்க. புல் விலகி மேல படாம வழிவிடும்."

"அட, அருமையான ஐடியா இல்லை!"

நீலனுக்குப் பின்னால் அடர்ந்த புல்லுக்கு இடையே கவட்டைக் கம்பைப் பிடித்தவாறு நடந்து சென்றனர். கால் மணி நேரம் நடந்ததும் புல்வெளி முடிந்து வெட்ட வெளி வந்தது. அங்கும் சிறு சிறு புதர்களும் பாறைகளும் ஆங்காங்கு சில மரங்களும் மட்டுமே இருந்தன.

"என்னப்பா, வனத்தை விட்டு இப்படி வறட்சியான பகுதிக்குக் கூட்டிட்டு வந்திருக்கே?"

"வாங்க, வாங்க போகலாம்."

அவர்கள் அவன் சென்ற வழி நடந்தனர்.

"ஏம்ப்பா, தண்ணி தவிக்குதே" என்றான் ஒரு மாணவன். மற்றவர்களும் அதையே கேட்டனர். அந்த இடம் வெயிலடிக்கும் பகுதியாதலால் அதிகமாகவே அவர்களுக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது. அவன் அவர்களை ஒரு மரத்தடியில் உட்கார வைத்து விட்டுச் சிறிது தூரம் சென்று கீழே படர்ந்திருந்த ஒரு செடியிலிருந்து பழங்களைப் பறித்து வந்தான்.

"சாமி, இது இலந்தப் பழம் மாதிரி, சாப்புடுங்க கொஞ்சம் தாகம் நிக்கும்." _ நீலன்.

அவர்கள் அதைச்

● நாய் நாவின் மூலம் வியர்வையை வெளியேற்றும். – த். திவ்யா, புத்தூர்.

சாப்பிட்டனர்.

"ஏம்ப்பா, நல்லாத்தான் இருக்கு. ஆனா தாகம் அடங்கலையே! ஏய், வாழைப்பழம் இருக்கே சாப்பிடலாமா?"

"கொஞ்சம் இருங்க, பிறகு சாப்பிடலாம்." தூரத்தில் சில ஓநாய்கள் வேகமாக ஓடிக் கொண்டிருந்தன.

"இது, என்னப்பா இப்படி ஓடுது?"

"சாமி, இது ஓநாய்ங்க. சத்தம் போடாமல் இருங்க, போயிரட்டும்."

"இது என்னப்பா செய்யும்?"

"இது ஆளுகளைக் கண்டால் விரட்டியடிக் கும். எதிர்த்தால் கடிக்க வரும். பொல்லாத மிருகம்."

"சரி, இப்ப எனக்குத் தண்ணி வேணுமே."

"எந்திரிச்சி வாங்க போகலாம்." அவர்கள் எழுந்து நடந்தனர்.

"தண்ணியில்லாமல் இனிமேல் என்னால நடக்க முடியாதுப்பா"– ஒரு மாணவன் அப்படியே உட்கார்ந்தான்.

"கொஞ்ச தூரம் வாங்க. தண்ணி எங்க இருக்குன்னு கண்டுபிடிக்கணும். இந்த மலைப்பகுதி தண்ணியில்லாத இடம்."

"அப்ப எதுக்கு இங்கே கூட்டிட்டு வந்தே?"_ இளங்கோ.

"புதுசா ஒரு அனுபவம் இருக்கட்டுமுன்னு தான்." _ நீலன்.

"அப்ப சரிதான். அதுக்காகத் தண்ணி யில்லாத காட்டுல எதுக்குச் சிரமப்படணும்?"

"சாமி, அந்த மரத்துல ரெண்டு குரங்கு கள் இருக்கு. நீங்க வாழைப்பழங்களைத் தாங்க."

நான்கு வாழைப் பழங்களை வாங்கிய அவன் தனது தலைப்பாகையை அவிழ்த்து அதிலிருந்த ஆழாக்கு உப்பையும் எடுத்துச் சென்று அந்த மரத்துக்குக் கீழே வைத்தான். சிறிது நேரத்தில் மரத்தில் இருந்த இரண்டு குரங்குகள் இறங்கி கீழே வந்தன. வாழைப் பழங்களை எடுத்து உரித்துச் சாப்பிட்டன. பின் கீழே கிடந்த உப்பை எடுத்து வாயில் போட்டன. சிறிது நேரம் கழித்து குரங்குள் இரண்டும் ஓட ஆரம்பித்தன.

"சாமி, நீங்களும் கூடவே ஓடி வாங்க" என்ற நீலன் குரங்குகள் பின்னால் ஓட மாணவர்களும் ஓடினார்கள்.

பல மேடு, பள்ளங்களைக் கடந்து ஓடிய குரங்குகள் ஓர் இடத்திலிருந்த பள்ளத்தில் தண்ணீர் குடித்தன. குரங்குள் சென்றதும் ஓடி, உலர்ந்து தவித்துப் போன அவர்களை நீலன் தண்ணீர் குடிக்குமாறு சொன்னான்.

"ஏம்ப்பா நீலா! இங்கே தண்ணியிருக்குற விஷயம் உனக்கு எப்படி தெரிந்தது?" – பூங் குன்றன்.

"எனக்குத் தெரியும் சாமி. குரங்குக்கு உப்பு வச்சா அது தண்ணி உள்ள இடத்துக் குப் போகும். இதை உங்களுக்குக் காட்டத் தான் இந்த இடத்துக்குக் கூட்டிட்டு வந் தேன்."


"சரிப்பா இதுவும் ஒரு புதிய செய்திதான். உனக்கு ரொம்ப நன்றி. நீலா கீழே அருவிப் பக்கம் போயி சாப்பிட்டுட்டுப் போகலாம்."

அவர்கள் திரும்பி நடந்தனர். ❑



கிரேக்கர்களுக்கும், பெர்சியர்களுக்கும் மாரத்தான் என்கிற இடத்தில் நடந்த போரில் பெர்சியர்கள் தோற்றுப் போனார்கள். இந்தச் செய்தியை அந்தப் போர்க்களத்திலிருந்து ஃபீடிப்பிலஸ் என்ற வீரர் 26 மைல் தூரம் ஓடிப் போய்ச் சொன்னார். அவர் அந்தத் தூரத்தை நான்கு மணி நேரத்தில் கடந்தார். இதிலிருந்துதான் மாரத்தான் ஓட்டம் வழக் கத்துக்கு வந்தது.

- விஜி



இங்கே உள்ள படத்தை நன்றாக உற்றுப் பாருங்கள். தவறுகள் உங்களுக்குத் தெரிகிறதா? இதுதான் போட்டி. குறைந்தது 20 தவறுகளை நீங்கள் கண்டுபிடித்து எழுத வேண்டும். அத்துடன் முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்புங்கள். அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடை எழுதிய 10 பேருக்குப் பரிசு வழங்கப் படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி 15.5.2003

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97.

கோடை விடுமுறைப் போட்டி - 1



மறக்க முடியவில்லை...



வசனம் மாறியது...

எங்கள் பள்ளியில் ஆண்டு விழா கொண்டாடினோம். அப்போது என் தோழி லதா நாடகத்தில் நடித்தாள். அவள் திருடனாகவும், இன்னொரு தோழி கீதா வழிப் போக்கனாகவும் நடித்தனர். கீதா பணக்காரப் பெண். கொஞ்சம் பணத் திமிர் உண்டு. எனவே, லதாவுக்கு கீதாவைப் பிடிக்காது. அவளை எப்படியாவது மடக்க வேண்டும் என்று சொல்வாள்.


நாடகத்தன்று கீதாவின் பணப்பையைப் பறித்துக் கொண்டு ஓட வேண்டும் லதா. ஆனால் லதா, கீதாவின் பணப்பையைப் பறித்துக் கொண்டு ஓடும்போது ''ஏய், உன் பணப்பை இப்போது என்னிடம் உள்ளது. நான் தான் பணக்காரன், என்னிடமும் திமிர் உண்டு'' என்று ஆசிரியர் சொல்லாத வசனத்தைக் கூறிவிட்டு ஓடினாள்.

இதைக் கேட்ட கூட்டத்தினர் அனைவரும் சிரித்து விட்டனர். கீதாவை இவ்வசனம் வெகுவாகப் பாதிக்க, அன்று முதல் அவள் மாறி விட்டாள். பிறகு இருவரும் சிநேகிதிகளாகி விட்டார்கள்.

- கமலக்கண்ணி,
ஈரோடு மாவட்டம்

லட்சியம்!

தம்பியிடம், ''உன் லட்சியம் என்ன?'' என்று கேட்டேன். அதற்கு அவன் ''படிச்சு ஃபாரன்ஹீட் வாங்குவதுதான் என் லட்சியம்'' என்றான். ''படிச்சு ஃபாரன்ஹீட் வாங்கப் போறியா? பாரன்ஹீட்னா என்ன?''



என்று திருப்பிக் கேட்டேன். ''எத்தனை நாளைக்குத்தான் 'டிகிரி' வாங்கப் போறேன்னு சொல்றது. ஒரு மாற்றத்துக்காகத்தான் டிகிரிக்குப் பதிலா ஃபாரன் ஹீட்னு சொன்னேன்'' என்று அவன் கூறியதும் சிரித்துவிட்டேன்.

- அ. பேச்சியப்பன்,
இராஜபாளையம்

சிக்மா... சிக்குமா?


எங்கள் கணித ஆசிரியர் நகைச்சுவையாகப் பேசுவதில் வல்லவர். அவர் பாடமெடுத்தால் நேரம் போவதே தெரியாது. ஒரு நாள் கணக்கில் சிக்மா என்றொரு பகுதியை நடத்தினார். போர்டில் 'சிக்மா' என எழுதிவிட்டு, ''இது உன் அறிவில் 'சிக்குமா.. சிக்காதா?' '' என்றாரே பார்க்கலாம்! மொத்த வகுப்பும் சிரிப்பில் அதிர்ந்தது.

- பாளை பசும்பொன்,
மகராஜநகர்



யானை!

ஓவியப் போட்டி ஒன்றில் கலந்து கொள்ள இருந்த என் தங்கை யானை படம் வரைந்து பழகிக் கொண்டிருந்தாள்.



எங்கள் சித்தப்பாவிடம் தான் வரைந்த யானை படத்தைக் காட்டி, ''எப்படி இருக்கிறது?'' என அவள் கேட்டாள். சித்தப்பா, ''அழகா இருக்கு. கீழே 'யானை'ன்னு எழுதினா இன்னும் நல்லா இருக்கும்'' எனக் கூற, என் தங்கையின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

- ப. அஷோக்,
சென்னை

ரோஜா...

எனக்கு ரோஜாப்பூக்கள் என்றால் மிகவும் பிடிக்கும். அதனால் எங்கள் தோட்டத்தில் ரோஜாச் செடியை வாங்கி ஊன்றினேன். செடியை ஆடு, மாடுகள் தின்று விடக்கூடாது என்பதற்காக, அதனைச் சுற்றிலும் கருவேல மரத்தின் குச்சிகளை ஊன்றி வைத்து, செடிக்குத் தினமும் தண்ணீர் ஊற்றி வந்தேன். ஒரு



வாரம் ஆனது. ரோஜாச் செடி வாடிப்போய் இலைகள் கொட்டி, செத்தும் போய்விட்டது. சரியென்று நானும் சோகத்தோடு நீர் ஊற்றுவதை விட்டுவிட்டேன். மீண்டும் ஒரு வாரம் கழித்து செடியை ஊன்றிய இடத்திற்குப் போய் பார்த்தால் அதிர்ச்சி! நான் ரோஜா செடியைச் சுற்றி ஊன்றிய முட்குச்சிகள் ஜோராய் இலை விட்டிருந்தன. பறித்து எறிய மனதின்றி அப்படியே விட்டுவிட்டேன்.

- தனலட்சுமி,
மயிலாடுதுறை


தேனீ

எங்கள் வகுப்பில் அறிவியல் பாட வேளை நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் தேனீக்களைப் பற்றிப் பாடம் நடத்திக்




கொண்டிருந்தார். ஒவ்வொரு வகைத் தேனீயும் எப்படி இருக்கும், அதன் பணிகள் ஆகியவற்றைப் பற்றி மிகவும் விளக்கமாக நடத்தினார். அப்போது சக்திவேல் என்ற மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அதைக் கவனித்த ஆசிரியர் அவனை எழுப்பி, ''ஒரு தேனீ ராணித் தேனீயா என்பதை எப்படி கண்டுபிடிப்பாய்?'' என்று கேட்டார். உடனே அவன், ''தலையில கிரீடம் வச்சிருந்தா அது ராணித் தேனீ சார்'' என்றான். அதைக் கேட்டவுடன் நாங்கள் அனைவரும் சிரித்து விட்டோம்!

- எம். வினோத்,
சங்கரன்கோவில்



சோமுவின் குறும்பு
கதை: இந்து
படம்: சாந்தூ
அடடா! ஒரு சக்கரம் இருக்கே!
இந்தச் சக்கரத்தை வைத்து விளையாடப் போறேன்.
ஹை! மீனு இந்தப் பக்கம் வருது... மிரட்டிப் பார்க்கலாம்.
ஹை...ஹை!
© 2002 MALAY FEATURES WORLD RIGHTS RESERVED
ஐயோ! நான் செத்தேன்! வலி உயிர் போகுது.
1




என்னாச்சு மீனு?
அந்தச் சோனுவோட தொல்லை தாங்க முடியலை.
மீனுவிடமிருந்து எல்லா விஷயத்தையும் கேட்டது கரடி.
நீ என்னுடன் வா. சோனுவுக்குப் பாடம் புகட்டறேன்.
© 2002 MALAY FEATURES P.B. No. 608 KOTTAYAM -1
ஆஹா! சோனு நல்லா தூங்குது. இதுதான் சரியான சந்தர்ப்பம்!
கரடி கயிற்றின் ஒரு முனையைச் சோனுவின் வாலில் கட்டியது. மறு முனையைச் சக்கரத்தில் கட்டியது.
சில நிமிடங்களில் கண் விழித்தது சோனு.
ஆஹா! கரடி போயிட்டிருக்கு. கரடி மேல சக்கரத்தை உருட்டினால் வேடிக்கையாக இருக்கும்.
ஆ.... ஐயோ! என்ன நான் உருளறேன்!
இப்ப தெரியுதா, அடுத்தவங்க கஷ்டம்?
2

அப்போதைய பம்பாய் மாகாணத்தில் பொதுப் பணித்துறையில் உதவிப் பொறியாளராக நுழைந்தார் அந்த இளைஞர். முதலில் பணி புரிந்த நகரம் நாசிக். ஒரு நகர மக்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்றால், அவர்கள் வசிக்கும் இடமும், சுற்றுப்புறங்களும் தூய்மையாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். இது தவிர, குடிப்பதற்கு நல்ல, பாதுகாக்கப்பட்ட குடிநீர் தேவை என்பதையும் அறிந்து, செயல்படத் துவங்கினார். மாகாண அரசுக்குத் திட்டங்களைச் சமர்ப்பித்தார். உடனே அனுமதி கிடைத்தது. பதவியேற்றுக் கொண்ட சில ஆண்டுகளிலேயே, நகரில் கழிவு நீர் பாதைகள் அமைக்கப்பட்டன. ஆங்காங்கே மேல் நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகிக்கப்பட்டது. காலரா போன்ற நோய்களின் தீவிரம் குறைந்தது. அந்த இளைஞரது பணியை மக்கள் போற்றிப் புகழ்ந்தார்கள்.

மாகாண அரசு உடனே அந்த இளைஞரை வேறு பல நகரங்களுக்கு அனுப்பியது. அந்த நகரங்களிலும் குடிநீர்த் திட்டங்கள், பாதாளச் சாக்கடைகள், சாலைகள் அமைப்பு, பராமரிப்பு போன்ற பணிகளைச் செய்து மக்களின் பாராட்டைப் பெற்றார். இப்படி கிட்டத்தட்ட இருபத்தைந்தாண்டுகள் பணியாற்றிய பின் கண்காணிப்புப் பொறியாளர் பதவி அவருக்குக் கொடுக்கப்பட்டது. மக்கள் நல திட்டங்களில் இன்னமும் தீவிரமாக கவனம் செலுத்தினார். அடுத்து தலைமைப் பொறியாளர் பதவி தான். ஆனால் அப்போதைய வழக்கப்படி ஆங்கிலேயர்களுக்குத்தான் அந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டது. இருந்தும் அந்த இளைஞரோ, தனது உழைப்புக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும் என்று நம்பினார். அவரது நம்பிக்கை பொய்த்துப் போனது. வழக்கத்தை மாற்றாமல் ஒரு ஆங்கிலேயருக்கே அந்தப் பதவியைக் கொடுத்தனர். மனம் வெறுத்துப் போன அந்த இளைஞர் பதவியை ராஜினாமா செய்தார். "இனி எந்த அரசிடமும் பணிபுரிய மாட்டேன். மீதமிருக்கும் என் வாழ்நாள் முழுக்க இந்திய மக்களுக்கே பணியாற்றுவேன். இந்தியாவை வேளாண்மை, தொழில் துறைகளில் முன்னேற்ற அரும் பாடு படுவேன்" என்று சபதம் எடுத்துக் கொண்டார். அதன்படியே நூறு ஆண்டுகள் வாழ்ந்த அவர் செய்த சாதனைகள் வியக்கத்தக்கவை.

பொறியாளர்களின் தந்தை!




• விஸ்வேஸ்வரய்யா

அந்த இளைஞர்தான் மோட்ச குண்டம் விஸ்வேஸ்வரய்யா.

கர்நாடக மாநிலத்தில் உள்ள தங்க பூமியாகிய கோலாருக்கு அருகில் உள்ள முத்தென்ஹள்ளி என்ற கிராமத்தில் பிறந்தவர் விஸ்வேஸ்வரய்யா. அவர் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது தந்தை இறந்து விட்டார். வகுப்பில் முதல் மாணவனாகவும், அறிவுக் கூர்மையுடனும் இருந்த விஸ்வேஸ்வரய்யாவின் படிப்பு தடைப்படாமல்

தொடர்ந்து நடக்க உதவி செய்தார் அவரது மாமா ராமையா. பெங்களூர் சென்ட்ரல் கல்லூரியில் அவரது படிப்பு தொடர்ந்தது. படிக்கும் போதே பள்ளிக் குழந்தைகளுக்கு டியூஷன் எடுத்து சம்பாதித்து, மாமாவின் சிரமத்தைக் குறைத்தார்.



பட்டப்படிப்பு முடித்த பின் பொறியியல் படிக்கும் ஆசை உண்டானது. பூனாவில் உள்ள பொறியியல் கல்லூரியில் சேர்ந்தார். மாகாணத்திலேயே முதல் வராகத் தேர்வு பெற்றார். உடனடியாக அரசு வேலை கிடைத்து, நாசிக்கில் பணியில் சேர்ந்தார்.

மேல்நாடுகளுக்குப் பயணம் சென்றார். அதன் நோக்கம் அங்கு ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளைக் கண்டறிந்து அவற்றை நமது நாட்டில் செயல்படுத்துவதுதான். ஹைதராபாத் நிஜாம் அரசு அவரது சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவதாக அந்தத் தகவல் சொன்னது. அந்த நகரத்தில் மூசி, ஈசி என்ற இரு ஆறுகள் ஓடிக் கொண்டிருந்தன. வருடத்தில் சில நாட்கள் அந்த ஆறுகளில் ஏற்படும் வெள்ளப் பெருக்கால் நகரம் சீரழிவுகளைச் சந்தித்துக் கொண்டிருந்தது. சுற்றுச் சூழலை ஆரோக்கியமானதாக மாற்றிட, பாதாளச் சாக்கடை அமைக்க விரும்பினார் நிஜாம். மேல்நாட்டில் இருந்து திரும்பிய விஸ்வேஸ்வரய்யா, இந்த இரு பணிகளையும் அற்புதமாக நிறைவேற்றிக் கொடுத்தார். நகரின் குறுக்கே போகும் அந்த ஆறுகளின் கரையிலேயே, அணைகள் கட்ட வேண்டிய இடங்களைத் தீர்மானித்தார். இதன் மூலம் வேளாண்மைக்கும் நீர் கிடைத்தது. வெள்ளக் கொடுமையும் அகன்றது.

“பம்பாய் மாகாண அரசு உங்களுக்குத் தலைமைப் பொறியாளர் பதவி கொடுக்காதது பற்றிக் கவலைப்பட வேண்டாம்; நாங்கள் கொடுக்கிறோம்" என்று அழைத்தது மைசூர் அரசு. "எனது பணிகளில் யாரும் குறுக்கிடக் கூடாது, முழு சுதந்திரம் வேண்டும்" என்று மன்னரிடம் வாக்குறுதி பெற்று அந்தப் பணியில் சேர்ந்தார். இருபத்து நான்கு மணி நேரமும் மக்களைப் பற்றிய சிந்தனைகள் தான் அவருக்கு. 'வேளாண் தொழிலை எப்படி மேம்படுத்தி விளைச்சலைப் பெருக்கலாம், என்னென்ன தொழிற்சாலைகள் அமைக்கலாம்' என்ற நோக்கத்திலேயே திட்டங்களைத் தீட்டினார். இந்தியாவிலேயே முதன் முதலாக சிவசமுத்திரம் என்ற நீர் வீழ்ச்சியில் மின்சார உற்பத்தி நிலையம் அமைத்தார். அங்கு உற்பத்தியான மின்சாரம் கோலார் தங்கச் சுரங்கத்துக்குப் பயன்பட்டது. இருந்தும் தேவை அதிகரிக்க, அதிகரிக்க, உற்பத்தியைப் பெருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 'என்ன செய்வது?' என்று யோசித்த விஸ்வேஸ்வரய்யா, காவிரியின் குறுக்கே கண்ணம்பாடி என்ற இடத்தில் அணை கட்டத் தீர்மானித்தார்.



மன்னரும் சம்மதிக்கவே, இரண்டு கோடி ரூபாய் செலவில் அணை கட்டும் வேலை துவங்கியது. அந்த அணையில் பல புதுமைகளைப் புகுத்தினார். அதில் ஒன்று தான்

தானியங்கு மதகு. அணைக்குத் தண்ணீர் வரத்து அதிகம் உள்ள சமயங்களில், அணைக்கு ஆபத்து ஏற்படாமல் தடுத்து, அதே சமயத்தில் அதிக அளவு தண்ணீரைச் சேமிக்க உதவியது தானியங்கு மதகு. அணையில் குறிப்பிட்ட உயரம் தண்ணீர் வந்தவுடன் மதகு திறந்து கொள்ளும். ஆபத்தில்லாத அளவுக்குத் தண்ணீர் குறைந்தவுடன் மதகு மூடிக் கொள்ளும். இந்த தொழில் நுட்பம் இன்று வரை பொறியாளர்களால் பாராட்டப்படும் ஒன்றாகும். இது தவிர விவசாயிகளுக்கு நீர் பங்கீட்டு முறை ஒன்றையும் அமைத்துக் கொடுத்தார். இதன் மூலம் வருடம் முழுவதும் சகட்டு மேனிக்குத் தண்ணீர் எங்கும் பாயாமல், முறைப்படுத்தப்பட்டு, எந்தெந்த பயிருக்கு எப்போது தேவையோ, அப்போது மட்டும் தண்ணீர் வசதி செய்து தரப்பட்டது. இதனால் நீர் ஆதாரம் பாதுகாக்கப்பட்டது. இந்தக் கண்ணம்பாடி அணைதான் இப்போதைய கிருஷ்ண ராஜ சாகர். இந்த அணையிலிருந்து சுரங்க வாய்க்கால் அமைத்து விவசாயத்துக்குத் தண்ணீர் கொண்டு சென்றது மற்றொரு சாதனை. கண்ணம் பாடியில் நீர் மின் உற்பத்தி துவங்கியது. பற்றாக் குறை தீர்ந்தது.



வேளாண் மேம்பாடு மட்டுமல்ல, தொழில் துறையிலும் முத்திரைகளைப் பதித்தார் விஸ்வேஸ்வரய்யா. பத்ராவதி இரும்புத் தொழிற் சாலை அவரது முயற்சியால் ஏற்பட்டதுதான். பெங்களூர், மைசூர் நகரமைப்புத் திட்டங்களுக்கு முன்னோடி அவர்தான். மைசூர் பகுதியில் ரயில் பாதைகளை விஸ்தரிக்கத் திட்டம் போட்டவர் அவர்தான். ஒரிஸ்ஸாவில் வெள்ளச் சீரழிவைத் தடுக்கும் பொருட்டு ஹீராகுட் அணையைக் கட்ட திட்டம் போட்டுக் கொடுத்தவர். நமது தலைநகரான தில்லியில் பல அழகான அரசுக் கட்டடங்கள் இருக்கின்றன. அவற்றை வடிவமைத்துக் கொடுத்ததிலும் விஸ்வேஸ்வரய்யாவின் பங்குண்டு.

எந்தக் கட்டத்திலும் சுயமரியாதையை விட்டுத் தர மாட்டார். ஒரு முறை மன்னர் தர்பாரில் ஆங்கிலேயர் ஒருவருக்கு மட்டும் தான் நாற்காலி போடப்பட்டது. அதனால் விஸ்வேஸ்வரய்யா தர்பாருக்கு வர மறுத்து விட்டார். மன்னர் அவரது கருத்துக்கு மதிப்பளித்து, முக்கியப் பிரமுகர்கள் எல்லோருக்கும் நாற்காலிகள் போட ஏற்பாடு செய்தார். தலையில் டர்பன், கோட்டு சகிதம் தான் எப்போதும் காட்சியளிப்பார். விஸ்வேஸ்வரய்யாவின் திறமை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வைப் பார்த்து, நேரு அவர்கள், அவரை அரசின் கமிட்டிகள், குழுக்கள் பெரும்பாலானவற்றில் பதவிகள் அளித்து ஆலோசனைகள் கேட்டார். தொண்ணூற்று நான்கு வயதில் அவருக்குப் பாரதரத்னா விருது வழங்கப்பட்டது.

1962ல், தனது நூறாவது வயதில் காலமானார் விஸ்வேஸ்வரய்யா. தனது வாழ்நாட்களில் வெளிநாடுகளில் பல முறை வேலை வாய்ப்பு வந்தும் "எனது சேவை இந்தியாவிற்கே'' என்று விடாப்பிடியாக இருந்தவர் அவர். 'பொறியாளர்களின் தந்தை' என்று போற்றப்படும் விஸ்வேஸ்வரய்யா ஒருமுறை சொன்னார்: ''கடுமையாக உழைப்பதன் மூலம் ஆயுள் நீடிக்கிறது. மனக்கவலை, ஒழுங்கீனம், சந்தேகம் ஆகியவை மனிதனை முடக்கி செயலற்றுப் போகச் செய்து விடும். நமது நாட்டின் பல பல்கலைக் கழகங்கள் அவருக்கு டாக்டர் பட்டங்கள் கொடுத்திருக்கின்றன. பல அணைகளையும், தொழிற்சாலைகளையும் உருவாக்கி, பெரிய பொறுப்புகளில் இருந்த அவர், இறுதி வரை தனக்கென்று சொந்த வீடு கூட கட்டிக் கொள்ளவில்லை. தனக்குக் கிடைத்த வருமானத்தையும் தர்ம காரியங்களுக்கே செலவழித்தார். இவரது நினைவால் பெங்களூரில் அமைக்கப்பட்டுள்ளது விஸ்வேஸ்வரய்யா அருங்காட்சியகம்.

— ப்ரியன்

ரா.ரஜனி



ஆஹா, என்ன ருசி!

முத்தண்ணாவும் பெத்தண்ணாவும் வியர்க்க விறுவிறுக்க 'யானைப் பிடி' பள்ளத்தை வெட்டினர். ஒருவன் தடவித் தடவி அளவு பார்க்க, மற்றொருவன் மண்வெட்டியால் செதுக்கிச் செதுக்கிக் குழியைச் சரி செய்தான்.

அண்ணன், தம்பி இருவரும் பிறவியிலேயே கண்ணில்லாதவர்கள். காட்டில் சுள்ளிகளைச் சேகரிப்பார்கள். அவற்றை அருகில் உள்ள கிராமச் சந்தையில் விற்று, அதன் மூலம் ஜீவனம் நடத்தினர்.

விறகுகளைச் சுமந்து வருதல் என்பது அவர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. சந்தையில் ஒரு தடவை யானை வந்திருந்தது.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, "ஹய்யா... யானை...யானை!" என்று குதூகலமாய் ஓடினர்.

பெத்தண்ணா ஒருவரிடம், "யானைன்னா என்ன?" என்று கேட்டான்.

அவர், அவனை யானையிடம் அழைத்துச் சென்றார். தொட்டுப் பார்த்தான். தம்பியையும் தொட்டுப் பார்க்கச் சொன்னான்.

கைகளுக்கு எட்டாத பெரிய உடம்பும் முறம் போன்ற காதுகளும் தூண்களைப் போன்ற கால்களும் நீண்ட தும்பிக்கையையும் தடவிப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

அன்றைய பொழுது முழுவதும் அவர்களுக்கு யானையைப் பற்றியே பேச்சாக இருந்தது. முத்தண்ணா சொன்னான்: "அண்ணா, நாம் தினமும் விறகுகளைக் கட்டித் தூக்கிட்டு வர்றது சிரமமா இருக்கு. நாம் ஏன் ஒரு யானையை வாங்கக் கூடாது?"

அண்ணனுக்கும் தம்பியின் யோசனை சரியாகப்பட்டது.

"ஆமாம்! வாங்கிட்டால் என்ன...?"

அவர்கள் தினந்தோறும் சாப்பிடும் 'சாப்பாட்டுக் கடை' பாட்டியிடம் செய்தியைச் சொன்னதும் அவள் பற்களின்றி விழுந்து விழுந்து சிரித்தாள்.

"அட, அடி முட்டாள்களா! யானை வாங்கிற நிலைமையிலேயா நீங்க இருக்கீங்க? காட்டுக்குத்தானே தினமும் போறீங்க? பெரிசா பள்ளம் வெட்டி

யானை புடிச்சாத்தான் உண்டு...!" என்று தமாஷாகச் சொல்லி வைத்தாள்.

அன்றே முடிவு செய்து, இன்று பெரிய குழி தயார். குறுக்கே மெல்லிய குச்சிகளையும் அதன் மேலே இலைச் சருகுகளையும் போட்டு மூடி வைத்தனர். இருவரும் அன்றைய பிழைப்புக்காகச் சந்தைக்குச் சென்றனர்.

காடு அன்று மிகவும் அமைதியாக இருந்தது. ஒரே ஒரு சிங்கத்திற்குத்தான் வயிறு 'கியான்... கியான்...' என்றது. அது நான்கு நாட்களாகச் சாப்பிடவில்லை. அதற்குப் பயங்கர பசி மயக்கம். பக்கத்திலேயும் எந்தப் பிராணிகளும் வரவில்லை.

பசி மயக்கம் கண்களை மறைத்திருக்க, சிறிது தூரத்தில் ஏதோ நிழலாடியது போல் இருந்தது. கஷ்டப்பட்டுக் கண்களைத் திறந்து பார்த்தது. நன்கு கொழுத்த மான் ஒன்று வந்து கொண்டிருந்தது.

'இந்த மானைக் கோட்டை விட்டால், பட்டினிச் சாவில் சொர்க்கம் போக வேண்டியதுதான்' என்று முடிவு கட்டி, சிங்கம் சக்தியைத் திரட்டிக் கொண்டு பாய்ந்தது. சட்டென்று அதனைக் கண்டு விட்ட மான் அலறியடித்து ஓட ஆரம்பித்தது.

சிங்கமும் சளைக்கவில்லை. மானோ குறுக்கு வழியில் புகுந்து செடி, கொடிகளுக்கிடையே ஓடி மறைந்து விட்டது.

சிங்கத்திற்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. இருந்த சக்தியும் வீணாகி, மிகவும் சோர்வடைந்தது. விதியை நொந்து மெல்ல நடந்தது.

'அதோ அந்த மரத்தடியில் அமர்ந்து கொஞ்சம் ஓய்வு எடுக்கலாம்!' என்று முடிவு செய்து மரத்தை அணுகியது. பூமியே பிளந்து தன்னை உள்ளே வாங்குவது போல சரசரவென்று முத்தண்ணா, பெத்தண்ணா வெட்டிய பெருங் குழியில் விழுந்து, மயக்கமானது.

சந்தையில் அன்று விற்பனை விரைவில் முடிந்து விட்டது. சகோதரர்கள் ஆர்வம் தாங்காமல் உடனே காட்டிற்குச் சென்று யானை விழுந்துள்ளதா என்று பார்க்கக் கிளம்பினர்.

பாட்டி, "சாப்புட்டுப் போங்கடா அதிமேதாவிகளா...!" என்று சொல்லிப் பார்த்தாள். "இப்போ பசியில்லை...!" என்றனர். எனவே, தூக்குச் சட்டியில் முருங்கைக்காய் சாம்பார் சாதமும் உருளைக்கிழங்குப் பொரியலும் கொடுத்தனுப்பினாள்.

அண்ணன் முதலில் பள்ளத்தில் கையை விட்டுத் துழாவினான். சிங்கத்தின் பிடரி மயிர் கொத்தாய் அவன் கைகளுக்குத் தட்டுப்பட்டது. முகத்தருகே தும்பிக்கையைத் தேடினான். அது இல்லை. காதுகளைத் தடவினான்.

"தம்பி, இந்த யானைக்குத் தும்பிக்கை இல்லை; காதும் சின்னதா இருக்கு. உடம்புக் கூட பெரிசா இல்லை...!" என்றான் பெத்தண்ணா.

முத்தண்ணா, "அது யானைக் குட்டியா



கோலா கரடி தண்ணீர் குடிக்காது.

இருக்கும். அதான் எதுவுமே வளரலை...!" என்றான்.

இருவரும் சிங்கத்தின் கழுத்தில் தடித்த கயிற்றால் முடிச்சுப் போட்டனர். மறுபடியும் மேலேறி, கயிற்றை இழுத்தனர். சிங்கம் மயக்கத்தில் கண்களைத் திறந்து பார்த்தது. கழுத்து இறுக்கப்பட்டதால், தானே முயற்சி செய்து மேலே ஏறியது. அதன் மூக்கிற்கு வாசம் எட்டியது. கண்களைத் திறந்து வாசம் வந்த இடத்தைப் பார்த்தது. சகோதரர்களின் சாப்பாட்டுத் தூக்குச் சட்டி அதன் அருகே இருந்தது. தூக்குச் சட்டியை ஓர் இடி இடித்தது. அது கீழே சரிந்து மூடி திறந்து கொண்டது. இப்போது உணவின் வாசனை எல்லோரது நாசியிலும் ஏறியது.

சிங்கம் ஆவலோடு சாப்பிட்டது.

தன் வாழ்நாளில் இப்படியொரு உணவை அது சாப்பிட்டதேயில்லை!

அண்ணனும் தம்பியும் அதன் பிடரியைக் கோதினார்கள். தூக்கம் வந்தது. 'அட இவங்க எவ்வளவு நல்லவங்களா இருக்காங்க! மனுஷங்க நம்மைப் பார்த்தால் ஓடுவாங்க. இல்லைன்னா சுட்டுத் தள்ளுவாங்க. ஆனா இந்த ரெண்டு பேரும் என்னைக் கண்டு பயப்படலை. குழியிலே விழுந்து கிடந்த என்னை மேலே தூக்கி விட்டாங்க. என்னோட பசியைப் போக்கினாங்க. இவங்களுக்கு நான் இனி உதவியா இருப்பேன். இனிமேல் ஆடு, மாடு அடிச்சு சாப்புடறதையெல்லாம் விட்டுட்டு அருமையான மனுஷங்க சாப்பாடுதான் சாப்பிடணும்...!' என்று நினைத்தது சிங்கம்.

மறுநாள் விற்பனைக்காக மறுபடியும் சகோதரர்கள் விறகுகளைச் சேகரித்தார்கள். கட்டுகளாகக் கட்டி, சிங்கத்தின் முதுகில் ஏற்றினார்கள். சிங்கம் அவர்களோடு நடந்தது. சந்தை 'களை கட்ட' ஆரம்பித்திருந்தது.

சிங்கத்தைக் கண்ட கூட்டம் ஓடியது. ஆனால், முத்தண்ணா மற்றும் பெத்தண்ணாவிடம் சிங்கம் மிக அமைதியாக அமர்ந்திருப்பதைக் கண்டு, மெல்ல மெல்ல அருகில் வந்தனர். வழக்கம் போல வியாபாரம் நடந்தது.

சாப்பாட்டுக் கடை பாட்டி மூக்கில் விரலை வைத்தாள்.

"அடப்பாவிகளா! சிங்கத்தையே நாய்க்குட்டி மாதிரி... பழக்கி வச்சிருக்கீங்களே...! உங்க நல்ல மனசுக்கு சிங்கம் என்ன... புலியென்ன... எல்லோரும் நெருங்கித்தான் வருவாங்க!" என்று சொல்லி வியந்தாள் பாட்டி.



அந்தச் சந்தை 'சிங்கச் சந்தை' என்று பெயர் பெற்றது. சிங்கத்தைப் பார்க்கவே கூட்டம் அதிகம் வர ஆரம்பித்தது.

சகோதரர்களின் வியாபாரமும் பெருகியது. சொந்தமாகப் பெரிய விறகுக் கடை ஒன்றுக்கு முதலாளியானார்கள். சாப்பாட்டுக் கடை பாட்டியைத் தங்களோடு தங்க வைத்துக் கொண்டனர். சிங்கமும் இனிதே வாழ்ந்தது.

• பிளாட்டிபஸ் முட்டையிட்டுப் பால் கொடுக்கும்.

மசாலா பாப்கார்ன்

ஒவ்வொரு நாடும் தன் நாட்டின் பாதுகாப்புக்காக ராணுவ தளவாடங்கள், ஆயுதங்களை வைத்திருக்கின்றன. இவ்விதமான ஆயுதங்களை அதிக அளவில் உற்பத்தி செய்து உலகின் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் முதல் இடம் அமெரிக்கா. இரண்டாவது இடம் ரஷ்யா, மூன்றாவது இடம் இஸ்ரேல்.

- கு. அருணாசலம், தென்காசி

மற்ற நதிகளுக்கு இல்லாத ஒரு சிறப்பு டேன்யூப் நதிக்கு உண்டு. இந் நதிக் கரையில் மூன்று நாடுகளின் தலைநகர்கள் அமைந்துள்ளன. யுகோஸ்லேவியாவின் தலைநகர் பெல்கிரேட், ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்ட், ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னா.

- என். ஜரினா பானு, திருபட்டினம்

ஒட்டகங்கள் மணிக்கு 20 கிலோ மீட்டர் வரை செல்லக் கூடியவை. பல நாட்கள் தண்ணீர் இல்லாமல் உயிர் வாழும். ஆனால் தண்ணீர் குடிக்க ஆரம்பித்துவிட்டால் பல மணி நேரம் குடிக்கும். பிறந்தவுடன் 'ஒட்டகக் குட்டி' 40 கிலோ எடையிருக்கும். ஒரு வயது நிரம்பியதும் ஏழு அல்லது எட்டு மடங்கு எடை அதிகரிக்கும். ஒட்டகம் ஒரு நாளில் நான்கு முறை சுமார் ஆறு லிட்டர் பால் கறக்கும். ஒட்டகப் பால் இனிப்பாக இருக்கும். தன்னுடைய குட்டி அருகில் இருந்தால் தான் ஒட்டகம் பால் கறக்கும். இல்லாவிட்டால் ஒரு சொட்டு பால்கூட கறக்க முடியாது.

'பசிக்கிறது; சாப்பிட வேண்டும்' என்று கேலனைன் என்ற ஹார்மோன்தான் மூளைக்குக் கட்டளை இடுகிறது. 'பசி' அடங்கிவிட்டது; சாப்பிட்டது போதும் என்று லெப்டின் என்ற ஹார்மோன் கட்டளையிடுகிறது. இதுபோன்ற ஹார்மோன்கள் நம் உடலில் சுரப்பதால்தான் பசித்ததும் சாப்பிடுகிறோம்; பசி தீர்ந்ததும் நிறுத்தி விடுகிறோம்.


- சு. திவ்யாஸ்ரீ, வந்தவாசி


ஆக்ராவில் 1985ல் கனமழை பெய்தபோது, தாஜ்மஹால் உள்ளே மழை நீர் ஒழுக ஆரம்பித்தது. என்னென்னவோ செய்தும் ஒழுகுவதை நிறுத்த முடியவில்லை.


இறுதியில் பழைய பதிவேட்டினைப் புரட்டிப் பார்த்தபோது 1653ல் இதே போல மழை நீர் ஒழுகிய செய்தியும், அப்போது வெள்ளியை உருக்கி அடைத்த செய்தியும் இருந்தது.


அதைப் பார்த்தபின், அதேமுறையைப் பயன்படுத்தி ஒழுகலை நிறுத்தினர்.

- எம். வினோத், சங்கரன்கோவில்











தென் கிழக்காசியக் காடுகளில் காணப்படும் ராஃப்ளேசியா என்ற தாவரத்தின் மலர்தான் மிகப் பெரியது. சிங்கப்பூரை உருவாக்கிய ஸ்டாம் போர்ட் ராபிள்ஸ் பெயரால் அழைக்கப்படும் இது ஒட்டுண்ணித் தாவரம். இதன் மொட்டு பெரிய முட்டைக் கோஸ் அளவு இருக்கும். இதழ்கள் விரியும்போது ஓரடி முதல் மூன்று அடி நீளம் வரை இருக்கும். மலரின் எடை ஏழு கிலோ.

உலகில் காணப்படும் மிகச் சிறிய மலரும் தாவரம் உல்ஃபியா. சுத்தநீர் ஏரிகளில் மிதந்தவாறு வளரும். இத்தாவரப்பூ அரை மி.மீட்டர் அளவுதான் இருக்கும். இதற்கு வேர் கிடையாது.

- ஜி.கே.எஸ். மூர்த்தி, கோபிசெட்டிபாளையம்

மரத் தவளைகள் ஐரோப்பா வட, தென் அமெரிக்கா, வட ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவின் வறண்ட பகுதிகளில் காணப்படுகின்றன.

அவற்றின் கால்களில் உள்ள விரல்களில் ஒரு விதப் பசைத் தன்மை இருப்பதால் மரங்களைப் பற்றிச் செல்லவும் கிளைகளில் தாவிச் செல்லவும் முடிகிறது.

ஐரோப்பாவில் உள்ள மரத் தவளைகள் வெளிர் பச்சை நிறமுடையவை. ஆனால் அவற்றை யாராவது பார்த்து விட்டால் இடத்துக்கு ஏற்றவாறு நிறம் மாறிவிடும்.

வட அமெரிக்காவில் இரண்டு விதமான மரத் தவளைகள் உள்ளன. ஒரு வகை குழல் ஊதுவது போல சத்தமிடும். மற்றொரு வகை நம் நாட்டுத் தவளை போல் பயங்கரச் சத்தமிடும்.


- ஆர்.ஆர்.பூபதி, திண்டுக்கல்


உலகிலேயே மிகப் பெரிய கரையான் புற்று ஜிம்பாப்வே நாட்டில் அமைந்துள்ளது. இதன் உயரம் 12 மீட்டர். இதிலுள்ள மணலின் எடை சுமார் 11,750 டன். இதன் வயது 700 ஆண்டுகள். கரையான் புற்றில் பாதுகாப்பறைகள். வளர்ப்பிடங்கள், நடைக் கூடங்கள், சேமிப்பு அறைகள், பாலங்கள், நிலத்தடிப் பகுதிகள் போன்ற அமைப்புகள் உள்ளன.

- நெ. இராமன், சென்னை

மீராபாய் கண்ணன் மீது பண்போடு இசைப்பாடிப் பக்தியுலகில் நிலை பெற்றவர். இவர் 15 - 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் பெண்மணி உருவம் பொறித்து வெளியிடப்பட்ட முதல் அஞ்சல் தலை மீராவின் திருவுருவத் தலையே! இது 1.10.1952இல் வெளிவந்தது.

- சு. கண்ணகி, மிட்டூர்





வழிகாட்டும் நட்சத்திரங்கள்...

ஏன் துளிர்க்கவில்லை?

கண்ணதாசன் ஒரு கூட்டத்தில் பேசும்போது, ''கண்ணனின் கானம் கேட்டால் பட்ட மரம் துளிர்க்கும்'' என்று சொன்னார். கூட்டத்தில் ஒருவர், ''அப்படி என்றால் கண்ணனின் கையில் இருக்கும் புல்லாங்குழல் ஏன் துளிர்க்கவில்லை?'' என்று கேட்டார். ''புல்லாங்குழல், கண்ணனின் கைகளில் பட்டுக் கொண்டே இருக்கிறது. அதனால் அதற்கு மீண்டும் பிறவி கிடையாது. நேராக சொர்க்கம்தான். ஆகவே புல்லாங்குழல் துளிர்க்கவில்லை'' என்று பதில் கூறி கூட்டத்தை அசர வைத்தார் கண்ணதாசன்!

- ஆர். ராஜலட்சுமி, கரூர்.

பணம் இல்லை...

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவ்வை இல்லத்திற்காகவும், இதர நலப் பணிகளுக்காகவும், நிதி வசூலித்து வந்தார். கொடுக்க மனமில்லாத ஒருவர், ''என்னிடம் பணமில்லை. பூசணிக்காய் தான் இருக்கிறது'' என்று அவரிடம் சொன்னார். உடனே முத்துலட்சுமி ரெட்டி, ''அதற்கென்ன, பரவாயில்லை. அவ்வை இல்லத்துக் குழந்தைகளுக்குப் பொரியல் செய்ய உதவும். கொடுங்கள்'' என்று சொல்லி, பூசணிக்காயை வாங்கிச் சென்றார்.

- ஜி. ப்ரணவ், கரூர்.

இருவர் சொன்னதும்...

ஃபிரான்ஸ் நாட்டுப் பேரறிஞர் வால்ட்டேரிடம் ஒருவர் கேட்டார்: ''உங்களுடைய நண்பர் தங்களைப் பற்றி எப்போதும் கேவலமாகவே பேசுகிறார். ஆனால் நீங்களோ அவரைப் பற்றி எப்பொழுதும் நல்லதே சொல்லுகிறீர்களே! இது ஏன்?''

வால்ட்டேர் சொன்ன பதில்: ''ஒரு வேளை நாங்கள் இருவர் சொல்வதுமே தவறாக இருக்கலாம்!''

அனுபவம் தந்த பாடம்!




* கண்ணதாசன்

காயவில்லை!

புகழ் பெற்ற நகைச்சுவை எழுத்தாளர் மார்க் ட்வெய்ன், ஒரு சமயம் ஓவியர் ஒருவரைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தார்.


* மார்க் ட்வெயின்



அவர் வரைந்திருந்த ஓர் ஓவியத்தைப் பார்த்து, "இந்த மூலையில் மேகம் போட்டிருப்பது சரியில்லையே..." என்று அதை அழிப்பது போலக் கையைப் பக்கத்தில் கொண்டு போனார்.



* முத்துலட்சுமி ரெட்டி



* சர்ச்சில்

அதைக் கண்டதும் ஓவியர் பயந்து "தொடாதீர்கள். இன்னும் வர்ணம் காயவில்லை" என்றார்.

அதற்கு மார்க் ட்வெய்ன், "பரவாயில்லை. கையை அலம்பி விட்டால் போகிறது" என்றார்!

- என். ஜரினா பானு, திருபட்டினம்.

அனுபவம்

வின்ஸ்டன் சர்ச்சில் தம்முடைய அரசியல் வாழ்வில் ஏற்பட்ட இன்னல்களையும், அனுபவங்களையும் ஒரு சமயம் சபையில் கூறிக் கொண்டிருந்தார்.

அவர் அவ்விதம் பேசிக் கொண்டு இருக்கும்போது, ஒருவர் அவரை மடக்கும் எண்ணத்துடன், "அனுபவம் மூடர்களுக்குத்தான் பாடம் கற்பிக்கும்!" என்று குறுக்கிட்டுக் கூறினார்.

சர்ச்சில் உடனே, "நண்பரே! அதை நானும் ஒப்புக் கொள்கிறேன். அதனால் தான் என்னுடைய அனுபவத்தில் இருந்து நீங்கள் பயன்பெறக் கூடும் என்று கருதி இங்கு கூறினேன்" என்றார். இதைக் கேட்ட அவருடைய முகத்தில் ஈயாடவில்லை!

- ஆர். பிரசன்னா, கரூர்.

சிறையில் ஏன்?

மெக்ஸிகோ யுத்தத்திற்காக நிதி திரட்டுவதற்கு அரசாங்கம் விதித்த வரியை "இது அடிமைத்தனத்தை வளர்க்க உதவுகிறது. அடிமைத்தனத்தை என்னால் ஆதரிக்க முடியாது" என்று சொல்லி ஹென்றி டேவிட் தோரா என்ற அறிஞர் வரி கட்ட மறுத்து விட்டார். இந்தக் குற்றத்திற்காக அவர் கன்கார்ட் என்ற சிறையில் அடைக்கப்பட்டார். தோராவின் நண்பர் ரால்ஃப் வான்டோ எமர்ஸன் அவரைப் பார்ப்பதற்குச் சிறைக் கூடத்திற்குச் சென்றார். எமர்ஸன் தோராவிடம் "ஹென்றி! நீ ஏன் இந்தச் சிறையில் இருந்து வருகிறாய்?" என்றார். அதற்கு தோரா, "வான்டோ நீ ஏன் இன்னும் இங்கு வந்து சேரவில்லை?" என்று திருப்பிக் கேட்டார்.

சிறிய கடிதங்கள்!

விக்டர் ஹியூகோ என்ற புகழ் பெற்ற எழுத்தாளர் 1862ம் ஆண்டில் 'லெஸ் மிஸரபில்ஸ்' என்ற நாவலை எழுதினார். நூலின் விற்பனையைப் பற்றி அறிந்து கொள்ளுவதற்கு விக்டர் ஹியூகோ நூல் வெளியீட்டாளருக்கு ஒரு கடிதத்தில் '?' என்று வெறும் கேள்விக்குறி ஒன்றை மட்டும் போட்டு அனுப்பினார்.

அவரின் நூல் எல்லோரும் அதிசயிக்கும் வகையில் விற்றுக் கொண்டிருந்தது. அதனைக் குறிக்க, நூல் வெளியீட்டாளர் பதில் கடிதத்தில் '!' என்ற ஆச்சரியக்குறியை மட்டும் போட்டு விக்டர் ஹியூகோவுக்குப் பதில் அனுப்பினார். இவை தான் மிகச் சிறிய கடிதங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

- க. தனலட்சுமி, மயிலாடுதுறை.

யானைக்குப் பதில் பூனை!



''காந்தி ரோடுல ஒரு சின்ன பிள்ளையார் கோவில் இருக்கும்; அதைத்தாண்டி வந்தால் மூணாம் நம்பர் வீடு எங்களோடதுதான்.''

''எனக்கு 'ஹைஜம்ப்' தெரியாதேடா!''

- சீர்காழி வி. ரேவதி




''நேத்து நம்ம ராமு வீட்டுக்குப் போயிருந்தோம். அங்கே அவன் எங்களைத் தலைகுனிய வச்சுட்டான்!''

''அப்படியா! என்ன செஞ்சான்?''

''அவன் வீட்டு வாசலைச் சின்னதா கட்டியிருந்தான்!''

- எம்.வினோத், சங்கரன்கோவில்



''நேத்து எங்க தெருவில 'அடை' மழை பெய்தது!''

''அதையே டிபனா சாப்பிட்டுட்டீங்களா?''

- எம்.வினோத்.



''இந்த இரண்டாம் கேள்விக்குப் பதில் எழுதினதிலே ஒரே ஓர் எழுத்துத் தப்பாப் போச்சு. பாதி மார்க்காவது போடலாமே சார்?''

''என்ன எழுதினே?''

'' 'எலிபெண்ட்' என்பதற்கு யானை என்று எழுதாமல் பூனை என்று எழுதியிருந்தேன்!''

- பி. சுசீலா, உடுமலை



''உன் முகத்தை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன்!''

''இருக்காதே. நான் பிறந்ததில் இருந்தே அது என் கழுத்துக்கு மேல்தான் இருக்கு!''

- எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி


திருச்சி
ஸ்பெஷல்
JOTHI
PILE FOUNDATIONS

அன்பே கடவுள்!


கணினிப் படிப்பில் மிகுந்தாலும்,
கல்வி கலையில் சிறந்தாலும்,
மனமே நிறையும் அன்பால்தான்
மகிழ்ச்சி பொங்கும் வாழ்வு வரும்!

உயர்ந்த பதவி வகித்தாலும்
உச்சிப் புகழ்மேல் வாழ்ந்தாலும்
அயலார் போற்றும் அன்பால்தான்
அமைதி தங்கும் வாழ்வுவரும்!

பணத்தின் மேலே நின்றாலும்
பட்டாய் உடுத்திக் கொண்டாலும்
குணத்தைக் காக்கும் அன்பால்தான்
கூடும் இன்ப வாழ்வுவரும்!

இறைவன் முன் சென்றாலும்
இரு கை கூப்பித் தொழுதாலும்
நிறையும் தூய அன்பால்தான்
நிம்மதியான வாழ்வுவரும்!

_ பி. சிஸிலிமேரி,
ஏழாம் வகுப்பு,
செயிண்ட் ஆன்ஸ் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி,
லால்குடி.



மூன்றெழுத்து

அன்னை என்னும்
மூன்றெழுத்தால் பிறந்தோம்
அன்பு என்னும்
மூன்றெழுத்தால் வளர்ந்தோம்
பள்ளி என்னும்
மூன்றெழுத்தில் சேர்ந்தோம்
கல்வி என்னும்
மூன்றெழுத்தினைக் கற்றோம்
நட்பு என்னும்
மூன்றெழுத்தை உணர்ந்தோம்
போட்டி என்னும்
மூன்றெழுத்தை எதிர் கொண்டு
வெற்றி என்னும்
மூன்றெழுத்தை அடைந்து
சாதனை என்னும்
மூன்றெழுத்தைச் சந்திப்போம்.

_ ஆர். ஹரிணி,
ஆறாம் வகுப்பு,
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி வித்யாலயா,
திருவானைக்கோயில்,

கிளி மண்டபம்!



திருச்சி மலைக்கோட்டை தாயுமானவருக்குச் சாரமாமுனிவர் நந்தவனம் ஒன்று ஏற்படுத்தி புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். ஒருநாள் அந்த நந்த வனத்தின் வழியே சென்ற வணிகனுக்குப் பேராசை ஒன்று ஏற்பட்டது. யாரும் அறியாத முறையில் பூக்களைத் திருடிச் சென்று உறையூர் அரண்மனை ராணிக்கு விற்று வந்தான். ஒருநாள் முனிவர் இதைப் பார்த்துவிட்டு மன்னனிடம் முறையிட்டார்.

அழகின் மயக்கத்தில் இருந்த மன்னனோ இதைக் கண்டு கொள்ளவில்லை. அடங்காத் துயரம் கொண்ட முனிவர் தாயுமானவரிடம் முறையிட்டார். ஈசன் கோபமுற்றார். கிழக்கு நோக்கி இருந்தவர் மேற்குநோக்கி கண் திறந்தார். உறையூரிலும் சுற்றுப்புற ஊர்களிலும் 'மண் மாரி' பொழிந்தது. அனைத்து ஊர்களும் மணலில் புதைந்தன. உறையூர் வெக்காளி அம்மன், மணல்மாரிக்குப் பயந்து ஓடும் மக்களைத் தடுத்துக் காப்பாற்றி கூரையின்றி வெய்யிலில் அமர்ந்தாள். ஸ்ரீரங்கமும் ஸ்ரீரங்க விமானமும் மணலில் புதைந்து புல் பூண்டுகள் முளைத்து காடாகி விட்டன. பல ஆண்டுகள் ஓடின.

சோழ மன்னன் ஒரு நாள் வேட்டையாட அந்தக் காட்டிற்குச் சென்றான். அப்போது களைத்துப் போய் ஒரு மரத்தடியில் உறங்கிப் போனான். அங்கு வந்த ஒரு பெரிய கிளி ஒரு மந்திரத்தைத் திரும்பத் திரும்ப ஓதியது. அவனால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அரண்மனைக்குத் திரும்பிச் சென்றான். அதேநாள் இரவில் ஸ்ரீரங்கர் அவன் கனவில் தோன்றினார். அவன் கண்ணயர்ந்த மரத்தடியில், தான் மணலில் புதைந்து இருப்பதாகக் கூறினார். மன்னன் கிளியைத் தேடி ஓடினான். அந்தக் கிளி கிடைக்கவில்லை. மணலைத் தோண்ட ஆரம்பித்தான். ஸ்ரீரங்க விமானம் தெரிந்தது.தொடர்ந்து தோண்டினான். விமானம் முழுவதும் தோன்றியது. அந்தக் கிளியின் நினைவாக ஒரு மண்டபம் கட்டினான். அந்த மண்டபம் கிளி மண்டபம் என்று அழைக்கப் படுகிறது. அந்தக் கிளியின் நினைவாக ஒரு கூண்டில் பொம்மைக் கிளி இன்றும் வைக்கப்பட்டுள்ளது.

— ஆர். இந்து,
ஸ்ரீரங்கம்.

சிந்திப்பீர்...

மாற்றுத் துணிக்கு மறுதுணி இல்லை என்று ஏங்குபவன், ஆடையே இல்லாது, கிழிந்த ஆடையை அணிந்து கொண்டு போவோனைப் பார்த்து மனத்தைத் தேற்றிக் கொள்.

- ச. செஞ்சுடர், பத்தாம் வகுப்பு, நன்செய் சங்கேந்தி,
திருச்சி மாவட்டம்

தங்க நாணயம்!

வெளிநாடு ஒன்றில் பஞ்சம் ஏற்பட்டது.

மக்கள் பசியால் இறக்க ஆரம்பித்தனர். பணக்காரர் ஒருவர் இருந்தார். அவர் எல்லாச் சிறுவர்களுக்கும் தினந்தோறும் ஒரு ரொட்டி கொடுத்து வந்தார்.



சிறுவர்கள் அனைவரும் ஒருவரையொருவர் இடித்துத் தள்ளிக் கொண்டு பெரிய ரொட்டியை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.ஒரே ஒரு சிறுமி மட்டும் ஓரத்தில் பேசாமல் நின்று கொண்டிருந்தாள். கடைசியில் கூடையில் ஒரு சிறிய ரொட்டியே மிஞ்சியிருந்தது. அவள் அதை மகிழ்ச்சியோடு எடுத்துக் கொண்டு சென்றாள்.


மறுநாள் மீண்டும் ரொட்டி வழங்கப்பட்டது. அந்த அப்பாவிச் சிறுமிக்கு இன்றும்கூட மிகச் சிறிய ரொட்டியே கிடைத்தது. சிறுமி வீட்டிற்கு வந்து ரொட்டியைப் பிய்த்தபொழுது ரொட்டிக்குள்ளிருந்து ஒரு தங்க நாணயம் வெளிப்பட்டது. அவளுடைய அம்மா " தங்க நாணயத்தை அந்தப் பணக்காரரிடம் கொடுத்துவிட்டு வந்து விடு'' என்றாள். சிறுமி நாணயத்தைக் கொடுக்க ஓடினாள்.

பணக்காரரைப் பார்த்து ''ஐயா, என்னுடைய ரொட்டியிலிருந்து இந்த நாணயம் விழுந்தது. ஒரு வேளை மாவில் விழுந்து இருக்கலாம் என்று நினைக்கிறேன். உங்கள் தங்க நாணயத்தைக் கொடுக்க வந்திருக்கிறேன். நாணயத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்!'' என்றாள்.

பணக்காரர் "இது உன் மன நிறைவுக்குக் கிடைத்த பரிசு!" என்றார்.

சிறுமி, தலை அசைத்து மறுத்தாள். ''என்னுடைய சந்தோஷத்திற்குப் பயன் எனக்கு அன்றே கிடைத்து விட்டது. நான் கூட்டத்தில் அடிபடவில்லை அல்லவா'' என்றாள். பணக்காரர் அவளை மிகவும் பாராட்டியதோடு அவள் படிக்க உதவியும் செய்தார்.

— ஏ.எல். ஸ்ரீலக்ஷ்மி, நான்காம் வகுப்பு, ஆர்.எம்.எஸ் பள்ளி, ஸ்ரீரங்கம்.



காவல் தெய்வங்கள்

திருச்சிக்கு நான்குபுறமும் அம்மன்கள் காவல் இருக்கிறார்கள்.


கிழக்கில் - சமயபுர மாரியம்மன்

மேற்கில் - தொட்டிய காளியம்மன்

வடக்கில் - சிறுவாச்சூ மதுரகாளியம்மன்

தெற்கில் — பாண்ட மங்கலம் (உறையூர் வெக்காளி அம்மன்)

- வி. மீனாட்சி, ஐந்தாம் வகுப்பு, காமராஜர் மெட்ரிகுலேஷன் பள்ளி, கோயம்புத்தூர்.



"எனக்கு மாறு வேடப் போட்டியில் இரண்டாம் பரிசு கிடைத்தது."

"என்ன வேடம்?"

"காளி வேடம்."

"மாறு வேடம் போடாமல் போயிருந்தால் முதல் பரிசு கிடைத்திருக்குமே!"

_ பி. சிஸிலிமேரி,
ஏழாம் வகுப்பு,
செயிண்ட் ஆன்ஸ் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி,
லால்குடி.

ஜோக்ஸ்



ராஜா: என் கூடப் பிறந்தவர்கள் மொத்தம் 20 பேர் தெரியுமா?

மோகன்: அடேங்கப்பா! உனக்கு இத்தனை அண்ணன், தம்பிகளா?

ராஜா: இல்லை, இல்லை... எல்லோரும் மருத்துவமனையில் நான் பிறந்தபோது என் கூடப் பிறந்தவர்கள்.

-ஆர். நவீன் பிரகாஷ்,
எட்டாம் வகுப்பு,
எம்.எஸ்.யூ. பள்ளி, டால்மியாபுரம்.




ஒரு பஸ் விபத்துக்குள்ளானது. அதில் நிறையப் பேருக்குக் கை கால் போனது. எல்லோரும் கதறியபடி இருந்தனர். ஒருவர் மட்டும் கண்டக்டரைக் கூப்பிட்டார். அவர் ஊர்ந்து வந்து, "என்னப்பா?" எனக் கேட்டார். அதற்கு அவர் "எனக்கு நீங்க ஒரு ரூபாய் சில்லரை தர வேண்டும்" என்று கூறினார். அதைக் கேட்ட கண்டக்டர் அதிர்ச்சியில் மயக்கமானார்!

- தமிழ்வாணன்,
எம்.எஸ்.யூ, பள்ளி,
டால்மியாபுரம்.

திருச்சியில்...

மலைக் கோட்டை நகரம் என்று திருச்சி அழைக்கப்படுகிறது.

சோழர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள், நவாப் மன்னர்கள், ஃபிரஞ்சுக்காரர்கள் பின்பு ஆங்கிலேயர்கள் ஆண்டார்கள்.



5 கி.மீ. தொலைவில் பன்னாட்டு விமான நிலையம் உள்ளது. சென்னை, கோழிக்கோடு, கொச்சி, ஷார்ஜா, குவைத், கொழும்பு போன்ற இடங்களுக்குச் செல்ல முடியும்.


திருச்சி என்றவுடன் நினைவுக்கு வருவது மலைக் கோட்டையாகும். 83 மீட்டர் உயரமுள்ளது. 420 படிகள் உடைய மலையின் உச்சியில் உச்சிப் பிள்ளையார் கோயிலும், வழியில் தாயுமான சுவாமி திருக்கோயிலும் உள்ளன.

வைணவர்களின் தலைமைப் பீடமாக அமைந்துள்ளது 6 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்ரீரங்கம். 21 கோபுரங்களும், 13 நிலைகள் உடைய ராஜகோபுரமும், 7 பெரிய மதில் சுவர்களும் உடையது ஸ்ரீரங்கநாதர் திருக்கோயில்.

பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றான, யானை பூஜித்த ஸ்தலம் திருவானைக்கா ஆகும். நாவல் மரத்தடியில் உள்ள லிங்கத்தின் ஒரு பகுதி எப்போதும் தண்ணீரில் மூழ்கி இருக்கும்.

தற்கால வல்லுனர்களால் வியந்து பாராட்டப்படும் கல்லணை என்ற அணைக்கட்டு, கரிகாலன் என்ற சோழ மன்னனால் கட்டப்பட்டது.

— **ஆர். விக்னேஷ் பிரபு,**
ஐந்தாம் வகுப்பு,
செயிண்ட் ஜேம்ஸ்
மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, திருச்சி



காவேரி பாயும் இடம்!

தமிழகத்தின் மைய மாவட்டமாக விளங்கும் திருச்சிராப்பள்ளி 7 லட்சத்து 55 ஆயிரம் மக்கள் தொகை கொண்டதாகும். கலாச்சாரம், பண்பாடு, திருவிழாக்கள் ஆகியவற்றின் கதம்பம்தான், திருச்சி மாவட்டம்.

காவேரி ஆறு பாய்ந்து இம்மாவட்ட விவசாயிகளின் வாழ்க்கைக்கு வளம் சேர்க்கிறது. காவேரி ஆறு பாயும் பகுதிகளில் நெல், கரும்பு, வாழை, வெற்றிலை முதலிய முக்கிய விவசாயப் பயிர்கள் பயிராகின்றன. பூவன் வாழைக்குத் திருச்சி மாவட்டம் பெயர் பெற்றது. பண்டைய சோழர்களின் தலைநகரமாகத் திகழ்ந்த 'உறையூர்' திருச்சி அருகே உள்ளது.

- அ.தி. மாதினி, பதினோராம் வகுப்பு,
பெண்கள் மேல்நிலைப் பள்ளி, லால்குடி.

பெயர் வந்தது எப்படி?

உச்சிப் பிள்ளையார் கோவிலுக்குப் பின்புறம் உள்ள குகைகளில் சமணத் துறவிகள் வாழ்ந்துள்ளனர். அதில் ஒருவர் பெயர் 'சிரா.' அவர் பெயரில் உள்ள 'பள்ளி' என்பதால் 'சிராப்பள்ளி. அதனுடன் திரு சேர்த்து திருச்சிராப்பள்ளி என்ற பெயர் ஏற்பட்டது என்பர். 'திரிசிரன்' என்ற அரக்கர் குல அரசன் அறம் தவறாமல் நல்லாட்சி புரிந்து வந்தான். திரிசிரபுரமே திருச்சிராப்பள்ளியாக மருவியுள்ளது என்றும் சொல்வர்.

- எஸ். சுந்தர், ஆறாம் வகுப்பு,
குட்ஷெப்பர்ட் மெட்ரிகுலேஷன் பள்ளி, திருச்சி.



விடாமுயற்சி

நாராயணன் என்ற முனிவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் காட்டு வழியாகச் செல்லும்போது ஒருவனைக் கண்டார். வெகு காலம் ஓரிடத்திலேயே அமர்ந்து தியானித்து தவம் செய்ததால், அவனது உடலைச் சுற்றிக் கரையான்கள் புற்று கட்டிவிட்டன.

அவன் முனிவரை அழைத்து, ''எங்கே போகிறீர்? என்று கேட்டான். ''நான் சொர்க்கத்திற்குச் செல்கிறேன்'' என்றார் முனிவர். ''அப்படியானால் ஆண்டவன் எனக்கு எப்போது அருள்புரிவார், எப்போது முக்தி அளிப்பார் என்று நீங்கள் கேட்டு வாருங்கள்'' என்றான். முனிவர் சிறிது தூரம் சென்றார். அங்கே ஒருவன் பாடிக் குதித்து நடனமாடிக் கொண்டிருந்தான். அவன் முனிவரைக் கண்டு ''எங்கே செல்கிறீர்?'' என்று கேட்டான். ''நான் சொர்க்கத்திற்குப் போகிறேன்'' என்றார். ''அப்படியானால் எனக்கு எப்போது முக்தி கிடைக்கும் என்று கேட்டு வாருங்கள்'' என்றான். சிறிது காலத்துக்குபின் முனிவர் அந்தக் காட்டின் வழியாக வந்தார். உடலைச் சுற்றி புற்று வளர்ந்திருந்த மனிதன், ''முனிவரே என்னைப் பற்றி பகவானிடம் கேட்டீரா?'' என்றான்.

''ஆமாம்'' என்றார் முனிவர். ''பகவான் என்ன சொன்னார்?'' என்று கேட்டான் அவன். ''நீ இன்னும் நான்கு பிறவிகளுக்குப் பின்னர் முக்தி அடைவாய் என்று பகவான் கூறினார்'' என்றார் முனிவர். அதைக் கேட்டதும் அவன் அழுது புலம்பி, ''என்னைச் சுற்றிப் புற்று மூடும்வரை இவ்வளவு காலம் தியானித்தேன். இன்னும் நான்கு பிறவிகளா?'' என்றான். முனிவர் மேலும் நடந்தார். மற்றொரு ஆளைக் கண்டார். அவனும் அதையே கேட்டான்.

''ஆமாம் கேட்டேன். அந்தப் புளிய மரத்தைப் பார். அதில் எத்தனை இலைகள் உள்ளனவோ அத்தனை பிறவிகளுக்கும் பின்பு உனக்கு முக்தி கிடைக்கும் என்றார் பகவான்'' என்று கூறினார். அதைக் கேட்டதும் அவன் மகிழ்ச்சியால் குதித்தபடியே ''இவ்வளவு விரைவாக எனக்கு முக்தி கிடைக்கப் போகிறதே!'' என்று கூறினான். அப்போது ஒரு குரல், ''மகனே! இந்தக் கணமே உனக்கு முக்தி அளிக்கிறேன்'' என்று கூறியது.

அவனது விடாமுயற்சிக்குக் கிடைத்த வெகுமதி அது. அத்தனை பிறவிகளிலும் பாடுபட அவன் தயாராக இருந்தான். எதுவும் அவனைத் தளரச் செய்யவில்லை. ஆனால் முதல் மனிதனுக்கோ நான்கு பிறவிகள்கூட மிக நீண்ட காலமாகத் தோன்றியது.

— ஆர். கார்த்திகா,
ஒன்பதாம் வகுப்பு,
அமலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
முசிறி.





பறக்கும் பாலூட்டி!

வெளவால் என்றதும் பழமையான பெரிய கட்டடங்கள், மரங்கள் சூழ்ந்த பகுதிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

விந்தையான பிராணிகளில் வெளவாலும் ஒன்று. இது பறக்கும் பாலூட்டி. இரவில் இரை தேடி அலையும். பகலில் ஓய்வெடுக்கும். இவற்றிற்குப் 'பறக்கும் நரிகள்' என்ற செல்லப் பெயரும் உண்டு. முகம் நரி போன்று இருப்பதால் 'பறக்கும் நரிகள்' என்ற பெயர் ஏற்பட்டது.

வெளவால்களில் மூன்று வகைகள் உள்ளன. பூச்சிகளைச் சாப்பிடுபவை, பழம் தின்பவை, இரத்தம் உறிஞ்சக் கூடியவை. இதில் முதல் இரண்டு வகை வெளவால்கள்தான் நம் ஊரில் காணப்படுகின்றன.

வெளவாலுக்குப் பார்வைத் திறன் மிகவும் குறைவு. ஆனால் கேட்கும் சக்தி அதிகம். இவை கண்களால் பார்த்து எதிரில் இருக்கும் பொருள்களை அறிந்து கொள்வதில்லை. நம் காதுகளுக்கு எட்டாத 'கேளா ஒலி' அலைகளை எழுப்புகின்றன. இந்த ஒலி அலைகள் எதிரில் இருக்கும் பொருள்களில் பட்டு எதிரொலிக்கும். அந்த ஒலியை வெளவாலின்

எஸ். சுஜாதா









பெரிய காதுகள் கிரகித்து செவிப் பறைக்குள் அனுப்பும். இதை வைத்து துல்லியமாகப் பொருள்களை அறிந்து கொண்டு, எதிலும் மோதாமல் பறக்கின்றன. மரங்களில் ஓய்வாகத் தொங்கிக் கொண்டிருக்கும் போது, ஒரு வினாடிக்கு பத்திலிருந்து இருபது தடவை கேளா ஒலி அலைகளை எழுப்புகின்றன. பறக்கும் போது முப்பதிலிருந்து அறுபது தடவை ஒலி எழுப்பிச் செல்கின்றன.

வெளவால்களின் இறக்கைத் தோல்கள் முன்னங்கால் எலும்புகளுடனும், வால் பகுதியுடனும் இணைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் உடலிலிருந்து அதிக அளவு வெப்பமும் நீரும் வெளியேறுகின்றன. இதை ஈடு செய்ய நிறைய நீரையும் உணவையும் உட்கொள்கின்றன.

நீர் இழப்பை ஈடு செய்ய இவை அடர்ந்த மரங்கள், குகைகள், மரப் பொந்துகள், பாழடைந்த கட்டடங்களில் தங்கிக் கொள்கின்றன.

கண்களுக்கும் மூக்குத் துவாரங்களுக்கும் இடையில் எண்ணெய்ச் சுரப்பிகள் இருப்பதால், இறக்கைகள் உலர்ந்து போகாமல் இருக்க அடிக்கடி தேய்த்துக் கொள்கின்றன.

வெளவால்கள் பகலில் தொங்கும் போது தங்களுடைய உடலை நாவால்

யாருக்கு, எத்தனை ஐஸ்கிரீம்?

கோடை வெயிலில் வெளியில் சுற்றி, அம்மாவிடம் திட்டு வாங்காமல் இந்த ஐஸ் கிரீம் விளையாட்டை ஜாலியாக வீட்டிலேயே விளையாடலாம்.



இந்த விளையாட்டை இருவர் ஆடலாம்.

முதலில் 'A' யில் உள்ள சதுரத்தை வெட்டி தடிமனான அட்டையில் ஒட்டி, சிறிய சதுரங்களாக வெட்டிக் கொள்ளுங்கள். இப்போது உங்களுக்கு 20 சதுரங்கள் கிடைக்கும். இதை ஒரு டப்பாவில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள்.

இதே போல் 'B'மற்றும் 'C'யில் உள்ள முக்கோணங்களையும் அட்டையில் ஒட்டி வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். இப்போது இரண்டிலும் தலா 24 முக்கோணங்கள் கிடைக்கும்.

சிவப்பு நிற முக்கோணங்களை ஒருவரும், நீல நிற முக்கோணங்களை ஒருவரும் வைத்துக் கொள்ளுங்கள்.

இனி விளையாட்டை ஆரம்பிக்கலாம். டப்பாவை நன்கு குலுக்கி ஆளுக்கு ஒரு அட்டையைக் கண்ணை மூடிக் கொண்டு எடுங்கள்.

எடுத்த அட்டையில் என்ன எண் உள்ளதோ, அதன்படி அத்தனை முக்கோணங்களைப் படத்தில் உள்ள 'கோன்'களில் பொருத்தி, தொடர்ந்து விளையாடுங்கள்.

உதாரணமாக ஒருவருக்கு 2 விழுந்தால் இரண்டு கோன்களின் மீது 2 முக்கோணங்களை வைத்து, இரண்டு கோன்களையும் சொந்தமாக்கிக் கொள்ளலாம்.

0 விழுந்தால் ஆட்டம் கிடையாது. முக்கோணம் வைக்கக் கூடாது.

சூரியன் வந்தால், வைத்த கோன்களில் நான்கை எடுத்துவிட வேண்டும்.

டப்பாவில் இருந்து ஒருமுறை எடுத்த அட்டையைத் திரும்ப டப்பாவுக்குள் போட வேண்டாம். ஆட்டக்காரர்கள் இருவரும் மாறி, மாறி, எடுக்க வேண்டும். அட்டைகள் தீர்ந்ததும் ஆட்டம் முடிந்து விடும்.

ஆட்டம் முடிவில் யார் அதிக கோன்களைக் கைப்பற்றியிருக்கிறாரோ அவரே வெற்றி பெற்றவர். 40-ம் பக்கத்திற்குச் செல்லுங்கள். விளையாடி மகிழுங்கள்!

கருத்து, படம் : முத்து

நக்கிச் சுத்தப்படுத்திக் கொள்கின்றன. சில சமயம் ஒரு காலால் தொங்கி, மற்றொரு காலால் பற்களைச் சுத்தம் செய்கின்றன. ஒரு காலையும் தலையையும் இறக்கைக்குள் மறைத்துக் கொண்டு உறங்குகின் றன.

மரங்களிலும் சுவர்களிலும் ஏறும் போது மட்டும், தலை மேல் நோக்கி இருக்கும்.

ஆண்டிற்கு ஒரு முறை பெண் வௌவால் ஒரே ஒரு குட்டியைப் போடும். குட்டி ரோமங்களற்று, கண்களை மூடிய வண்ணம் காட்சியளிக்கும். பால் பற்கள் முளைத்திருக்கும். நிலையான பற்கள் தோன்ற ஆறு வாரங்களாகும்.


குட்டிகளை இருப்பிடங்களில் விட்டு விட்டுப் பெற்றோர் இரை தேடிச் செல்கின்றன. நான்கு மாதங்களில் குட்டி முழுவளர்ச்சியடையும்.

வௌவால்கள் சுற்றுச் சூழலுக்குப் பலவிதங்களில் நன்மை செய்கின்றன. தாவரங்களின் அயல் மகரந்தச் சேர்க்கை காரணியாகவும், விதைகளைப் பரப்பும் காரணியாகவும் செயல்படுகின்றன. தங்களின் மோப்ப சக்தியால் பூக்களில் உள்ள தேனை நாவால் நக்கும்போது மகரந்தத் தூள்கள் முகத்தில் ஒட்டிக் கொள்கின்றன. அவை வேறு மலர்களில் உட்காரும்போது அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது.

பயிர்களை அழிக்கும் பூச்சிகளை உண்டு வாழ்வதால் விவசாயிகளுக்கும் நன்மை செய்கின்றன. இவற்றின் எச்சம் தாவரங்களுக்கு நல்ல உரமாகிறது.

சுற்றுச் சூழல் சீர்கேட்டால் வௌவால்கள் அழிந்து வருகின்றன. கூட்டமாக வௌவால்கள் வசிக்கும் இடங்களைப் பாதுகாத்தால், இவற்றை ஓரளவாவது காப் பாற்றலாம்.

அ. குமார்



குறும்பன் டென்னிஷ்

டென்னிஷ் அம்மாவுடன் புறநகர்ப் பகுதியொன்றில் அழகிய வீட்டில் வசித்து வந்தான். அவனை அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் குறும்பன் என்றே அழைத்து வந்தனர்.

ஒரு நாள் அவனுடைய அம்மா சந்தைக்குக் கிளம்பும் போது அவனை அழைத்து "டென்னிஷ், கோழிக் கூண்டை பார்த்துக் கொள். அதைத் துன்புறுத்தாதே. வீட்டையும் அலங்கோலப்படுத்தாதே" என்று சொல்லி விட்டுப் போனாள்.

அவள் புறப்பட்டுச் சென்றவுடன் பிரம்பு ஒன்றை கையில் எடுத்துக் கொண்ட டென்னிஷ் கோழிக் கூண்டையே பார்த்தபடி உட்கார்ந்திருந் தான். முட்டைகள் மீதமர்ந்து அடை காத்திருந்த கோழி எழுந்து வெளியே வந்தது. 'அந்த முட்டைகள் மீது மீண்டும் போய் உட்கார்' என்று கட்டளை யிட்டான் டென்னிஷ். ஒன்றும் புரியாத கோழி பயந்தபடி அங்குமிங்குமாக ஓடியது. அதை எப்படியாவது மீண்டும் கூண்டுக்குள் அனுப்ப வேண்டு மென்று கையிலிருந்த பிரம்பினால் துரத்தி துரத்தி அடித்தான் டென்னிஷ். துரதிஷ்டவசமாக அடிபட்ட கோழி இறந்து விட்டது.

கோழி இறந்துவிட்டதால் முட்டைகள் சில்லென்று ஆகிவிடுமே என்று கருதிய டென்னிஷ் அந்த முட்டைகளை எடுத்து வெளியே வைத்து கோழி அமர்ந்ததைப் போலவே அதன் மீது அமர்ந்தான். இவனுடைய பளு தாங் காமல் எல்லா முட்டைகளும் உடைந்து போயின.

அம்மா வந்து கேட்டால் என்ன பதில் சொல்வதென்று பயந்து போன டென்னிஷ், மதிய உணவைத் தயார் செய்து வைத்தால் அவளுடைய கோபத்திலிருந்து தப்பிக்கலாம் என்று கருதினான். உடனே இறந்து போன கோழியைச் சுத்தப்படுத்தி அதைச் சுடுவதற்காகக் கம்பியில் கட்டி அனல்

போலந்து நாடோடிக் கதை

படும்படி வைத்தான்.

கூடவே ஒரு கோப்பைத் திராட்சை சாறு இருந்தால் அம்மாவுக்கு மிகவும் பிடிக்கும் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்ட டென்னிஷ், வீட்டின் கீழ் தளத்திற்கு ஓடிச் சென்று திராட்சை சாறு வைத்திருந்த பீப்பாயைத் திறந்தான். பழச் சாறு குழாய் வழியே வெளியே வரும் சமயத்தில் மேலே சமையலறையில் ஏதோ சத்தம் கேட்கவே அதை அப்படியே விட்டுவிட்டு மேலே ஓடினான். என்னவாக இருக்கும்? என்று மாடிப்படி வழியே மேலே போனவனுக்குப் பீப்பாயின் குழாயைத் திறந்தது மறந்து விட்டது.

சமையலறையில் ஒரு பூனை வறுப்பதற்காகக் கட்டி வைத்திருந்த கோழியைக் கடித்து இழுத்துக் கொண்டிருந்தது.

'அதைக் கீழே போடு' என்று கத்திய டென்னிஷ், ஒரு இரும்புக் குழாயைத் தூக்கிக் கொண்டு பூனையைத் துரத்தினான். அதுவோ அறைக்குள் தாவித்தாவி ஓடியது. அடுக்கி வைக்கப்பட்டிருந்த பீங்கான் பாத்திரங்களையெல்லாம் தள்ளி உடைத்தது. அந்த அறை அலங்கோலமாகிவிட்டது. கடைசியில் கோழியைக் கீழே போட்டுவிட்டு ஜன்னல் வழியே குதித்து வெளியேறியது.

கோழியை எடுத்து வந்து மேஜை மீது வைத்து விட்டுப் பழச்சாறு ஜாடியைக் கொண்டுவர கீழ்ப் பகுதிக்கு ஓடினான். அறை முழுக்க தரையில் பழச்சாறு ஓடிக் கொண்டிருந்தது. நிச்சயமாக அம்மா கோபப்படப் போகிறாள் என்று சொல்லிக் கொண்டே கோதுமை மாவு சிறிதளவு எடுத்துத் தூவி துடைத்துவிடலாமென்று கருதினான். அவனுடைய போதாத காலம் கோதுமை மாவு வைத்திருந்த டப்பா அப்படியே கவிழ்ந்து மாவும்



பழச்சாறுமாகப் பிசைந்து கொண்டு தரை முழுக்க சிவப்பு நிறமாகி பிசுபிசுவென்று ஆனது. அதன் மீதே நடந்து சென்று ஜாடி நிறைய பழச்சாறை எடுத்துக் கொண்டு மாடிப்படிகளில் ஏறிச் சென்றான். காலடிபட்ட இடமெல்லாம் பிசுபிசுவென்று சிவப்பாக இருந்தது.

சாப்பாட்டைத் தயாரித்து விட்டால் அம்மா சந்தோஷப் படுவாள் என்று நினைத்த டென்னிஷ்க்கு அறை முழுக்க உடைந்த பாத்திரங்களையும் சிவப்பு காலடிகளையும் பார்த்தவுடன் இன்னும் பயமேற்பட்டது. அம்மாவிடமிருந்து நிச்சயமாக உதை கிடைக்கப் போகிறதென்பதை உணர்ந்தான். தண்டனையிலிருந்து தப்பிக்க எங்கேயாவது போய் ஒளிந்து கொள்வது தான் சரியென்று கருதி புகைப்போக்கியினுள் அமர்ந்து கொண்டான்.



சிறிது நேரத்திற்கெல்லாம் வீடு திரும்பிய அம்மா வீட்டின் அலங்கோலத்தைப் பார்த்தாள். தலை கீழாகக் கவிழ்ந்து கிடந்த மேஜை, நாற்காலிகள், உடைந்த பீங்கான் பாத்திரங்கள், சிவப்பு நிறக் காலடிகள், பாதி கடித்துக்குதறிய கோழி இவற்றைப் பார்த்தவுடன் அவளுக்குக் கோபம் அதிகமாயிற்று.

'டென்னிஷ்' என்று கத்தினாள். திடீரென்று வித்தியாசமாக ஏதோ சத்தம் கேட்கவே சமையலறைக்குள் நுழைந்தாள். அங்கு மூச்சுத் திணறியபடி புகைபோக்கி வழியே கால்களை உதைத்துக் கொண்டிருந்த டென்னிஷைப் பார்த்து பயந்து போய் வெளியே இழுத்தாள். "நீ எங்கேயாவது ஒளிந்து கொண்டிருப்பாயென்று எதிர்பார்த்ததுதான்" என்று கூறியவள், "நான் வீட்டைச் சுத்தப் படுத்துவதற்குள் இந்தத் துணிச் சுருளைக் கொண்டு போய் கடை வீதியில் விற்று விட்டு வா" என்று அனுப்பினாள்.

கடை வீதிக்குச் சென்ற டென்னிஷிடம் அந்தத் துணிச் சுருள்களின் தரம், என்ன விலை என்று சில பெண்கள் விசாரித்தனர். குழப்பமடைந்த டென்னிஷ் அவர்களைப் பார்த்து "சரியான வாயாடிகள்" என்று சொல்லிவிட்டு நகர, மத்தியில் நிறுவப்பட்டிருந்த போர்வீரன் சிலையருகே சென்றான்.

சிலையை உண்மையான மனிதனென்று கருதி, "இந்தத் துணிகளை வாங்கிக் கொள்ள முடியுமா?" என்று கேட்டான். சிலையிடமிருந்து எந்தப் பதிலும் வராததால் அதனுடைய காலடியில் துணிகளை வைத்து விட்டு வீடு திரும்பினான்

டென்னிஷ்.

"அம்மா, அந்தத் துணிகளை ஒரு மனிதரிடம் கொடுத்து விட்டேன்"என்றான். "சரி, எவ்வளவு பணம் கொடுத்தார்?" என்று ஆவலுடன் அம்மா கேட்டாள். அப்போது தான் அவனுக்குப் பணம் வாங்காமல் வந்துவிட்டது உறைத்தது.

ஓடிச் சென்று சிலையருகே பார்த்தபோது துணிமூட்டை அங்கு இல்லை. "என்னுடைய அம்மா பணம் வாங்கி வரச் சொன்னாள்" என்று சிலையிடம் சொன்னான் டென்னிஷ். பதிலேதும் வராமல் போகவே மீண்டும் மீண்டும் கேட்டான். ஆத்திரமடைந்த டென்னிஷ் அதன் தலையை ஒரு தட்டுத் தட்டினான். ஆச்சரியப்படும் வகையில் அதனுடைய தலை கழன்று கீழே விழுந்தது. தலைக்குள்ளிருந்து தங்க நாணயங்கள் கீழே விழுந்து சிதறின. நாணயங்களைப் பொறுக்கிக் கொண்ட டென்னிஷ், தனக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைத்தான் அவர் இப்படி ஒளித்து வைத்திருக்கிறார் என்று நினைத்துக் கொண்டான். தலையைப் பழையபடி பொருத்தி விட்டு வீட்டுக்குச் சென்றான்.

''யார் இவ்வளவு பணத்தைக் கொடுத்தது?'' என்று கேட்டாள் அம்மா.

''அந்த நல்ல மனிதர்தான். பேசவே இல்லை. ஆனால் தன்னுடைய தலையில்தான் இந்தப் பணத்தை வைத்திருந்தார்"என்றான்.

"தோட்டத்திற்குச் சென்று காய் கறிகளைப் பறித்துவா'' என்று சொல்லி அவனை விரட்டினாள் அம்மா. தோட்டத்துக்குப் போகாமல் வீட்டு வாசலிலேயே அமர்ந்து கொண்டான் டென்னிஷ். அதைப் பார்த்ததும் இன்னும் கோபமடைந்த அம்மா, தன் கை அருகே சிறிய கூடையில் இருந்த உலர்ந்த திராட்சை, அத்திப் பழங்களைத் தூக்கி அவன் மீது எறிந்தாள். திடீரென்று மழைபோல உலர்ந்த பழங்கள் தன் மீது கொட்டுவதைப் பார்த்து ஆச்சரியமடைந்த டென்னிஷ், "அம்மா அம்மா" என்று கத்தினான். இதனால் மேலும் வெறுப்படைந்த அம்மா கதவை ஓங்கி அறைந்து சாத்தினாள்.

டென்னிஷ் ஓடிச்சென்று தனக்கேற்பட்ட அனுபவத்தை எதிர்பட்டவர்களிடம் சொன்னான். இவன் சொன்ன விஷயங்கள் கடைசியில் உள்ளூர் நீதிபதியிடம் சென்றடைந்தது. அவனைக் கூப்பிட்டு விசாரித்தார்.

"நான் கொடுத்த துணிச் சுருளுக்காக ஒரு நல்ல மனிதர்தான் தங்க நாணயங்களை எனக்குக் கொடுத்தார்" என்றான். "யார் அந்த நல்ல மனிதர்?" என்று கேட்டார் நீதிபதி!" எப்போது பார்த்தாலும் நகரத்து மத்தியில் ஒருவர் உட்கார்ந்து கொண்டிருக்கிறாரே, அவர்தான்" என்றான். "அது சிலை அல்லவா!" என்று சொன்ன நீதிபதி, "சரி, இந்தச் சம்பவம் எப்போது நடந்ததென்று உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

''அன்றொரு நாள் உலர்ந்த திராட்சைகளும் அத்திப் பழங்களும் மழை போல் கொட்டியதல்லவா? அன்றைய தினம்தான்" என்றான் டென்னிஷ்.

நீதிபதி குழம்பிப் போனார். "ஊரிலுள்ளவர்கள் எல்லாம் உன்னைக் குறும்பன்" என்று அழைப்பது சரிதான் என்று சொல்லி அவனை வெளியே போகச் சொன்னார். வீட்டிற்கு ஓடிவந்த டென்னிஷ் அம்மாவைக் கட்டியணைத்துக் கொண்டான். அவனுடைய குறும்புத்தனமே அவனைப் பெரிய விபரீதத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறது என்பதை உணர்ந்த அம்மாவும் அவனை மன்னித்து அன்புடன் அணைத்துக் கொண்டாள்!

முதன் முதலில்...



முதன் முதலில் இருபது ரூபாய் நோட்டு 1902ம் ஆண்டிலும், ஐம்பது ரூபாய் நோட்டு 1913ம் ஆண்டிலும் அச்சிடப்பட்டது.

— ஏ.எல்.ராவியா கனி,



சொல்லுங்கள் விடை என்ன?

I.

1. தாளம் இல்லாத ஆட்டம், இதை ஆடினால் வாழ்க்கையும் ஆகுமே தப்பாட்டம் - அது என்ன?

2. தன்னைத்தானே பலி கொடுப்பான், மற்றவர்களுக்கு ஒளி கொடுப்பான் - அவன் யார்?

3. திரியில்லாத விளக்கு, திரிலோகம் தெரியும் விளக்கு - அது என்ன?

4. எதைச் சொன்னாலும் அதை அப்படியே திருப்பிச் சொல்வான் - அவன் யார்?

- ரா. வினோத்குமார், காரைக்கால்

II.

1. ஆழமான குழிக்கு நீளமான வால்- அது என்ன?

2. உடம்பில்லாத மனிதன், ஊர் முழுவதும் சுற்றுவான் - அவன் யார்?

3. ஐந்து நதிக்கு ஒரே பாலம் - அது என்ன?

4. வாசலை வழி மறைக்கும் வெள்ளைக்காரன் - அவன் யார்?

5. சிவப்பு உடலழகி தலையில் தொப்பி அணிந்திருப்பாள் - அவள் யார்?

— வி. அபிநயா, எட்டாம் வகுப்பு, எஸ்.எச்.என். எத்தல் ஹார்வி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சாத்தூர்

III.

1. கூடிக் குலவையிட, ஆடி அசைந்து வர, தண்ணீர் மேலே சாமி, அது சதுராட்டம் போடுது - அது என்ன?

2. குள்ளக் கோழிக்குக் குடலுக்குள் சலங்கை - அது என்ன?

3. குண்டு சட்டியில் கெண்டை மீன் - அது என்ன?

4.காட்டில் இருப்பான்; வீட்டிலும் மணப்பான்; விலை உயர்ந்தவன் - அவன் யார்?

5. தாய் தரையில் கிடக்கிறாள்; மகள் தலையில் ஒளிர்கிறாள் - அவை என்ன?

- ஆர். ராஜலெட்சுமி, கரூர்.

IV.

வெள்ளைத்திடல்; கறுப்பு விதை - அது என்ன?

2. நித்தம் நித்தம் உழுவான்; பல் வரிசைக்காரன் - அவன் யார்?

3. கல்லுக்கும், முள்ளுக்கும் அஞ்சாதவன், பள்ள நீரைக் கண்டு பதறுகிறான் - அவன் யார்?

4. ஓர் ஆண்டு உயிர் வாழ்வான்; ஒயிலாகக் காட்சி தருவான் - அவன் யார்?

5. உடம்பெல்லாம் சிவப்பு நிறம், உச்சிக்குடுமி பச்சை நிறம் - அது என்ன?

— ஆர். பிரசன்ன, காந்தி கிராமம்

விடைகள்

I 1. சீட்டாட்டம், 2. மெழுகுவர்த்தி, 3. சூரியன், 4. எதிரொலி

II 1. கரண்டி, 2. புகை, 3. உள்ளங்கை 4. கோலம், 5. மிளகாய்

III 1. தெப்பம், 2. வேர்க்கடலை, 3. நாக்கு, 4. சந்தனக்கட்டை, 5. சிப்பி, முத்து

IV 1.புத்தகம், 2. சீப்பு, 3. செருப்பு, 4. காலண்டர், 5. தக்காளிப்பழம்.

யாருக்கு, எத்தவ



B


விள
பக்க

ளை ஐஸ் கிரீம் ?



C

டாக்டர் கு. கணேசன்



இதயத்தில் துளையுடன் பிறப்பது ஏன்?

● சரண்யா, பாலாஜி, தேவி ரவிச்சந்திரன், சென்னை - 92

? வைட்டமின்-பி சத்துகளான பிரிடாக்சின் மற்றும் பயாட்டின் எந்த உணவுகளில் எவ்வளவு உள்ளது? உணவுகளை வேகவைப்பதன் மூலம் இச்சத்துகள் அழிந்துவிடுமா?

! பிரிடாக்சின் மற்றும் பயாட்டின் சத்துகள் உள்ள முக்கிய உணவுகளையும் 100 கிராம் உணவில் இச்சத்துகளின் அளவுகளையும் கீழே பட்டியலிட்டுள்ளேன். தெரிந்து கொள்ளுங்கள். உணவுகளை வேகவைப்பதால் இச்சத்துகள் சிறிதளவு அழியலாம். என்றாலும், வேகவைத்த உணவிலும் நமக்குத் தேவையான அளவிற்குச் சத்துகள் இருக்கும். நாளொன்றுக்கு நமக்குத் தேவையான பிரிடாக்சின் அளவு 1 - 2 மி.கி. பயாட்டின் அளவு 200 - 300 மைக்ரோ கிராம்.

உணவுகள்	**பிரிடாக்சின்**	**பயாட்டின்**
கோதுமை, உமியுள்ள அரிசி	0.5 - 1 மி.கி.	50 - 150 மைக்ரோகிராம்
கல்லீரல், காளான்	"	"
முழு தானியங்கள்	0.3 - 0.5 மி.கி.	6 - 15 மைக்ரோகிராம்
எண்ணெய் வித்துகள், பருப்பு	0.3 - 0.5 மி.கி.	12 - 18 மைக்ரோகிராம்
கொண்டைக்கடலை	0.3 - 0.5 மி.கி.	50 - 150 மைக்ரோகிராம்
பால், இறைச்சி	0.3 - 0.4 மி.கி.	5 - 8 மைக்ரோகிராம்
முட்டை	0.3 - 0.4 மி.கி.	20 - 30 மைக்ரோகிராம்
சோயாபீன்ஸ்	0.8 - 1.0 மி.கி.	40 - 60 மைக்ரோகிராம்
உருளைக்கிழங்கு,காரட், பீட்ரூட்	0.1 - 0.3 மி.கி.	20 - 30 மைக்ரோகிராம்
முட்டைக்கோஸ்	"	"

● டி.என்.எஸ். கிருபாகரன், திருப்புலிவனம்


? சில குழந்தைகள் பிறக்கும்போதே இதயத்தில் துளையுடன் பிறப்பது ஏன்?

! நெருங்கிய உறவில் திருமணம் செய்தல், அம்மாவின் பரம்பரைக் கோளாறு, அம்மாவுக்கு அம்மை நோய்கள் ஏற்படுதல், அடிக்கடி எக்ஸ்-ரே எடுத்தல், சர்க்கரை நோய், சில மருந்துகளின் பக்க விளைவுகள் போன்ற காரணங்களால் குழந்தையின் இதய வளர்ச்சி பாதிக்கப்படும். குறிப்பாக இதயத்தை வலம், இடம் எனப் பிரிக்கும் இதயச் சுவரில் பிரச்னை ஏற்படும். இதனால் சில குழந்தைகளுக்குப் பிறக்கும்போதே இதயத்தில் துளை விழுந்துவிடும்.

● எம்.விநோத், சங்கரன்கோவில்

? வாக்மேனில் பாடல்களைச் சத்தமாக வைத்துக் கேட்டால் காது செவிடாகி விடுமா?

! பொதுவாக அதிக சத்தம் செவிப்பறையைப் பாதிக்கும் என்பதை நீ அறிந்திருப்பாய் விநோத்! மருத்துவ மொழியில் சொன்னால் ஒலியின் அதிர்வு அடர்த்தி 120 டெசிபலுக்கு மேல் அதிகமானால் அல்லது ஒலியின் அதிர்வலை 2000 ஹெர்ட்ஸுக்கு மேல் இருந்தால் அது செவிப்பறையைப் பாதிக்கும். காது செவிடாகிவிடும். வழக்கமாக வாக்மேனில் இந்த அளவுகளுக்குள் ஒலி பிறக்கும்படியாகவே அமைத்திருப்பார்கள். ஆகையால் வாக்மேனில் பாடல்களைச் சத்தமாக வைத்துக் கேட்டால் காது செவிடாகாது. என்றாலும் எந்தவொரு ஒலியையும் சத்தமாகவும் தொடர்ச்சியாகவும் கேட்டால் அது சிறிது சிறிதாக காதுகளைப் பாதிக்கவே செய்யும்.



● தி.சே. அறிவழகன், திருப்புலிவனம்

? உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் என்னென்ன உணவுகளை உண்ண வேண்டும்?

! உயர் ரத்த அழுத்தநோய்க்கு முதல் எதிரி சமையல் உப்பு. நாளொன்றுக்கு 5 கிராம் உப்பு போதுமானது. உணவில் உப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும். உப்பு நிறைந்த உணவுப் பொருள்களான ஊறுகாய், கருவாடு, அப்பளம், வடாம், சிப்ஸ், பாப்கார்ன், முந்திரிப் பருப்பு, புளித்த மோர் போன்றவற்றை முழுமையாகத் தவிர்க்க வேண்டும். உப்பை மிகக் குறைவாகப் பயன்படுத்தும் எஸ்கிமோக்களுக்கு இந்த நோய் அவ்வளவாக இல்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. கொழுப்புச்சத்து அதிகமுள்ள இறைச்சி, முட்டையின் மஞ்சள்கரு, தயிர், நெய், வெண்ணெய், பாலாடை, ஐஸ்கிரீம், சாஸ் மற்றும் சாக்லெட் ஆகியவற்றைத் தவிர்ப்பது நல்லது. காரமும் புளிப்பும் மிகுந்த உணவுகள், சோடா உப்பில் தயாரிக்கப்பட்ட உணவுகள் முதலியவற்றை ஒதுக்க வேண்டும். பூரி, அப்பளம், வடை, சமோசா, முறுக்கு, பஜ்ஜி, வறுவல் போன்ற எண்ணெய்யில் பொரித்த, வறுத்த, ஊறிய உணவுகள் வேண்டவே வேண்டாம். தேங்காய் எண்ணெய்யும் பாமாயிலும் ஆகவே ஆகாது. நல்லெண்ணெய், கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் ஆகியவற்றைக் கூட மிகக் குறைந்த அளவில்தான் உபயோகிக்க வேண்டும். நார்ச்சத்துள்ள உணவுகளைச் சாப்பிடுவதும் நல்லது. கோதுமை, கேழ்வரகு, சோளம் போன்ற முழு தானியங்கள், கொய்யா, தர்ப்பூசணி, மாதுளை போன்ற பழங்கள், பீன்ஸ், பட்டாணி போன்ற பயறுகள், புதினா, கொத்து மல்லி போன்ற பச்சை இலைகள் ஆகியவற்றில் நார்ச்சத்து அதிகம்.

புதிர் இங்கே! விடை கீழே!

1. உடலிலேயே அதிக வலுவுள்ள பகுதி எது?

அ. தொடை எலும்பு
ஆ. பல் எனாமல்
இ. கபால எலும்பு

2. பேஸ்மேக்கர் கருவி எதற்குப் பொருத்தப்படுகிறது?

அ. இரத்த ஓட்டத்தைச் சீராக்க
ஆ. இதயத்துடிப்பைச் சீராக்க
இ. மாரடைப்பைத் தடுக்க

3. தோலுக்கு நிறமளிக்கும் வேதிப் பொருள் எது?

அ. மெலனின்
ஆ. மெலனோசைட்
இ. ஹீமோகுளோபின்

4. 'மன இயலின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்?

அ. பிளாட்டோ
ஆ. ரோனால்டு ராஸ்
இ. சிக்மண்ட் பிராய்டு

5. கண்ணீரைச் சுரக்கும் சுரப்பிகள் எங்குள்ளன?

அ. விழிக்கோளத்தின் உள்ளே
ஆ. விழிக்கோளத்தின் வெளியே
இ. கன்னத்தில்

புதிர் விடை:
1. ஆ 2. ஆ 3. அ 4. இ 5. ஆ


விஞ்ஞானி கடத்தல்!
1 கதை, படம்:
முத்து
ரகு, ஜானு நான் ஒத்துக்கவே மாட்டேன். விடுமுறையைக் கழிக்கணும்னா வேற எங்காவது போங்க. உங்க தாத்தாவைப் பார்க்க, அந்தக் காட்டுக்குப் போகக் கூடாது.
அம்மா ப்ளீஸ். இந்த ஒருமுறை மட்டும்...
ஒரு ஐடியா! உங்க தாத்தாவை இங்கே வரவழைக்கலாமா?
வேண்டாம்ப்பா. அதுல ஒரு த்ரில்லே இருக்காது.
சரி. ஆகாஷை வரவழைப்போம். நீங்க மூணு பேரும் சமர்த்தா போயிட்டு வாங்க!


மறு நாள்
ஹையா! மாமா வந்தாச்சு.
ஹாய் ரகு, ஜானு! தயாராயிட்டீங்க போலிருக்கே!
ஆகாஷ், உன் வேலையெல்லாம் எப்படி போயிட்டிருக்கு?
ரொம்ப நல்லா போயிட்டிருக்கு. சாப்பாடு பிரமாதம்!
!
மூவரும் விமானத்தில் சென்றனர்.
மறுநாள் கிளம்பினர்.
கவனமாகப் போயிட்டு வாங்க.
கவலைப் படாதீங்க. பை...பை..
அடிக்கடி போன் பண்ணித் தகவல் தெரிவிக்கணும், சரியா?


ஜானு, உங்க தாத்தா ஏன் தனியா மலைப்பக்கம் ஒதுங்கிட்டார்?
அவரோட ஆராய்ச்சிக்கு நம்மால் இடைஞ்சல் வரக் கூடாதுன்னுதான்.
ஆமாம்!
அவர் இந்தியாவிலேயே பெரிய விஞ்ஞானியாச்சே!
ஹையா! தாத்தா வீடு தெரியுது பார் ரகு.
ஐயோ... என்ன பண்ணு வேன்?
என்னாச்சு மாமா? ஏன் பதறுறீங்க?
எஞ்சின்ல கோளாறு.


இப்ப என்ன பண்றது மாமா?
எப்படியாவது தரை இறங்கணும்.
இப்படி அந்தரத்திலேயே நம் கதை முடியப் போகுதா?
ரகு, அபசகுனமாய்ப் பேசாதே!
ம்... கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.
தொடரும்


மதிப்பு மிக்க

அலுமினியம் மிக எளிமையான உலோகம். எளியவர்களின் வீட்டில்தான் அதிகமாகக் காணப்படும். ஆனால் இதைப் பற்றிய சுவையான கதைகள் பல உண்டு. ரோமானிய சரித்திரப் பேராசிரியர் 'பிளினி', அலுமினியம் பற்றிய அருமையான கதையைக் குறிப்பிட்டுள்ளார். 'டிபிரியியஸ்' போல் என்ற ரோமானியச் சக்கரவர்த்தியைச் சந்திக்க வந்த ஒருவர், வெள்ளி போல் பளபளப்புடனும், ஆனால் இலேசாகவும் உள்ள உலோகக் கோப்பை ஒன்றைப் பரிசளித்து, ''மன்னா, இக் கோப்பையைக் களிமண்ணிலிருந்து பிரித்தெடுத்த உலோகத்திலிருந்து தயாரித்தேன்'' என்று கூறினார். அப்புதிய உலோகம், தம் அருகிலுள்ள தங்கம், வெள்ளியின் மதிப்பைக் குறைத்துவிடும் என்று பயந்தார் அரசர். அந்த அபாயகரமான உலோகத்தைத் தயாரிக்கும் எண்ணம்கூட யாருக்கும் வந்து விடக் கூடாது என்று எண்ணிய அரசர், பரிசளித்தவனைப் பாராட்டுவதற்குப் பதில், அவனின் தலையைச் சீவவும், அவனது ஆய்வகத்தை அழிக்கவும் ஆணையிட்டார்.


பல நூற்றாண்டுகள் வரை, அந்த உலோகம் பற்றிய பேச்சே எழவில்லை. பிலிப்பஸ் பாராஸெல்ஸஸ் என்பவர் அலுமினியத்தைக் கண்டுபிடித்தார். பாராஸெல்ஸஸ், படிகார மண்ணிலிருந்து, வித்தியாசமான உலோக ஆக்ஸைடைக் கண்டுபிடித்து, 'அலுமினா' எனப் பெயரிட்டார். ஆனால் இக் கனிமம் இதற்கு முன்பே, கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் ஹெரடோடஸ் என்பவரால், 'அலுமென்' என்ற தாது உப்பாகச் சாயமேற்றப் பயன்படுத்தப்பட்டதாம்!

கி.பி 8-9ம் நூற்றாண்டில், ரஷ்யர்கள்





சாயத் தொழிலில், மொராக்கோ ரகத் தோலைப் பதனிட இப் படிகாரத்தைப் பயன் படுத்தினர். 1754ல், ஜெர்மன் வேதியியலாளரான மார்க்கசாஃப், படிகாரத்தைத் தனிமைப்படுத்தியும்கூட, அதிலுள்ள உலோகத்தைப் பிரிக்க முடியவில்லை. 1807ல் ஹம்ப்ரி டேவி, மின்சாரம் மூலம் அலுமினாவைப் பிரிக்க முயன்று தோல்வியுற்றார். பின் ஸ்வீடன் நாட்டு பெர்ஸலியஸ் முயன்றும் முடியாமல் போனதால், யார் பிடியிலும் சிக்காமல் நழுவும் இதனை 'அலுமியம்' என்றழைத்தனர். 1827ல் வாஹ்வர், என்ற ஜெர்மனி விஞ்ஞானி, 'குண்டூசி' அளவிலான அலுமினியத் துகள்களைத் தயாரித்து, அதன் தயாரிப்பு முறையைக் கட்டுரையாக வெளியிட்டார். மக்கள் அலுமினியம் பற்றி அறிந்தனர்.




அலுமினியம்!

இந்தக் காலத்திற்குள் அலுமினியத்தின் புகழ் உலகம் முழுவதும் பரவியது. இது பூமியிலிருந்து மிகக் குறைவாகவே கிடைத்ததால், தங்கம், வெள்ளியைவிட அதிக மதிப்புள்ளதாகக் கருதப்பட்டது. எனவே சட்டையில் அலுமினியப் பொத்தான்களை அணிந்து கொண்ட சில ஐரோப்பிய மன்னர்கள் பெருமை பெற்றனர். அலுமினியத்தின் புகழ் வானளாவ உயர்ந்தது. அப்போது ஃபிரெஞ்சு சக்கரவர்த்தி, மூன்றாம் நெப்போலியன் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தார். அதில் உயர் பிரபுக்களுக்கும் ஒரு சில விருந்தினர்களுக்கும் மட்டும், உணவு உண்ண அலுமினிய கரண்டி வழங்கினார். அதே மேஜையில் உள்ள மற்ற விருந்தினர்களுக்குத் தங்க, வெள்ளி கரண்டிகள் வழங்கப்பட்டன. அப்போது அவர்கள் தங்களுக்கு அலுமினிய கரண்டி பெறும் பாக்கியம் இல்லையே என வருந்தினர்.

தங்கம், வெள்ளியைத் தலை குனியச் செய்த அலுமினியத்தின் வாழ்க்கையில், 1886ல் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. அமெரிக்க 'ஹால்' என்பவரும், ஃபிரெஞ்சு நாட்டு 'ஹெரால்டு' என்பவரும் மின்சாரம் மூலம் அலுமினியத்தைப் பிரித்து வெற்றி கண்டனர். இதற்கு நிறைய மின்சாரம் தேவைப்பட்டது. மின்சாரம் இன்றி அலுமினியத்தைப் பிரித்தெடுக்க முடியாதா? முடியும் என்பதற்குச் சீனர்கள் சான்றாய் விளங்கினர். கி.பி 3ம் நூற்றாண்டு சீனக் கல்லறை, சௌ சோவில் கிடைத்த ஆபரணங்களில் 85 சதம் அலுமினியக் கலப்பு இருந்தது. அந்தக் கால

கட்டத்தில் மின்சாரம் கண்டுபிடிக்கப்படவே இல்லை. 19ம் நூற்றாண்டின் இறுதியில்தான், ஆஸ்திரியாவைச் சேர்ந்த 'பேயர்' அலுமினியத்தைப் பிரித்தெடுத்தார். இன்றும்கூட பேயரின் முறையில்தான் அலுமினியம் பிரித்தெடுக்கப்படுகிறது.



பின்பு அலுமினியத்தின் மதிப்பு மடமடவென சரிந்தது. கி.பி 1854ல், 1 கிலோ அலுமினியத்தின் விலை 1200 ரூபிள்கள். 1898ல் 1 கிலோ அலுமினியத்தின் விலை 1 ரூபிள்தான்! நகைத் தயாரிப்பாளர்களுக்கு இதன் மேலிருந்த மோகம் குறைந்தது. தொழில் துறையினரின் பார்வை அலுமினியத்தின் மேல்பட்டது. இதன் எடை தாமிரத்தின் எடையில் 1/3 பங்குதான்! இதன் கனமற்ற தன்மையாலும், ரசாயன பாதிப்பு ஏற்படாத காரணத்தாலும் ஆகாய விமானம், மோட்டார் தயாரிக்கப் பயன்பட்டது. அலுமினியம் உறுதித் தன்மையற்றது.

அலுமினியத்தை உறுதியுடையதாக்க, ஜெர்மன் வேதியியல் வல்லுநர் வில்டு, அலுமினியத்துடன் தாமிரம், மக்னீஷியம், மாங்கனீஸ் கலந்து உறுதியான கலப்பு உலோகத்தைச் செய்தார். 1911ல் டூரான் நகரில் தயாரிக்கப்பட்ட அலுமினிய கலப்பு உலோகம் 'டூராலுமினியம்' எனப்பட்டது. 1919 முதல் அலுமினியத்தால் ஆகாய விமானம் செய்யப்பட்டது. இன்று விமான உற்பத்தியில் பெரும் பங்கு வகிப்பது அலுமினியம்தான். முதல் ரஷ்ய விண்வெளிக்கலம் அலுமினியத்தால் உருவாக்கப்பட்டது.

கடல் ஆராய்ச்சி, மின்சாதன தயாரிப்பு, போக்குவரத்து சாதன உற்பத்தி, அதிவேக ரயில் வண்டி உருவாக்கம் போன்றவற்றிற்கு அலுமினியம் பயன்படுகிறது. வைட்டமின்களை அழியாமல் பாதுகாக்கிறது. வெண்ணெய், சர்க்கரை சுத்திகரிப்பு, மிட்டாய், இனிப்புக்கான உபகரணங்கள் அலுமினியத்தால் தயாரிக்கப்படுகின்றன. அலுமினியப் பூச்சு கொண்ட ஆடைகள், தடுப்புத் திரைகள் குளிர்ச்சிக்கும், கதகதப்புக்கும் பயன்படுகின்றன. மழைக் கோட்டுகளின் உட்பக்கம் அலுமினியப் பூச்சு தரப்படுகிறது. அலுமினிய உற்பத்தியில் முதலிடம் அமெரிக்காவுக்கே! விவசாயம், உர உற்பத்தி, குடிநீரைச் சுத்தப்படுத்த, காகிதம், பெயிண்ட் மற்றும் வெடிமருந்து உற்பத்தியில் அலுமினியத்தின் பங்கு அதிகம்! தீபாவளியின்போது நீங்கள் வெடித்து மகிழும் பட்டாசிலும் அலுமினியம் உள்ளது.

- எஸ். மோகனா,
பழநி

சந்திரன்



நேரம் வரும் காத்திரு!

4. ராகவ்க்குப் பிரச்னை!

நாளை பொற்கேணி பள்ளிக்கூட ஆண்டு விழா. அதனால் மாணவர்கள் ஏக சந்தோஷத்தில் இருந்தனர். பிரின்ஸ்பல் அறை அதைவிட பரபரப்பில் இருந்தது. இன்று மாலைக்குள் மாணவர்களுக்கான போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் முடித்து விடச் சொல்லி உத்தரவிட்டிருந்தார் கரஸ்பாண்டண்ட். ஆண்டு விழா தினத்தன்று வெறும் பரிசளிப்பு சடங்கோடு முடித்துவிட ஆலோசனை சொல்லியிருந்தார் எஸ்.பி. 'பள்ளி ஆண்டு விழாவில் வேலையைக் காட்றேன், காத்திரு' என்று வந்த தொலைபேசி தகவலால் செய்யப்பட்ட மாற்று ஏற்பாடு இது.

அந்த நேரத்தில் பள்ளியின் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபிஸர் வேகமாக பிரின்ஸ்பல் அறைக்குள் நுழைந்தார்.

''சார்... உங்க பேரு போட்டு ஒரு லெட்டர் வந்திருக்கு. கவர் மேல 'மண்டை ஓடு டேன்ஜர்' படம் வரைஞ்சிருக்கு சார்! அதான் உடனே கொண்டு வந்தேன்'' என்று அவரிடம் நீட்டினார்.

பிரின்ஸ்பல் ஒரு நொடி அதிர்ந்து போனாலும் சுதாரித்துக் கொண்டு, ''என் பேரு போட்டுல்ல வந்திருக்கு! ஸ்கூல் பேர்ல இல்லையே! அப்ப பிரச்னையில்லை கொண்டாங்க! நம்ம பசங்களோட விளையாட்டாதான் இருக்கும். நான் பார்த்துக்கறேன். நீங்க போய் வைஸ் பிரின்ஸியை வரச் சொன்னேன்னு சொல்லுங்க! போட்டிகளெல்லாம் என்ன ஸ்டேஜில இருக்குன்னு பார்க்கணும்!'' என்று நிதானமாகச் சொன்னார்.

சிகிச்சை முடிந்து வீடு திரும்பியிருந்த அருண், அவனது அம்மாவுடன் வாதத்தில் இருந்தான்.

''நாளைக்கு எங்க ஸ்கூல் 'ஆனுவல் டே' ஃபங்ஷன். எப்படியும் நான் போய்தான் ஆகணும். அப்பா வரட்டும். நான் அவர்கிட்ட பேசிக்கறேன்'' என்று அம்மாவிடம் அடம் பிடித்தான் அருண்.

''ஆனுவல் டேல நீ என்னடா பண்ணப் போறே? இப்பதான் கால் சரியாகி ஒழுங்கா நடக்கற! இன்னைக்குப் போனாலும், அடுத்து ஸ்டடி ஹாலிடேன்னு பத்து நாள் லீவ்தானே! திரும்ப இங்கதானே வரப் போற! ஒரு நாளுக்காக அப்படி எதுக்குப் போகணும்?'' என்றாள் யாமினி.

''அதுக்கில்லக்கா! ராகவ் இந்த வருஷம் நிறைய காம்பட்டிஷன்ல ஜெயிச்சிருக்கான். அவன் மேடையேறி பிரைஸ் வாங்கப் போறான். அதனால நானும் அங்க இருக்கணும்'' - அருண்.

''அவன் பிரைஸ் வாங்கப் போறது உனக்கு எப்படி தெரியும்?'' - யாமினி.

''பத்து நிமிடம் முன்னாடிதான் அந்த வாலு ஃபோன் பண்ணான்!'' என்றார் அம்மா.

''பத்து நிமிஷம் முன்னாடின்னா... எப்படி? அவங்க ஸ்கூல்ல நைட்ல மட்டும்தானே ஃபோன் பண்ண பர்மிஷன் கொடுப்பாங்க! இந்த நேரத்துல எப்படி பேசறான்?'' என்றாள் யாமினி.

''அவனும்தான் ஒரு செல்ஃபோன் வைச்சிருக்கானாம். இவனும், வில்சனும் தவிர மத்த இரண்டு பேர்கிட்டயும் செல்ஃபோன் இருந்திருக்கும் போல! ராகவ் அப்பாகிட்ட சொல்லி அதையும் வாங்கிட்டு வரச்



சொல்லிடணும். இவனுங்க நாலு பேரும் கெடறதே அவங்க அப்பாக்களாலதான்" எனப் புலம்பித் தீர்த்தார் அருணின் அம்மா.

"சபாஷ் மாப்பிள்ளை...! எல்லாம் நினைச்சபடியே நடக்குது போலிருக்கே!"

"அப்படித்தான். எப்படா பழி வாங்கலாமுன்னு நேரம் பார்த்துட்டே இருந்த எனக்கு, இந்த மாதிரி தானா ஒரு நிகழ்ச்சி நடக்கும்ன்னு கொஞ்சம்கூட எதிர்பார்க்கலே! இந்நேரம் அந்த லெட்டரைப் பிரிச்சிப் பார்த்திருப்பாங்க! பள்ளிக்கூட ஆண்டு விழா அன்னைக்கு ஹாஸ்டல்ல குண்டு வெடிக்கும்ன்ற தகவல் அவங்க வயித்துல புளியைக் கரைச்சிருக்கும். எப்படியும் போலீஸுக்குப் போவாங்கன்னுதான் தோணுது. போலீஸ் இதை எப்படி அப்ரோச் பண்ணப் போறாங்களோன்னுதான் புரியல."



"என்ன நடக்குதுன்னு பார்ப்போம்! மதியம் ஸ்கூலுக்குப் போறேதானே? நேரத்துக்குப் போயிடு! அப்பதான் அங்க என்ன நடக்குதுன்னு பார்க்க முடியும். அதுக்கு ஏத்த மாதிரி நடந்துக்கலாம். அது சரி! போகாட்டியும் பிரச்னை இல்லை. அந்த ஸ்கூல்ல இருந்துட்டே, நீ நினைச்சபடி நடக்கலைன்னு அவங்களைப் பழி வாங்க இந்த மாதிரி சான்ஸ்ல்லாம் கிடைக்குதே!"

"எனக்குக் கிடைக்க வேண்டிய இடத்தை இவங்க எனக்குக் கொடுக்கலைன்னு தானே கோபமே! அதனாலதானே இந்த ஸ்கூலுக்கு எதிராவும், எனக்குக் கிடைக்க வேண்டிய சான்ஸ்ஸைக் கெடுத்தவன் இங்கிருந்து போயிட்டான்னு அவன் சொந்தக்காரனுக்கும் குறி வைக்கிறேன்."

"சரிப்பா, சொந்தக்காரன் என்ன பண்ணான் உன்னை? "

"அப்படியில்லை இந்த விஷயம். இவனை அடிச்சா அவனுக்கு வலிக்கும். அவனோட அக்கா பையன்தான் இவன்."

"என்னமோ போ! நல்லபடியா நீ மாட்டிக்காத மாதிரி முடிஞ்சா சரி! நேரத்துக்கு ஸ்கூலுக்குப் போய் சேரு! அடுத்த முறை பார்க்கும்போது மத்ததைப் பேசலாம்!"

மாலை 6 மணி.

வைஸ் பிரின்ஸ்பல் தன் காரில் வந்து ஹாஸ்டலில் இறங்க, பின்னாலேயே போலீஸ் ஜீப் ஒன்று வந்து நின்றது. வைஸ் பிரின்ஸி காரிலிருந்து இறங்கி, வேகமாக ஹாஸ்டல் ஆபிஸுக்குள் நுழைய, போலீஸ் ஜீப்புக்குப் பின்னால் இன்னொரு வேனும் வந்து நின்றது. அங்கிருந்த வாட்ச்மேனுக்கு ஒன்றும் புரியவில்லை. பரபரப்பு அதிகமானது.

வேனில் இருந்து இறங்கிய சிலர் போலீஸ் உடையில் இல்லை என்றாலும் போலீஸ்காரர்கள் என்பது தெரிந்தது. சில பெட்டிகளை இறக்கினார்கள். அதற்குள் வைஸ் பிரின்ஸியுடன் உள்ளே நுழைந்த அதிகாரிகள் சிலர் சிறிது நேரத்தில் திரும்ப வெளியே வந்து, இறங்கி

● பாம்பால் இசையைக் கேட்க முடியாது!

நின்ற போலீஸ்காரர்களைப் பார்த்து கத்தினர்.

"உங்களை யாருய்யா கீழே இறங்கச் சொன்னது? ஏறி வண்டிக்குள்ளயே உட்காருங்க! கூப்பிடற போது இறங்கி வந்து சொல்றதைச் செய்தால் போதும். மாணிக்கம்... நீங்க போய் அங்கேயேயிருந்து பார்த்துக்குங்க! இது பசங்க படிக்கற ஸ்கூல்! அதுவும் ரெஸிடென்ஷியல் ஸ்கூல். இங்க எப்படி நடந்துக்கணும் பார்த்துக்குங்க! ஏதாவது பிரச்னையாயிடுச்சுன்னா, அவ்வளவுதான். பத்திரிகைங்க நாறடிச்சிடுவாங்க! எஸ்.பி.யும் நம்மை சும்மா விட மாட்டார்!"

"ஓகே சார்!" என்று படியிறங்கி நடந்தார் போலீஸ் அதிகாரி மாணிக்கம்.

"நான் சொல்லும்போது இறங்கி உள்ளே வாங்க! ஒவ்வொரு ரூமா போய் எல்லாத்தையும் செக் பண்ணணும். உங்ககூட டியூட்டர் மட்டும்தான் வருவாங்க. பீ கேர்ஃபுல்! நம்ம ஆளுங்களையும் ஜாக்கிரதையா பார்த்துக்குங்க!"

"ஓகே சார்" - மாணிக்கம்.

ஃபோனில் வந்த மிரட்டல்... தபாலில் வந்த வெடிகுண்டு புரளி... என்ற பாதிப்பு எதுவும் இல்லாமல் பள்ளிக்கூட ஆண்டு விழா நல்ல படியாக நடந்து முடிந்ததில் கரஸ்பாண்டண்ட் முதல் வைஸ் பிரின்ஸி வரை எல்லாருக்கும் மகிழ்ச்சி. ஆனால் வெடிகுண்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கிறதாவென ஹாஸ்டல் மாணவர்களது பெட்டிகளைச் சோதித்தபோது ராகவ் பெட்டியில் செல்ஃபோன் ஒன்று இருந்த தகவல் கரஸ்பாண்டண்டை அப்செட் ஆக்கியது. "ரெஸிடென்ஷியல் டியூட்டர்களுக்குக்கூட அது பற்றித் தெரியவில்லை என்பதை நம்பமுடியவில்லை" என்று சத்தம் போட்டுவிட்டுப் போனார்.

மாணவர்களுக்கு ஸ்டடி ஹாலிடே அறிவித்திருந்தாலும் ராகவுக்கு மட்டும் விசாரணை நடந்தது. ரொம்ப முற்போக்கான இந்த கரஸ்பாண்டண்ட் சர்வ சாதாரணமாகிவிட்ட செல்ஃபோனுக்கு இந்த அளவு முக்கியத்துவம் கொடுத்தது ஆசிரியர்களுக்கே அதிர்ச்சியாக இருப்பதாகப் பேசிக்கொண்டார்கள்.

இரண்டு மணி நேரமாக நடந்த விசாரணை முடிவு கரஸ்பாண்டண்டுக்குத் தெரிவிக்கப்பட்டு அவரது பதிலுக்காகக் காத்திருந்தனர்.

அப்போது, அங்கே வந்தார் சதாசிவம். கரீமின் தந்தை சொல்லியனுப்பியது நினைவுக்கு வர, ராகவ்வின் அப்பா



சதாசிவத்திடம் உதவி செய்யும்படி கோரிக்கை வைத்தார். 'பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு பிரின்ஸ்பல் அறைக்குள் நுழைந்தார் சதாசிவம்.


அறைக்குள் -

"கரஸ் ரொம்ப கோபமாயிருந்தார் சதாசிவம். பையன் ரொம்ப சூட்டிக்கையானவன் அப்படின்னுல்லாம் எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன். அவர் கேட்க மாட்டேங்கறாரு! அவனுக்கு டி.சி கொடுத்து, வேற எங்கேயாவது அனுப்பிடுங்கன்னு விரட்டறதுலயே குறியாயிருக்காரு! ராகவ்வோட அப்பா

● சுறாவுக்கு மோப்ப சக்தி அதிகம்.

பாவம். ரொம்ப ரெக்வெஸ்ட் பண்றார்! அவர் கிட்ட போயி 'முடியாது'ன்னு சொல்லவே எனக்குக் கஷ்டமாயிருக்கு! ஒண்ணு பண்ணுங்களேன். நீங்களே அவர்கிட்ட விஷயத்தைச் சொல்லிடுங்க! இந்த வருஷம் மட்டும்... அதுவும் இந்த ஸ்டடி ஹாலிடே முடிஞ்சி வந்தா நடக்கற ஆனுவல் எக்ஸாம் வரைக்கும் முடிச்சிட்டு அவன் வேற ஸ்கூல் போக வேண்டியதுதான்னு உறுதியா சொல்லிட்டாரு!'' என்றார் பிரின்ஸி.

''ஒகே, சொல்லிடறேன் சார்! நீங்க மட்டும் என்ன சார் பண்ண முடியும்? பேசித்தான் பார்த்திருக்கீங்க! ஆனா, கரஸ் சொல்றதுலயும், ஒரு பாயிண்ட் இருக்கு சார். இந்த மாதிரி நடவடிக்கை எடுக்கலைன்னா ஒரு தவறான முன் மாதிரி போலாயிடும்ன்னு நினைக்கறாரு போல! அதுவும் சரிதானே! நாளைக்கு இன்னொரு தப்பு பண்ணிட்டு வர, பையனோட அப்பாவும் இதே மாதிரி மன்னிப்பு கேட்டா அவனையும் தண்டிக்காமல் இருக்க முடியுமா? வெளியிலே அனுப்பாம இருக்க முடியுமா? அதனாலதான் இந்த முடிவுக்கு வந்திருக்கார் சார்!''



''சதாசிவம், பையனுக்குச் சாதகமா ஏதாவது பேசுவேன்னு பார்த்தா கரஸ் சார்பா பேசறே! போய்யா, இதோட இந்தப் பேச்சை விட்டுட்டு ராகவ் ஃபாதரைப் பார்த்து, பக்குவமா விஷயத்தைச் சொல்லி, கன்வின்ஸ் பண்ணி அனுப்பி வைப்பா!''

''ஒகே சார்! சொல்லிடறேன். உங்களால முடிஞ்சா நீங்க செய்யாம இருப்பீங்களா! ஒரு கட்டத்துக்கு மேல, கரஸை மீறி உங்களால மட்டும் என்னதான் சார் பண்ண முடியும்? நீங்க கவலைப்படாதீங்க! நான் அவரை கன்வின்ஸ் பண்ணி அனுப்பி வைக்கறேன்'' என்று வெளியே வந்தார் சதாசிவம்.

ரொம்ப கவலை தோய்ந்த முகத்துடன் ராகவ்வின் அப்பாவை நெருங்கினார்.

''என்ன சார்! பிரின்ஸி என்னதான் சொல்றார்?'' என்றார் ராகவ்வின் அப்பா.

''விடுங்க சார்! அவர் என்ன சொல்வார்? நான் கையாலாகாதவன்னு சொல்லாம சொல்றார். இந்த ஸ்கூலுக்குப் போய்... கவலைப்பட்டுட்டு...! எல்லாம் நன்றி கெட்டவங்க சார்! பிரின்ஸ்பல் உங்களைப் பார்க்க விரும்பலையாம். இந்த வருஷம் ஆனுவல் எக்ஸாம் வரைக்கும் இங்கேயே முடிச்சிட்டுப் போகவாவது அனுமதி கொடுங்கன்னு ரொம்ப ரெக்வெஸ்ட் பண்ணிட்டேன்.

''இதில்லாட்டி இன்னொரு ஸ்கூல்! விடுங்க சார்! அதுவும் ராகவ் மாதிரி படிக்கற பசங்க, துடிப்பான பசங்களுக்கு இடம் கிடைக்கறதா பிரச்னை! ஈஸியா கிடைக்கும். ஒருவேளை அதுல எதுவும் பிரச்னைன்னா சொல்லுங்க! நான் என் ஃபிரண்ட்ஸ்கிட்டச் சொல்லி ஹெல்ப் பண்றேன். அதோட இவங்க அங்கிள்கிட்ட சொன்னாலே போதுமே! அவரே சீட் வாங்கிக் கொடுத்துடுவாரே!

''கரீமோட அப்பா என்னை வந்து பார்த்தபோதே இவன் கிட்டயும் போன் இருக்கறதைச் சொல்லியிருந்தால், அப்பவே இதையும் வாங்கிட்டுப் போங்கன்னு சொல்லியிருப்பேன். அப்புறம்தான் இவங்க என் கிட்ட பேசினதுல நானே புரிஞ்சிகிட்டேன். அதை வாங்கிடணும்ன்னு யோசிச்சிட்டு இருந்தபோதே எல்லாம் மின்னல் மாதிரி நடந்து முடிஞ்சி போச்சு! பார்த்துக்கலாம் வாங்க சார்! இப்போதைக்கு இங்கிருந்து போகலாம்!'' என்று அவரை அழைத்துக் கொண்டு நகர்ந்தார்.

(தொடரும்)

போட்டி

1000/- ரூபாய் பரிசு!

உங்களுக்கு மிகவும் பிடித்த இந்தப் பரிசுப் போட்டியில் நிறையப் பேர் பரிசு வாங்கி வருகின்றனர். பரிசு கிடைக்காதவர்கள் தன்னம்பிக்கையுடன் இந்த மாதப் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியது:

- உங்கள் பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் கண்டிப்பாக இருக்க வேண்டும்.
- பள்ளி, வீட்டு முகவரிகளைக் குறிப்பிட வேண்டும்.
- சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுதி அனுப்ப வேண்டும்.

மொத்தப் பரிசு ரூ.1000/- சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி 20.05.2003




இந்த மாதப் போட்டி

பொருத்துக:

1. கிரிக்கெட் மட்டை	ஜார்ஜ் வாஷிங்டன்
2. இராக்	ஹோமே சேப்பியன்
3. அமெரிக்காவின் தந்தை	நீளமான நாள்
4 மனிதன்	மாயா
5. வீனஸ்	வில்லோ மரம்
6. புத்தரின் அம்மா	பாக்தாத்

ஆசிரியர்,
கோகுலம்,
47-N.P. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97



7. பார்க்கப் பச்சை, பழுத்தால் சிவப்பு, பல்லிலே பட்டால் கண்ணிலே நீர் - அது என்ன?

8 மேலே உள்ள படத்தில் இருப்பது யார்?


இடமிருந்து வலம்

1. இந்த இசைக்கருவிக்கு இரண்டு பக்கமும் இடி (5)
5. நில், ______, செல் (3)
10. இந்த விளையாட்டால் தருமர் அனைத்தும் இழந்தார் (3)
13. கொடியில் காய்க்கும் காய் (3)

வலமிருந்து இடம்

2. உயிர்களிடத்தில் ______ செய் (3)
4. திருவிளையாடலில் வரும் ஏழைப்புலவன் (3)
9. குரங்கை இப்படியும் அழைக்கலாம் (3)
14. ______ ஏறி மேல்தளத்துக்குச் செல்ல வேண்டும் (5)

குறுக்கெழுத்துப் புதிர்



மேலிருந்து கீழ்


1. இதைக் கையில் வைத்தால் சிவக்கும் (4)
2. மத்திய உள்துறை அமைச்சர் (4)
3. மதுரை வீரன் ______ (2)
6. மீன் பிடிக்க ______ தேவை (2)
9. தலைவலியா, ஒரு ______ போடு (4)
10. பல் துலக்க இது அவசியம் (4)


கீழிருந்து மேல்

4. தரத்தில் குறையாத உலோகம் (4)
5. ______ தின்னக் கூலியா? (4)
7. மரத்தை இப்படியும் அழைக்கலாம் (2)
8. சாக்லேட் நல்ல ______ (2)
11. ______ சக்கரவர்த்தி கம்பன் (2)
12. மானம் காக்க ______ தேவை (2)
13. முக்கியமானவர்களைக் காண முன் ______ வாங்க வேண்டும் (4)
14. சென்னை ஒரு ______ (4)

- டி. துர்கா, எட்டாம் வகுப்பு,
கேந்திரிய வித்யாலயா,
அரக்கோணம்.

விடை 64 ஆம் பக்கம்





கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், படக்கதைகள் மட்டுமா? நகைச்சுவைக் கதைகள், புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

என். கோதண்டம்



விஜயமாலிகாவின் சுயம்வரம்!

வேங்கி நாடே விழாக் கோலம் பூண்டிருந்தது. வேங்கி நாட்டு இளவரசி விஜயமாலிகாவிற்குத் திருமணம். அனைத்து நாட்டு இள வரசர்களும் சுயம்வர மண்டபத்தினுள் கூடியிருந்தனர்.

குறிப்பிட்ட நேரத்தில் மங்கள வாத்தியங்கள் முழங்க உப்பரிகை யிலிருந்து இளவரசி விஜயமாலிகா ஒரு தேவதை போல சுயம்வர மண்டபத்தினுள் நுழைந்தாள். விஜயமாலிகாவின் அழகைக் கண்ட இளவரசர்கள் கண் மூட மறந்தனர்.

இளவரசர்கள் எதிர்பார்த்தது போல் விஜயமாலிகா கையில் மண மாலையுடன் வரவில்லை.

இளவரசர்களுக்கு நடுவில் போடப்பட்டிருந்த தங்க சிம்மாசனத்தில் அமர்ந்தாள்.

பின்னர் பேச ஆரம்பித்தாள்: "எனது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய வேற்று நாட்டு இளவரசர்களே, உங்களுக்கு எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


"நான் மாலையோடு வந்து உங்கள் யாருக்காவது மணமாலை சூடி மணமகனைத் தேர்ந்தெடுப்பேன் என நினைத்திருப்பீர்கள். இங்கு வந் திருக்கும் நீங்கள் எல்லாம் மற்போரிலும் விற்போரிலும் பராக்கிரம முடையவர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் உங்களில் திறமைசாலியான, புத்திக்கூர்மையுள்ள ஒருவரையே நான் மணமகனாக ஏற்க ஆசைப்படுகிறேன்.

"அதற்காக ஒரு போட்டியை நான் அறிவிக்கிறேன். அந்தப் போட்டியில்

வெற்றி பெறும் இளவரசர் யாராக இருந்தாலும் எனக்கு மாலை சூடலாம்'' என்றாள்

இளவரசர்கள் ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை.

இளவரசி ''இந்த வேங்கி நாட்டின் எல்லையாகக் கடற்பகுதி உள்ளது. அந்தக் கடலைத் தாண்டிச் சென்றால் பல மலைகள் உள்ள நிலப்பரப்பு உள்ளது. அங்குள்ள மலைகளில் ஒரு மலை மட்டும் தனிச்சிறப்பு வாய்ந்தது. அது என்ன என்பதைத் தெரிந்து வந்து முதலில் சொல்பவரே என்னைத் திருமணம் செய்து கொள்ளலாம். போட்டிக்கு ஒரு மாதம் அவகாசம் தருகிறேன். போட்டியில் வெற்றி பெற்றவர் அரண்மனை ஆராய்ச்சி மணியை அடித்து தகவல் கூறலாம்'' என்றாள்.



இளவரசர்கள் அனைவரும் அந்த நிமிடமே கடற்கரையை நோக்கி குதிரைகளிலும் சாரட் வண்டிகளிலும் விரைந்தனர்.

கடற்கரை செல்லும் வழியிலே ஆமை ஒன்று சாலை ஓரம் மல்லாந்த நிலையில் கிடந்தது.

இளவரசர்களைப் பார்த்து ''ஐயா என்னைக் காப்பாற்றுங்கள். உங்களுக்கு வேண்டிய உதவியை நான் செய்கிறேன்'' என்று கெஞ்சியது. ஒருவரும் திரும்பிப் பார்க்கவில்லை. கடைசியாக சாரட் வண்டியில் கடற்கரை நோக்கி வந்தவன் இளவரசன் செண்பக பாண்டியன். அவனையும் ஆமை தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சியது.

செண்பக பாண்டியன் சாரட்டை நிறுத்தி இறங்கி ஆமையிடம் சென்றான். ''ஏன் இப்படி போவோர் வருவோரைத் தொந்தரவு செய்கிறாய்?'' என்றான்.

''இளவரசே! நான் கடலில் வாழும் ஆமைகளின் அரசன். மீனவன் கடலில் விரித்த வலையில் நான் சிக்கி விட்டேன். மீனவன் மீனோடு சேர்த்து என்னையும் வியாபாரியிடம் விற்று விட்டான். வியாபாரி கடற்கரையிலிருந்து நகருக்கு வண்டியில் செல்லும்போது நான் வண்டியிலிருந்து தவறி விழுந்து விட்டேன். நீங்கள் என்னைக் கடலில் சேர்த்து விட்டால் நான் உங்களுக்கு வேண்டிய உதவி செய்கிறேன்'' என்று கெஞ்சியது.

இளவரசன் ஆமையை சாரட்டில் ஏற்றிக் கொண்டு கடற்கரை நோக்கிச் சென்றான்.

மற்ற இளவரசர்கள் கப்பலில் விரைந்தனர்.

ஆமை, இளவரசன் செண்பக பாண்டியனை நோக்கி ''இளவரசே, நீங்கள் எங்கு செல்ல வேண்டும் சொல்லுங்கள், நான் உதவி செய்கிறேன்'' என்றது.

செண்பக பாண்டியன் ''ஆமையாரே, நான் இந்தக் கடலைக் கடந்து மறுபகுதிக்குச் செல்ல வேண்டும்'' என்றான்.

''அப்படியா! என் மீது ஏறி அமருங்கள். நான் உங்களை அவ்விடம் சேர்த்து விடுகிறேன்'' என்று சந்தோஷமாகக் கூறியது.

இளவரசன் ஆமை மீது ஏறி அமர்ந்து கண்மூடி கண் திறப்பதற்குள் கடலின் மறு கரையில் இருந்தான். ஆமை

யும் "இளவரசே உங்களுக்கு நான் மீண்டும் தேவைப்பட்டால் நீங்கள் இதே இடத்தில் நின்று என்னை நினைத்தால் போதும். உங்களை மீண்டும் மறுகரையில் கொண்டு விடுகிறேன்" எனக் கூறி மறைந்தது.

கப்பலில் வந்த இளவரசர்கள் பலர் கடற்கரை மணலில் குதித்து செண்பக பாண்டியனைத் தாண்டிக் கொண்டு வேகமாக ஓடினர்.

வழியில் ஒரு கழுகு உடலெல்லாம் ரத்தம் சொட்டச் சொட்ட விழுந்து கிடந்தது. போகும் இளவரசர்களைப் பார்த்து. "ஐயா, என்னைக் காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங் கள்" என்று கதறியது. எந்த இளவரசனும் கழுகைத் திரும்பிக் கூட பார்க்கவில்லை.

இளவரசன் செண்பக பாண்டியனையும் கழுகு வழி மறித்து "ஐயா, என்னைக் காப்பாற்றுங்கள்" என்றது.

செண்பக பாண்டியனும் "கழுகே! உன்னை நான் எந்த முறையில் காப்பாற்ற வேண்டும், கூறு" என்றான்.

கழுகு "இங்கிருந்து ஒரு காத தூரத்தில் ஒரு மாமரம் உள்ளது. அந்த மரம் நிறைய மாம்பழங்கள் உள்ளன. ஆனால் அவற்றில் ஒரு மாம்பழம் மட்டுமே மரத்தில் காய்த்த பழம். மற்றவை பொய்ப் பழங்கள். நீங்கள் உண்மையான பழத்தைக் கண்டுபிடித்து பறித்து வந்து எனது உடலில் மாம்பழச் சாற்றை தடவி எனக்கும் புசிக்கக் கொடுத்தால் எனது காயம் குணமாகும்."

"தவறுதலாக நீங்கள் பொய்ப்பழத்தில் கை வைத்தால் மரம் மறைந்து விடும். நீங்களும் கல்லாகி விடுவீர்கள். சென்று வெற்றி யோடு வாருங்கள்" என்று எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தது கழுகு.

செண்பக பாண்டியன் மாமரத்தை நோக்கி விரைந்தான்.

மரத்தின் அருகில் சென்றவன் மரத்தை ஒருமுறை உற்றுப் பார்த்த வண்ணம் சுற்றி வந்தான். மாம்பழங்கள் அனைத்தும் ஒரே மாதிரி பழங்களாகக் காட்சியளித்தன.

ஒரு பழத்தில் மட்டும் வித்தியாசத்தைக் கண்டுபிடித்து விட்டான். அந்தப் பழத்தின் காம்பிலிருந்து பால் வடிந்திருந்தது.


மாம்பழத்தோடு வெற்றிகரமாகத் திரும்பிய செண்பக பாண்டியன் பழச்சாற்றைக் கழுகின் மீது தடவி வாயிலும் பிழிந்தான். அடுத்த நிமிடமே கழுகு ராட்சத கழுகாக உரு மாறியது. "இளவரசே, என் உயிரை உங்கள் புத்திக் கூர்மையால் காப்பாற்றினீர்கள். உங்களுக்கு என்ன உதவி வேண்டும்?" என்றது.

செண்பக பாண்டியனும் "கழுகே, இப் பகுதியில் ஏதோ அற்புத மலை இருக்கிறதாமே! நான் அங்கு செல்ல நீ உதவி செய்ய வேண்டும். அந்த மலையைப் பற்றி உனக்கு ஏதாவது தெரிந்தால் கூறு" என்றான்.

கழகு உடனே "அது ஒரு வழுக்குப் பாறை மலை. அந்த மலையில் யாருமே ஏற முடியாது. பலர் மலை மீது ஏற முயற்சி செய்து விழுந்து இறந்துள்ளனர். மலையின் மீது கோவில் ஒன்று உள்ளது. பௌர்ணமி தினத்தன்று மட்டும் அந்தக் கோயில் தங்கநிறமாக ஜொலிக்கும். கோயில் முழுவதும் அகல்விளக்கு எரியும். மற்றபடி உள்ளே என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியாது. இன்றும் பௌர்ணமி தான். நீங்கள் என் மீது அமருங்கள். நான் உங்களை மலை உச்சியில் விட்டு விடுகிறேன். உங்கள் வேலை முடிந்ததும் என்னை நினைத்து அழைத்தால் நான் வந்து உங்களை அழைத்து வந்து விடுகிறேன்" என்றது.

செண்பக பாண்டியன் கழுகின் மீது அமர கழுகு மலை உச்சியை நோக்கிப் பறந்தது.

பௌர்ணமி நிலவு கடலிலிருந்து மேலே உயர்ந்து கொண்டே வந்தது. வழுக்குப் பாறை மலை மீதிருந்த கோயில் தங்க நிறமாக ஒளி





கறுப்பான பொருள்கள் வெப்பத்தினை எளிதில் கிரகிக்கும் தன்மை கொண்டவை. எருமை மாட்டின் தோலின் நிறம் கறுப்பு. கோடையில் ஏராளமான வெப்பத்தினை இது கிரகித்துக் கொள்கிறது. எருமை மாடு குட்டையிலிருக்கும்போது இந்த வெப்பம் முழுவதையும் தண்ணீர் ஏற்றுக் கொள்கிறது. அப்பொழுது எருமை குளிர்ச்சியை உணர்கிறது. இதனால்தான் எருமை நீண்ட நேரம் குட்டையிலேயே இருக்கிறது.

- என். ஜரீனா பானு

வீசியது.

திடீரென்று கோயில் வெளிப்புறமும் உட்புறமும் அகல்விளக்கு எரிய ஆகாய மார்க்கமாகப் பன்னிரண்டு பச்சைக் கிளிகள் பூட்டிய தங்கத் தேரில் அழகிய பெண் ஒருத்தி அமர்ந்து வந்தாள். பறந்து வந்த தேர் கோயில் வாயிற்படியில் இறங்க, கோயில் கதவு தானாகத் திறந்தது.

மலைப்பாறை மறைவில் மறைந்திருந்து பார்த்த செண்பக பாண்டியன் வியப்பால் வாயடைத்துப் போனான்.

கிளிகள் தேரை இழுத்துச் செல்ல, தேரில் இருந்த அழகி, சிறிய பொம்மை போன்ற உருவ அமைப்புடன் கோயிலினுள் சென்று இறங்கினாள். அவள் விஜயமாலிகாவே.

பின் தொடர்ந்து உள்ளே சென்ற செண்பக பாண்டியன் ஒரு தூண் மறைவில் நின்று மேற்கொண்டு என்ன நடக்கிறது என்று பார்க்க ஆரம்பித்தான்.

பச்சைக்கிளிகள் பன்னிரண்டும் பெண்களாக உருமாறி, பன்னிரண்டு மேடைகளில் அமர்ந்து வீணை, மத்தளம், யாழ் என வாசிக்க ஆரம்பித்தனர். கோயிலில் உள்ள அம்மன் சிலைக்குப் பூவைத் தூவிய விஜயமாலிகா நடனமாட ஆரம்பித்தாள். விடியப் போவதை உணர்ந்த விஜயமாலிகா அவசரமாகக் கோயிலை விட்டுக் கிளம்பினாள். அவளது விரல் நகம் ஒன்று தேரில் பட்டு ஒடிந்து கீழே விழுந்தது. தேர் ஆகாயத்தில் பறந்து சென்றது. செண்பக பாண்டியன் ஓடிச் சென்று கீழே கிடந்த நகத்தை எடுத்தான். நகம் தங்க நிறமாக ஒளி வீசியது. நகத்தைத் தமது கச்சையில் பத்திரப்படுத்தினான்.

கழுகின் மீது ஏறி அமர்ந்து கடற்கரைச் சென்று இறங்கியவன், ஆமையை வரவழைத்து அதன் மீது ஏறி வேங்கி நாட்டு எல்லையை அடைந்தான்.

வேங்கி அரண்மனை ஆராய்ச்சி மணியை ஒலித்தான். மந்திரி பிரதானிகள் சூழ மீண்டும் சுயம்வர மண்டபம் நிரம்ப, விஜயமாலிகா தங்க சிம்மாசனத்தில் வந்தமர்ந்தாள்.


''தந்தையே, நான் அனைத்து நாட்டு இளவரசர்களையும் அவர்களறியா வண்ணம் சோதித்தேன். செண்பக பாண்டியனையும் சோதித்தேன். என் சோதனையில் முழு வெற்றி பெற்றவர் செண்பக பாண்டியனே.

''எனக்குச் சாமியார் ஒருவர் கொடுத்த வரத்தின்படி நான் ஆமையாகவும் கழுகாகவும் மாமரத்தில் பொய்ப் பழங்களாகவும் காட்சியளித்தேன். பாண்டியன் தன் புத்திக் கூர்மையாலும் தயாள குணத்தாலும் வெற்றி பெற்றார்.

''என் தாய், தந்தை எதிரில் ஒரு சோதனை. நீங்கள் கோயிலுக்குச் சென்று வந்ததை நிரூபியுங்கள்'' என்றாள். இளவரசன் தன் கச்சையிலிருந்து எடுத்து தங்க நிற நகத்தைக் கொடுக்க விஜயமாலிகாவின் கைவிரல் நகமும் அதுவும் ஒன்றாய் இருப்பதைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

''இந்த நகம் மலைக்கோயிலில் நான் கண்டெடுத்த விஜயமாலிகாவின் நகம். இதுவே நான் மலைக் கோயிலுக்குச் சென்றதற்குச் சாட்சி'' என்றான்.

இருவரின் திருமணமும் இனிதே நடந்தது!



புதிர் பக்கம்

I. ஒருவன் பசுக் கூட்டத்தை அடுத்த ஊர் சந்தைக்கு ஓட்டிச் சென்றான்.

வழியில் மூன்று வயல்கள் இருந்தன. பசுக்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து அந்த வயல்களில் மேய்ந்தன. அப்போது ஒவ்வொரு பிரிவிலும் இருந்த பசுக்களின் எண்ணிக்கை ஒற்றைப் படையில் இருந்தது.

வயல்களுக்கு அருகே ஏழு குளங்கள் இருந்தன. வயல்களில் நன்றாக மேய்ந்த பசுக்கள் ஏழு பிரிவுகளாகப் பிரிந்து ஏழு குளங்களில் நீர் குடித்தன. அப்போது ஒவ்வொரு பிரிவிலும் இருந்த பசுக்களின் எண்ணிக்கை ஒற்றைப் படையில் இருந்தது.

குளங்களுக்கு அருகே ஒன்பது அரச மரங்கள் இருந்தன. நீர் குடித்த பசுக்கள் ஒன்பது பிரிவுகளாகப் பிரிந்து ஒன்பது மர நிழலில் இளைப்பாறின. அப்போதும் ஒவ்வொரு பிரிவிலும் இருந்த பசுக்களின் எண்ணிக்கை ஒற்றைப் படையிலேயே இருந்தது. அப்படியானால் பசுக் கூட்டத்தில் இருந்த பசுக்கள் மொத்தம் எத்தனை?

- ஆர்.ஆர்.பூபதி, திண்டுக்கல்

II. 37 என்ற எண்ணைப் பின்வரும் எண்களால் பெருக்குங்கள். அவ்வாறு பெருக்கி கிடைக்கும் விடைகள், உங்களுக்கு ஆச்சர்யத்தைக் கொடுக்கும்.

பெருக்க வேண்டிய எண்கள் : 3, 6, 9, 12, 15, 18, 21, 24, 27.

- பாலு, சென்னை

III. பள்ளி இறுதித் தேர்வு எழுதும் எனது அக்காவிடம் அவளது பதிவெண் என்னவென்று கேட்டதற்குப் புதிர் போட்டாள். "ஆறு இலக்கங்களையுடைய எனது பதிவெண் 5ஆல் வகுபடும். இரண்டாம் எண்ணையும் மூன்றாம் எண்ணையும் கூட்டினால் நான்காம் எண் கிடைக்கும். இரண்டாம் எண்ணையும் நான்காம் எண்ணையும் கூட்டினால் ஐந்தாவது எண் கிடைக்கும். முதல் எண்ணுக்கு மதிப்பில்லை. கடைசி எண்ணுக்கு மதிப்புண்டு. கண்டுபிடி" என்றாள். அவளுடைய பதிவெண் என்ன?

- நெ.இராமன், சென்னை

IV. என்னிடம் ஒண்ணேகால் ரூபாய்க்கு இரண்டு நாணயங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று ஒரு ரூபாய் நாணயம் அல்ல. அப்படியெனில், என்னிடம் இருந்த இரண்டு நாணயங்கள் என்னென்ன?

V. பரதனுக்கு இப்போது என்ன வயதோ அதைப்போல 4 மடங்கு இன்னும் 30 வருடத்தில் ஆகும். இப்போது பரதனுக்கு வயது என்ன?

- என்.ஜரினா பானு, திருபட்டினம்

VI. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் 6 கேள்விகளுக்கும் 6 எழுத்துகளில் விடைகள் அமைந்திருக்கும். கடைசி எழுத்து 'ம்' என்று முடிந்திருக்கும். எங்கே விடைகளைக் காணுங்கள்.

1. தமிழ் இலக்கியத்தில் எழுதப்பட்ட முதல் நூல் ______ .
2. அணுமின் நிலையம் தமிழ்நாட்டில்

அமைந்துள்ள இடம் ________.

3. 'கோயில்களின் நகரம்' என்று அழைக்கப்படும் இடம் ________.

4. 'மனித உடலின் தொட்டி' என்று வர்ணிக்கப்படும் உள்ளுறுப்பு________.

5. மிகவும் விலை உயர்ந்த உலோகம் ________

6. உலகிலேயே அதிக வார்த்தைகளைக் கொண்ட புனித புத்தகம் ________

- **சிவ.மணவழகி, திருச்சிற்றம்பலம்**

புதிர் பக்கம் விடைகள் :

I. மொத்தப் பசுக்கள் : 945
வயலில் மேய்ந்த பசுக்கள் : 315
குளத்தில் நீர் குடித்த பசுக்கள் : 135
மர நிழலில் இளைப் பாறிய பசுக்கள் : 105
எல்லாமே ஒற்றைப் படையே!

II. 111, 222, 333, 444, 555, 666, 777, 888, 999

III. 012345

IV. ஒரு ரூபாய் நாணயமும், கால் ரூபாய் நாணயமும் இருந்தன. அவற்றில் ஒரு நாணயம் ஒரு ரூபாய் நாணயம் அல்ல. இன்னொரு நாணயம்தான் ஒரு ரூபாய் நாணயம்.

V. 10

VI.

அ	க	த்	தி	ய	ம்
க	ல்	பா	க்	க	ம்
கா	ஞ்	சி	பு	ர	ம்
சி	று	நீ	ர	க	ம்
பி	ளா	ட்	டி	ன	ம்
ம	கா	பா	ர	த	ம்

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 ம	த்	த	ள	ம்	■	பு	ன்	2 அ
ரு	■	■	■	க	■	ம்	■	த்
தா	■	3 சா	■	ங்	■	ரு	■	வா
ணி	■	மி	ரு	4 த	■	5 க	6 வ	னி
■	சி	■	7 த	■	வி	■	லை	■
தி	8 ரு	9 மா	■	10 ப	11 க	டை	■	ர்
ம	■	த்	■	ல்	■	12 ஆ	■	க
னு	■	தி	■	பொ	■	■	■	ந
13 அ	வ	ரை	■	டி	ப	ப்	டி	14 மா


தலையும் வாலும் ஆடுது!

வாலையும் தலையையும் ஆட்டும் நாய்க்குட்டியை நீங்களே செய்யலாம்!

உங்களுக்கு வேண்டியது: கடினமான அட்டை, பென்சில், கறுப்பு - மஞ்சள் வண்ணங்கள், சிறிய மரக் கட்டை அல்லது தடிமனான அட்டை, நூல், பெரிய பட்டன் அல்லது கல், ஃபைல் கிளிப் 2, பசை.

தடிமனான அட்டையில் படத்தில் காட்டியபடி நாயின் படத்தை வரைந்து, வண்ணம் தீட்டுங்கள். பிறகு தலை, வால், உடல் பகுதிகளைத் தனித் தனியே வெட்டிக் கொள்ளுங்கள். தலைப் பகுதியிலும் வாலிலும் சிறு துளையிடுங்கள். உடல் பகுதியில் வல, இட பக்கங்களில் துளையிடுங்கள். வலது பக்க துளையில் நாயின் தலையை வைத்து ஃபைல் கிளிப் கொண்டு சேர்த்து விடுங்கள். பிறகு வால் பகுதியை வலது பக்கமுள்ள துளையில் ஃபைல் கிளிப்பால் பொருத்துங்கள். இப்போது நாய்க்குட்டி தயார். இதை மரக் கட்டை அல்லது தடிமனான அட்டையில் பசையால் ஒட்டி விடுங்கள். நாயின் பின்புறத்தில் தலைப் பகுதியையும் வால் பகுதியையும் சேர்த்து ஒரு நூலால் கட்டுங்கள். நூலின் இறுதியில் பெரிய பட்டன் அல்லது கல்லை வைத்துக் கட்டி விடுங்கள். இப்போது நாய் வாலாட்ட தயார்.

கல்லைப் பிடித்து இழுத்தால் நாய் தலையையும் வாலையும் அழகாக ஆட்டும். செய்து பாருங்கள்!





• ஈராக் போர்

செய்தித் துளிகள்

பழைமையான மண்டை ஓடு!

தொல்லியல் துறை நடத்திய அகழ்வாராய்ச்சியில் விழுப்புரம் மாவட்டத்துக்கு அருகில் மிகப் பழைமையான மண்டை ஓடு கிடைத்துள்ளது. இது இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய மனிதனின் மண்டை ஓட்டுப் படிமம். உலகில் இதுவரை கிடைத்த பண்டைக் கால மனிதனின் எலும்புப் படிமங்களிலேயே இதுதான் மிகப் பழைமையானது. அதே போல் மனித எலும்புக் கூடு மண்ணில் புதைந்து, பல காலம் ஆனால் சிதைந்து விடும் என்ற அறிவியல் கூற்றில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிருத்வி ஏவுகணை வெற்றி

நம் நாட்டின் அதி நவீன 'பிருத்வி' ஏவுகணை மார்ச் 26ந் தேதி வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது. நம் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பிருத்வி ஏவுகணை 8.5 மீட்டர் உயரமும் ஒரு மீட்டர் சுற்றளவும் கொண்டது. 150 கி.மீ. முதல் 250 கி.மீ. தொலைவு வரை சென்று தாக்கக் கூடியது. ஒரிசா மாநிலத்திலுள்ள சந்திபூரில் இச் சோதனை நடத்தப்பட்டது. 150 கி.மீ. தூரத்தில் உள்ள இலக்கை 300 விநாடிகளில் கடந்து சென்று தாக்கும் திறன் படைத்தது. அதே நாளில் பாகிஸ்தானும் குறைந்த தொலைவு சென்று தாக்கக்கூடிய அப்தாலி அணு ஏவுகணையைச் சோதித்துப் பார்த்துள்ளது.

போர்


ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல்களைத் தொடங்கி பல நாட்களாகி விட்டன. அமெரிக்க விமானங்களின் இடைவிடாத குண்டு வீச்சும், ஏவுகணைத் தாக்குதலும் தொடர்கின்றன. இதனால் எங்கு பார்த்தாலும் தீப்பிடித்து எரியும் கட்டடங்கள், உடைந்த வீடுகள், ஓயாத வெடியோசைகள், இரத்தக் காட்சிகள் என ஈராக் காட்சியளிக்கிறது.

இந்தப் போரின் காரணமாக அதிகம் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் குழந்தைகள் தான். பள்ளிக் கூடங்கள் மூடப்பட்டுள்ளன. பாதுகாப்பான இடங்களில் நாள் முழுவதும் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் குழந்தைகள். வெடி குண்டு சத்தத்தைக் கேட்டு குழந்தைகள் பயந்து, மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வளைகுடா போருக்குப் பின்னர் ஈராக் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டது. இதன் காரணமாக சத்தான உணவு இன்றியும், அதிக அளவிலான நோய்கள் காரணமாகவும், கடந்த பத்து ஆண்டுகளில் மட்டும் லட்சக்கணக்கான குழந்தைகள் இறந்துள்ளனர். இன்றளவும் ஈராக் குழந்தைகள் சத்துக் குறைந்தும், நோய் பாதிக்கப்பட்டும் காணப்படுகின்றனர்.

சார்ஸ் பயம்!

தென்கிழக்கு ஆசிய நாடுகளில், குறிப்பாக சீனா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் வியட்நாம் நாடுகளில் 'சார்ஸ்' என்ற கொடிய நோய் பரவி வருகிறது. இதன் காரணமாக அந்நாட்டு மக்கள் முகமூடிகளை அணிந்து செல்கின்றனர். சார்ஸ் நோயாளி ஒருவர் தும்மும் போது அவர் வெளியிடும் ஒவ்வொரு நீர்த் துளியிலும் கோடிக்கணக்கான சார்ஸ் வைரஸ் கிருமிகள் இருக்கின்றன. இவை மிகவும் ஆபத்தானவை. இது மற்றவர்களுக்கு விரைவாகப் பரவும் அபாயம் இருப்பதால் முகமூடிகளை அணிகின்றனர். இந்தியாவில் சார்ஸ் நோயை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



எலிப் பொறி என்னாச்சு?

"மிருக வைத்தியர், புலியின் வாயிலிருந்து பல்லை எப்படி பிடுங்குவார்?"

"ரொம்ப ஜாக்கிரதையாக!"

மிருகக் காட்சி சாலையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தார் ஒரு பெண்மணி தன் குழந்தையுடன். ஒரு கூண்டின் அருகில் வந்தவுடன் "வாவ்! அந்தச் சிங்கக் குட்டி எத்தனை அழகாக இருக்கிறது! அதற்குப் பேசத் தெரிந்தால், என்ன சொல்லும்? சொல்லு பார்க்கலாம்!" என்றாள் தன் குழந்தையிடம்.

வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்த குழந்தை பதில் சொல்லவில்லை. அங்கே நின்று கொண்டிருந்த காவலாளி சொன்னார் : "அது பேசினால் 'மேடம்! நான் சிங்கக் குட்டி இல்லை. புலிக் குட்டி' என்று சொல்லும்!"

ஆபீஸ் புறப்பட்டுக் கொண்டிருந்த கணவரிடம் மனைவி சொன்னாள் : "சாயங்காலம் வீட்டுக்கு வரும்போது மறக்காமல் எலிப்பொறி ஒன்று வாங்கி வாருங்கள்"

கணவன் : நேற்றுதானே ஒரு எலிப்பொறி வாங்கிக் கொண்டு வந்தேன். அது என்ன ஆச்சு?

மனைவி : அதில் ஏற்கெனவே ஒரு எலியைப் பிடித்து வைத்திருக்கிறேனே!

ஒருவரைப் பார்க்க நண்பர் வந்தார். அப்போது, வெகு அன்னியோன்னியமாய் வாலாட்டியபடி ஒரு நாயும் வந்தது. அடுத்த விநாடி நாயின் ஓரட்டி ஆரம்பித்தது. சோபாவில் அழுக்குக் கால்களுடன் ஏறிக் குதித்தது. தரை விரிப்பைக் கடித்துக் குதறியது.

ஒரு கட்டத்தில் பொறுத்துக் கொள்ள முடியாமல், வந்த நண்பர், "என்னதான் வீட்டு நாய் என்றாலும் இப்படி அசிங்கம் செய்ய

அனுமதிக்கலாமா? கட்டிப் போடுங்கள்!'' என்றார்.

வீட்டுக்காரர் சொன்னார் : ''இத்தனை நேரம் ஹார்ட்டி அடித்தது உங்கள் நாய் என்றல்லவா நான் எரிச்சலை அடக்கிக் கொண்டு இருந்தேன்!''

தக்காளி என்றால் உங்களுக்கெல்லாம் ரொம்பப் பிடிக்குமில்லையா? இதோ தக்காளியைப் பற்றி ருசியான சில தகவல்களைத் தெரிந்து கொள்ளலாமா?

இன்று உலகில் மிகமிகப் பிரபலமான பழம் தக்காளிதான். ஆமாம்! நாம்



தக்காளியை, காய்கறிவகையில் சேர்த்து விட்டோம் என்றாலும், தக்காளி உண்மையில் ஒரு பழம்தான். உலகம் முழுக்க ஆண்டுக்கு ஆறு கோடி டன் அளவுக்குத் தக்காளி உற்பத்தி செய்யப்படுகிறது. ஆக உற்பத்தியில் உலகில் நெம்பர் ஒன் தக்காளி. நெம்பர் டூ எது தெரியுமா? வாழைப் பழம்தான். நெம்பர் த்ரீ? ஆப்பிள். அடுத்த இடம்? ஆரஞ்சு. அப்புறம்? தர்பூசணி!

உங்கள்மீது மற்றவர்கள் கோபப்படுவார்கள். உங்களுக்கும் மற்றவர்கள் மேல் கோபம் வருவது சகஜம். கிரேக்க தத்துவ ஞானியான அரிஸ்டாட்டில் கோபம் பற்றி என்ன சொல்லி இருக்கிறார் தெரியுமா?

கோபப்படுவது என்பது ரொம்ப எளிமையான காரியம். ஆனால், சரியான காரணத்துக்காக, சரியான நேரத்தில், சரியான நபர்மீது, சரியான முறையில் கோபப்படுவது என்பது ரொம்ப சிரமம். ஆனால் கோபம் என்றால் அது அப்படித் தான் இருக்க வேண்டும்.

புனித அகஸ்டின் என்பவரது கருத்து என்ன தெரியுமா?

''வெறுப்பு என்ற மரத்துக்கு விதையே கோபம்தான்.'' எனவே, வீணான கோபத்தை நாம் தவிர்க்க வேண்டியது ரொம்பவும் அவசியம்.

பெஞ்சமின் ஃபிராங்ளின் கோபம் குறித்து சொல்லியுள்ள கருத்தும் கவனிக்கப்பட வேண்டியது. அவர் சொல்கிறார்: ''கோபத்தில் துவங்கும் எதுவும், அவமானத்தில்தான் போய் முடியும்.''

நம் ஊரில்கூட 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்று சொல்வது உங்களுக்குத் தெரியுமில்லையா?

அடுத்தபடியாகச் சில புதிர்கள். எங்கே விடை சொல்லுங்கள் பார்க்கலாம்!

(1) ஒரு கடிகாரம், மணிக்கு ஐந்து நிமிடம் வீதம் வேகமாக ஓடுகிறது. இன்னொரு கடிகாரமோ, ஒரு மணிக்கு ஐந்து நிமிடம் மெதுவாகப் போகிறது. ஆறு மணி நேரம் கழித்துப் பார்த்தால், இரண்டு கடிகாரங்கள் காட்டுகிற நேரங்களுக்கிடையே எவ்வளவு வித்தியாசம் இருக்கும்?

(2) படத்தில் ஒரு மூதாட்டி இருப்பதைப் பார்க்கிறீர்களா? இந்த மூதாட்டிக்கு ஒரு மகன் உண்டு. அவனுடைய உருவமும் இதே படத்துக்குள் ஒளிந்து கொண்டு இருக்கிறது. எங்கே அந்த மகனைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

விடைகள் :

(1) ஒரு மணி நேர வித்தியாசம் இருக்கும்

(2) படத்தைத் தலைகீழாகத் திருப்பிப் பாருங்கள். தலைப்பாகையிலிருந்து மகனின் முகம் வெளியில் நீட்டிக் கொண்டிருக்கிறதா?

தொகுப்பு : **எஸ்.சந்திரமௌலி**


தள்ளிப் போடாதே!
கதை: துர்கா காத்யாயனி
புனித அலாய்சியஸ் பெ.மே.நி. பள்ளி,
தூத்துக்குடி
பழனிச்சாமி மிகவும் சோம்பேறி. எதையும் 'அப்புறம் செய்யலாம்' என்று தள்ளிப் போடுவான். ஒருநாள் –
நம்ம ஊருக்கு ஒரு சாமியார் வந்திருக்கார். அவரைப் பார்த்துட்டு வாங்க.
மெதுவா பார்க்கறேன்.
நாட்கள் சென்றன. ஒரு நாள் –
சாமியார் பக்கத்து ஊருக்குப் போயிட்டார். உங்க சோம்பேறித்தனத்தால் எதுவுமே நடக்கப் போறதில்லை.
பக்கத்து ஊருக்குப் போறேன்...
சாமியாரைச் சந்தித்தான் பழனிச்சாமி.
இத்தனை நாள் நான் அங்கேதானே இருந்தேன். இப்போ வந்திருக்கியே!
சாமி, என் கஷ்டம் தீர வழி சொல்லுங்க.
இந்த விபூதியை நெற்றியில் பூசிக் கொண்டால் நீ நினைக்கும் ஒரு காரியம் நடக்கும்.
ஆனால் இன்று சூரியன் மறைவதற்குள் நீ செய்து விட வேண்டும். அதன் பின் இந்த விபூதிக்குச் சக்தி இல்லை.
நன்றி சாமி!
பழனிச்சாமி மதியம் வீடு வந்து சேர்ந்தான்.
சூரியன் மறைய இன்னும் நேரம் இருக்கே! தூங்கி எழுந்து விபூதி பூசிக்கலாம்.
பழனிச்சாமி விழித்தபோது சூரியன் மறையும் நேரம் வந்துவிட்டது.
ஐயோ! நேரம் ஆகிவிட்டதே! சீக்கிரம் விபூதியைப் பூசணும்.
அப்போது அவன் மனைவி கதவைத் திறந்தாள். காற்று உள்ளே நுழைந்தது.
ஐயோ! விபூதி தரையில் கொட்டிடுச்சே!
உங்களோட சோம்பேறித்தனத்தாலே நல்ல வாய்ப்பை இழந்துட்டீங்க.

உங்களிடமிருந்து...



தூத்துக்குடியிலிருந்து என். நந்தினி "நானும் முட்டாள்கள் கதையை நிறைய படித்திருக்கிறேன். ஆனால் இந்த 'ஏழு முட்டாள்கள்' கதையைப் போல் படு முட்டாள்களாக இருந்தவர்களை நான் படித்தது இல்லை. இப்படியா அனைத்து சொத்துகளையும் இழப்பது!" என்கிறார்.

"கார்ட்டூன் உலகைக் கலக்கிய டிஸ்னியின் வாழ்க்கை உண்மையிலேயே எங்களுக்குப் பாதை காட்டியது. நடுப்பக்க போஸ்டர் அசத்தல்! விடுகதைகளைப் படித்து விடை கண்டுபிடிப்பதில் எனக்கும் என் தங்கைக்கும் எப்பொழுதும் போட்டி வந்துவிடும்" என்கிறார் மதுரையிலிருந்து ஆர். ஜானகி.

நல்லூரிலிருந்து எஸ். அமீர்ஜான் "கோகுலத்தில் மாதந்தோறும் வந்து கொண்டிருக்கும் 'மாவட்ட ஸ்பெஷல்'களைப் படித்து மகிழ்ந்து வருகிறேன். எங்கள் மாவட்ட ஸ்பெஷலை எப்போது அறிவிக்கப் போகிறீர்கள்? நான் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்கிறார்.

"அட்டைப் படத்தைப் பார்த்ததும் கொடைக்கானலுக்கே சென்று வந்த சந்தோஷம் ஏற்பட்டது. கூடு கட்டும் குளவிகள் கட்டுரைக்குப் படங்கள் மிகவும் அழகாக இருந்தன. அரிசி திருடியது யார்? என்ற கதை நன்றாக இருந்தது" என்கிறார் ஆத்தூரிலிருந்து எல். வானதி

திசையன்விளையிலிருந்து ஆர்.ஜி.உமா "மாலா தேடிய மாயப் பெண் படக்கதை பத்து அத்தியாயத்துக்குள் முடிந்துவிட்டது ஏமாற்றமே! மிக நீண்ட தொடராக வரும் என்று எதிர்பார்த்திருந்தேன்" என்கிறார்.

"அன்பும், பண்பும், தைரியமும் கொண்ட மாலா எங்களுக்கு ஒரு வழிகாட்டி. 'கெட்டது அழிந்து, நல்லது ஜெயிக்கும்' என்ற பழைய கருத்தை வலியுறுத்தினாலும் கதை நன்றாகவே சென்றது" என்கிறார் பள்ளத்தூரிலிருந்து அ. மாதவன்.

உறையூரிலிருந்து வி. வெற்றிவேல் 'மந்திரகலா அழிந்ததும் தான் எனக்கு நிம்மதியாக இருந்தது. 'நல்லவர்களுக்கு நல்லதே நடக்கும்' என்பதைப் புரிந்துகொண்டேன். அடுத்த தொடர்கதையை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்' என்கிறார்.

சுழல் கோப்பை வேண்டுமா?

ஒவ்வோர் ஆண்டும் கோகுலம் இதழ்களில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ, அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சுழல் கோப்பையை உங்கள் பள்ளி பெற வேண்டுமா? அப்படியென்றால் உடனே உங்கள் படைப்புகளை அனுப்பி வையுங்கள். உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள்.

அகஸ்ஸி சாம்பியன்!



• வென்ற களிப்பில் ஆஸ்திரேலிய வீரர்கள்

டென்னிஸ்

அமெரிக்காவில் நடைபெற்ற நாஸ்டாக் 100 ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை அமெரிக்காவின் ஆந்த்ரே அகஸ்ஸி கைப்பற்றினார்.

இறுதி ஆட்டத்தில் ஒரு மணி பதினோரு நிமிடங்களில் 6-3, 6-3 என்ற நேர் செட்களில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் மோயாவை வெற்றி கொண்டார்.

19வது வயதில் 1990 ஆம் ஆண்டு முதல்முறையாக நாஸ்டாக் பட்டத்தை வென்றார் அகஸ்ஸி. இந்த ஆண்டு ஆறாவது முறையாகப் பட்டம் கிடைத்திருக்கிறது. இது புதிய சாதனையாகக் கருதப்படுகிறது.

ஸ்டெஃபி கிராஃப் ஐந்து முறை இப் பட்டத்தை வென்றதே இதற்கு முந்தைய சாதனை. தன் மனைவியின் சாதனையை தற்போது அகஸ்ஸி முறியடித்திருக்கிறார்.



• அகஸ்ஸி



• புலா சௌத்ரி

கிரிக்கெட்

மார்ச் 23ந் தேதி இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் ஆஸ்திரேலியா 125 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வென்றது. இதன் மூலம் ஆஸ்திரேலியா மூன்றாவது முறையாக உலகக் கோப்பையைக் கைப்பற்றியிருக்கிறது. ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் ரிக்கி பாண்டிங் கோப்பையைப் பெற்றுக் கொண்டார். சச்சின் டெண்டுல்கர் தொடர் நாயகன் விருதைப் பெற்றார்.

நீச்சல்

நியூஸிலாந்தின் தெற்குத் தீவில் குக் நீரிணையைக் குறிப்பிட்ட நேரத்தில் கடந்து சாதனை செய்துள்ளார் புலா சௌத்ரி. இவருக்கு வயது 32. கடும் குளிர், கடல் கொந்தளிப்பு ஆகியவற்றைச் சமாளித்து இச் சாதனையைப் புலா சௌத்ரி நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 7 கடல்களையும் கடக்க வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டுள்ள புலா சௌத்ரி இதுவரை இங்கிலீஷ் கால்வாய், ஜிப்ரால்டர் நீரிணை, மத்தியத் தரைக்கடல் வளை குடா, கடலினா கால்வாய் ஆகியவற்றை ஏற்கனவே கடந்துள்ளார். இலங்கையின் பாக் நீரிணை மட்டுமே பாக்கியிருக்கிறது.



அன்புள்ள ஜக்கு...

பாசிகள் படிவது ஏன்?

● டி.சுகந்தி, மணப்பாக்கம்

? நீர் நிலைகளில் பாசிகள் படிவது ஏன்?

பாசியும் உயிருள்ள தாவரமே! குளம், குட்டை, ஆறு, கடல் என நீர் நிறைந்த இடங்களை வாழிடங்களாகக் கொண்டு பாசிகள் வாழ்கின்றன. இவை சலனமற்ற நீரில், பாறைகளில், கடினமான அமைப்பு களின் மேல் எளிதாக வளர்கின்றன. 25,000 வகை பாசியினங்கள் உள்ளன. கண்ணுக்குத் தெரியாத ஒரு செல் பாசி முதல் 150 அடி நீளம் வரையுள்ள மிகப் பெரிய பாசிகள் வரை இருக்கின்றன.

● பி. தேவராஜ், செந்துறை.

? கரப்பான் பூச்சியின் இரத்தம் வெள்ளையாக இருப்பது ஏன்?

கரப்பான் பூச்சியின் இரத்தத்திற்கு ஹீமோலிம்ப் என்று பெயர். இந்த இரத்தத்தில் ஹீமோகுளோபின் என்ற நிறமி இல்லை. எனவே கரப்பானின் இரத்தம் வெள்ளையாக இருக்கிறது. ஹீமோகுளோபின் இரத்தச் சிவப்பணுக்களில் இருந்தால் இரத்தம் சிவப்பாக இருக்கும்.



• டெண்டுல்கர்

● ஆ. சந்தியா, நல்லூர்.

? டெண்டுல்கர் ஒரு தினப் போட்டிகளில் எவ்வளவு ரன்களைக் குவித்திருக்கிறார்? உனக்கு கிரிக்கெட் விளையாடத் தெரியுமா ஜக்கு?

டெண்டுல்கர் ஒரு தினப் போட்டிகளில் 12,219 ரன்களைக் குவித்திருக்கிறார். எனக்கும் கிரிக்கெட் விளையாடத் தெரியும். 'பாய்ந்து, பாய்ந்து' கேட்ச் பிடிப்பதில் நான் கெட்டிக்காரன் என்று சகவீரர்கள் சொல்வார்கள்!

● எஸ். மகேந்திரன்.

? அக்னிப் பரீட்சை என்றால் என்ன ஜக்கு?


நமது உண்மைத் தன்மையை நிரூபிக்கும் சோதனைக்குத்தான்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

மார்ச் இதழில் அறிவித்த போட்டியில் நிறையப் பேர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். ஆனால் பலரும் எட்டாவது கேள்விக்குத் தவறான பதிலை அளித்திருந்தனர். சரியான விடை அளித்தவர்களில் ஐந்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

சரியான விடை:

1. பல்லவர்கள் – ரிஷபக் கொடி
2. சந்தனம் – ஒட்டுண்ணித் தாவரம்
3. அத்வைதம் – சங்கரர்
4. சடகோபரந்தாதி – கம்பர்
5. சிங்கப்பூர் – தீவு
6. பேடன் பவல் பிரபு – சாரணர் இயக்கம்
7. மீன் பிடிக்கும் வலை
8. பியூமா



பரிசு பெற்றவர்கள்:

1. பே. ஆறுமுகம், ஐந்தாம் வகுப்பு, புனித லேயூகா மெட்ரிக் பள்ளி, மதுரை,
2. ம. ரேஷ்மா, ஆறாம் வகுப்பு, வாணியம்பாடி.
3. மு. சுகன்யா, ஆறாம் வகுப்பு, புனித சுவாட்ர்ஸ் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம்.
4. வர்ஷிதா, எட்டாம் வகுப்பு, எல்.என். வி.என்.பள்ளி, கரூர்.
5. எம்.ஏ.உத்தரா, ஒன்பதாம் வகுப்பு, டி.வி.எஸ். பள்ளி, மதுரை.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

அக்னிப் பரீட்சை என்பார்கள்.

● **சே. காயத்ரி, திருக்குறுங்குடி.**

? ஒரே வயதுடைய இருவர் ஒரே வியாதிக்காக, ஒரு மருத்துவரிடம் செல்லும் போது, இருவருக்கும் மருந்து, மாத்திரைகள் வித்தியாசமாகத் தரப்படுகிறதே, ஏன் ஜக்கு?

ஒரு மனிதனைப் போல் அப்படியே இன்னொரு மனிதன் இருக்க முடியாது. அதே போல்தான் ஒருவருக்கு வந்த நோய் அதே கிருமியால், அதே முறைப்படி மற்றொருவருக்கு வரும் என்று சொல்ல முடியாது. ஒரே நோய் வெவ்வேறு காரணங்களுக்காக வரலாம். உதாரணமாக காய்ச்சல் எழுபதுக்கும் மேற்பட்ட வகைகளில் வரலாம். ஒரு கிருமியால் ஒருவருக்குக் காய்ச்சலும் மற்றவருக்கு வேறு காரணத்தால் காய்ச்சலும் வந்திருக்கலாம். எனவே மருத்துவர் அவரவர் நோய்க்கு ஏற்றபடி மருந்துகளைத் தருகிறார். இதனால் தான் மருத்துவரின் ஆலோசனை இன்றி மருந்து சாப்பிடக் கூடாது என்கின்றனர்.

● **கே. நந்தன், கோவை.**

? கோடைக் காலத்துக்கு ஜில்லுன்னு குடிக்க குளிர் பானம் அல்லது பழச்சாறு எது சிறந்தது ஜக்கு?

குளிர்பானங்கள் அதிகம் குடித்தால் உடலுக்கு நல்லதல்ல. குளிர்பானங்களில் உள்ள ரசாயனங்கள் எலும்புகளை பலவீனமாக்கி விடுகின்றன. எனவே பழச்சாறு குடிக்கலாம். அது தவிர மோர், இளநீர் குடிக்கலாம். கிர்ணிப் பழம், தர்பூசணி, நுங்கு போன்றவற்றைச் சாப்பிடவும் செய்யலாம்.

ஓவியப் போட்டி

பரீட்சை காரணமாக ஓவியப் போட்டியில் நிறையப் பேர் பங்கு கொள்ளவில்லை. சிலர் போட்டியைச் சற்றுத் தள்ளி வைக்கும்படி கடிதம் எழுதியுள்ளனர். எனவே சென்ற மாத ஓவியப் போட்டியின் தலைப்பே இந்த மாதமும் தொடர்கிறது.


தலைப்பு: சுற்றுலா பொருட்காட்சி

படத்தை வண்ணத்தில் வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை அவசியம் குறிப்பிடுங்கள். கடைசித் தேதி: 5.5.2003

கதையும் புதிரும்

பரணி அந்த காலனியின் மாணவர் மன்றத் தலைவன். அதில் அவனுக்குக் கொஞ்சம் கர்வமும் இருந்தது. எந்த விஷயமும் தன்னால்தான் நடந்தது என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி விடுவான். இதனால் சக மாணவர்கள் பரணியின் மீது சிறிது வெறுப்பு கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு கோடை விடுமுறையிலும் மாணவர் மன்றத்தின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். விழாவுக்கு இன்னும் பத்து நாட்கள்தான் இருந்தன. எனவே மாணவர்கள் அனைவரும் பரணியின் தலைமையில்



மன்ற விழா!

மரத்தடியில் ஒன்று கூடினர்.

பரணி புதிதாக ஒரு மாணவனை அழைத்து வந்திருந்தான். "ஃபிரெண்ட்ஸ், இவன் பெயர் தீபன். நம்ம காலனிக்குப் புதிதாக வந்திருக்கான். நல்லா படிப்பான், படம் வரைவான். ரொம்பத் திறமையானவன், விழா மேடை மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பை தீபன்தான் செய்யப் போகிறான்" என்றான் பரணி.

மற்ற மாணவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். முருகன் மட்டும் "தீபன் நல்லாப் படிக்கலாம், படம் வரையலாம். ஆனால் இந்த ஊருக்கும், இத்தகைய நிகழ்ச்சிக்கும் புதுசு தானே! செய்வது கஷ்டமில்லையா?" என்றான்.

"ஒரு கஷ்டமும் இல்லை. நீங்க கவலைப்பட வேண்டாம்" என்று கூறி விட்டு விருட்டென்று சென்று விட்டான் பரணி.

விழாவன்று நிகழ்ச்சி துவங்கப் போகும் போதுதான் தீபனுக்கு மைக் நினைவு வந்தது.

முருகனும் மாதவனும் மைக் செட் கடைக்கு ஓடினர். ஆனால் மைக் செட் வேறு நிகழ்ச்சிக்குக் கொடுக்கப்பட்டிருந்ததால் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதாயிற்று.

மைக் இல்லாமல் விழா துவங்கியது. கூட்டம் அதிகம். எவ்வளவு கத்திப் பேசியும் பின்னால் இருப்பவர்களுக்குக் காதில் விழவில்லை.

தீபனுக்கு மேடை அனுபவம் புதிது என்பதால் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவதிலும் குழப்பம் ஏற்பட்டது. ஆண்டு தோறும் அற்புதமாக நடக்கும் விழா இந்த ஆண்டு பிசுபிசுத்துப் போனது.

ஒருவன் ஒரு குறிப்பிட்ட வேலையை அறிந்தவனாகவும், அதைச் சமாளித்து முடிக்கக் கூடியவனாகவும் இருந்தாலன்றி அவனுக்குள்ள வேறு சிறப்புகளைக் கருதி அந்த வேலையை அவனுக்குக் கொடுக்கக் கூடாது.

இதை உணர்த்தும் குறளைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!

அறிந்தாற்றிச் ——— ——— ———
——— ——— றன்று.

— தம்பிப்பயல்

நூல் அறிமுகம்

இருட்டு எனக்குப் பிடிக்கும்!

ஹாய் ஃப்ரெண்ட்ஸ், எப்படி இருக்கீங்க? இந்த விடுமுறையில் நான் படித்த இரண்டு புத்தகங்களைப் பற்றி உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.

முதல் புத்தகம் 'இருட்டு எனக்குப் பிடிக்கும்'. பொதுவாக நமக்கெல்லாம் இருட்டு என்றால் பயம்தானே! ஆனால் இந்தப் புத்தகத்தின் தலைப்பே வித்தியாசமாக இருக்கிறது இல்லையா? அறிவியல், வரலாறு, புவியியல், சமூகவியல் என கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் அமைந்துள்ளது.

நம்முடைய சுற்றுப்புறம், வாய்ப்புகள், கிடைக்கும் அனுபவங்கள் இவைதான் மூளையை வளர்க்கின்றன. பிறவியிலேயே அறிவாளியாக யாரும்



பிறப்பதில்லை என்பதை 'உனக்கு மூளை இருக்கா? கட்டுரை விளக்குகிறது.

சமைப்பது யாருடைய வேலை? – சமைப்பது பெண்களின் வேலை மட்டும் கிடையாது. ஆண், பெண் இருவருக்கும் பொதுவானது.

இருட்டு எனக்குப் பிடிக்கும் கட்டுரையைப் படித்து முடித்தவுடன் நமக்கு இருட்டை நேசிக்க முடிகிறது.

நம்மைப் போன்ற குழந்தைகளுக்கான கட்டுரைகள்தான். ஆனால் பெரியவர்களும், படித்து சிந்திக்கும்படி இருக்கிறது. படிப்பவர்களை அப்படியே புத்தகத்துடன் ஒன்றச் செய்து விடுகிறார் ஆசிரியர் ச. தமிழ்ச்செல்வன். பிரபலமான எழுத்தாளரின் குழந்தைகளுக்கான படைப்பு இது. கைக்கு அடக்கமான அளவில் தரமான தயாரிப்பாக இருக்கிறது புத்தகம்.

இருட்டு எனக்குப் பிடிக்கும், ச. தமிழ்ச்செல்வன், ரூ.30/-, பக். 96, வாசல் பதிப்பகம், 40-டி/3, முதல் தெரு, வசந்தநகர், மதுரை 625 003.

அடுத்த புத்தகம் நமது குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்களைப் பற்றியது. ஆசிரியர் நெல்லை சு. முத்து.



இன்று நம்மைப் போன்ற இளையதலைமுறையினர் யாரைக் கேட்டாலும் நம்முடைய ரோல் மாடலாக டாக்டர் கலாம் அவர்களைத்தான் குறிப்பிடுகிறோம். கலாம் அவர்களின் பிறப்பு, வளர்ந்த விதம், படிப்பு, ஆராய்ச்சி, மனித நேயம், கனவு, குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றது வரை அவரது வாழ்க்கையை எளிமையாக விளக்குகிறது இந்நூல். உரைநடை பாணியில் சுலபமாகப் புத்தகத்துடன் ஒன்றிவிடச் செய்கிறது.

புகைப்படங்களுடன் புத்தகம் நன்றாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

வெற்றித் திருமகன் அப்துல் கலாம், நெல்லை சு. முத்து, பக்.224, ரூ.70/-, வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 17.

ஆர். பொன்னம்மாள்



தங்கப் புதையல்!

வியாசராயர் அருளால் பிறந்தவர் திம்மப்பா.

'பாடா' சென்று விவசாயத்தை மேற்கொண்டார். பெற்றோர் சொற்படி திருமணமும் செய்து கொண்டார். உழும்போது நுகத்தடி நகர மறுத்தது. தோண்டிப் பார்த்தால் ஒரு பெரிய பெட்டி!

கூடியிருந்தவர்கள் முன்னிலையில் பூட்டை உடைத்துத் திறந்தார். பெட்டி நிறையத் தகதகவென்று ஜொலிக்கும் தங்கக் காசுகள். கை சளைக்கும் மட்டும் அள்ளி வழங்கினார். ஏழைகள் மனமார வாழ்த்தி 'கனகப்பா' என அழைத்தனர்.

ஒரு பிள்ளையைப் பெற்றதும் விண்ணுலகடைந்தாள் அவர் துணைவி. பெருமாள் வயோதிக அந்தணனாக வந்து, வாயில் பிரசாதம் போடுவதாகச் சொல்லி எதையோ எழுதிவிட்டுப் போனார். அவர் மறைந்ததும் எழுந்த சுகந்த மணம் அவரை மயக்க முறச் செய்தது.

மயக்கம் தெளிந்ததும் கற்பனை அருவியாகப் பெருக, பக்தி இசை மழை பொழிந்தார் கனகப்பா. பெருமாளின் தாசராகி விட்டவரைக் கனகதாசர் என்றே மக்கள் அழைத்தனர்.

வியாசராயரிடம் மந்திரோபதேசம் பெற்றுக் கொண்டார் கனகதாசர். தாசரிடம் அதிக அன்பு வைத்திருந்தார் வியாசராயர்.


இது மற்ற சிஷ்யர்களுக்குப் பொறாமையை ஏற்படுத்தியது. அவதூறு பேசினர். ஒரு நாள் வியாசராயர் சீடர்களை அழைத்தார். அவர் எதிரே பத்து மாம்பழங்கள் இருந்தன.

ஆளுக்கொரு மாம்பழத்தைக் கொடுத்து எவரும் பார்க்காதபடி சாப்பிடச் சொன்னார்.

சூரியன் அஸ்தமனமானான். கனகதாசர் மட்டும் மாம்பழத்தைச் சாப்பிடாமல் வாடிய முகத்துடன் திரும்பி வந்தார். மற்ற சீடர்கள் ஆளுக்கொரு இடம் சொன்னார்கள்.

"கனகா! நீ ஏன் பழம் சாப்பிடவில்லை?" என்று கேட்டார் குரு தேவர்.

"குருநாதா! இருளிலும் கண்ணனின் கண்கள் பளிச்சிடுகின்றன.



நான் எப்படி சாப்பிடுவேன்? பொய் சொல்லி உங்களை ஏமாற்றுவது பாவ மல்லவா?'' என்றார் கனகதாசர்.

மற்ற சீடர்கள் வெட்கித் தலை குனிந்தனர். வியாசராயர் கனக தாசரைக் கட்டி அணைத்துக் கொண்டு ''தீர்த்த யாத்திரை சென்று வா'' எனப் பணித்தார்.

உடுப்பி சென்ற கனகதாசர் ஜன்னல் வழியே கிருஷ்ண னைத் தரிசித்து உருகினார். உள்ளே சென்று தரிசிக்கும் உரிமை அவருக்குக் கிடைக்க வில்லை.

கோவிலுக்கு மேற்கே ஒரு குடிசை போட்டுக் கொண்டு வாழ்ந்தார். ஒரு நாளைக்கு ஒரு பட்சணமாக செய்து நிவேதிப்பார். கண்ணனுக்கு பசிக்கும் என்று நடு இரவில் எழுந்து பட்சணம் செய்வார். எல்லாம் தாயாரிடம் கற்றுக் கொண்டது. ''உன்னை முழுசாக எப் போது பார்ப்பேன்?'' என்று உருகுவார்.

நான்கு வீதிகளிலும் சுற்றி பஜனை செய்வார். கோவிலுக்குப் பின்புறம் ''கண்ணா! மணிவண்ணா! தேவகி ஆசையை நிறைவேற்ற குழந்தையாய் வடிவெடுத்தவனே! உன் முகத்தைப் பார்க்க முடியாத பாவியானேனே! அன்று நீ காளிங்க நர்த்தனம் ஆடியபோது உன் நண்ப னாகப் பிறந்த நான் சினந்து வீசிய கல் உன் மீது பட்ட வருத்தமா? என் வீட்டில் வெண்ணை திருடி னாய் என்று காட்டிக் கொடுத்திருப் பேனோ? பாகவதம் பண்டிதர் போற்றும் பொக்கிஷம். அதைச் சேரிகளில் நாட கமாகப் போட்டு இழிவுபடுத்தி

விட்டதாக எண்ணுகிறாயா?'' என்று உருகிய சமயம், 'தடதட' வென்ற சத்தம்!

ஜன்னலும், சுவரும் இடிந்து விழுந்தன. கிருஷ்ண விக்ரகம் முகம் திரும்பி கனக தாசரைப் பார்த்து இருந்தது. கனகதாசர் பூமியில் முகம் பதித்து நமஸ்கரித்தார். கண்ணீர் அருவியெனப் பெருகியது.

''எனக்காகத் திரும்பி நின்றாயோ! தடை நீக்கிய தாமோதரா! திவ்ய தரிசனம் பெற்றேன்! என் பிறவி புனிதமானது. நானே பாக்கியவான்'' என்று சந்தோஷப்பட்டார்.

அர்ச்சகர்களும், கோவில் அதிகாரிகளும் கனகதாசர் பாதங்களில் விழுந்து, அவரை உள்ளே அனுமதிக்காததற்காக மன்னிப்புக் கோரினர். விஷயம் தீயெனப் பரவ மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. கனகதாசர் நெடு நேரம் பாடினார்.

அதிகாலை பூஜைக்கு வந்த வாதி ராஜ ஸ்வாமிகள் கண்ணன் லீலையைக் கண்டு வியந்தார். ஜன்னலை சீர்திருத்தி 'கனக தாசர் ஜன்னல்' எனப் பெயரிட்டார். எட்டு மடாதிபதிகளும் கூட ஜன்னல் தரிசனம் பார்த்த பிறகே உள்ளே செல்லலாம் என்ற நியமத்தை ஏற்படுத்தினார். அந்த உத்தரவு இன்றும் கடை பிடிக்கப்படுகிறது.

ஒரு நாள் முற்பகல். கண்ணனுக்கு அப்பம் செய்து நிவேதனத்துக்குக் கொண்டு வைத்து விட்டுப் பாடிக் கொண்டிருந்தார் கனகதாசர். அப்போது அந்தக் கூடத்தின் வடக்குச் சுவரிலிருந்து ஒரு கல் விழுந்தது. அதன் வழியே சூடான அரிசிக் கஞ்சி வழிந்து, அப்பம் வைத்திருந்த பாத்திரத்துக்கருகிலிருந்த பள்ளத்தில் தேங்கியது. வடக்குச் சுவரின் பின்னால் மடத்துச் சமையலறை இருந்தது.

கஞ்சியைத் தேங்காய் சிரட்டையில் ஏந்தி அப்பத்தோடு நிவேதித்தார் தாசர்.

ஸ்ரீவாதி ராஜ ஸ்வாமிகளிடம் இதைத் தெரிவித்தான் மடைப்பள்ளி பணியாள். அவர் எட்டு மடாதிபதிகளையும் அழைத்து இதைக் காண்பித்தார்.

''குலமும், அந்தஸ்தும், சம்பத்தும் கண்ணனுக்கு முக்கியமல்ல என்று நிருபித்து விட்டான் கண்ணன். பக்தியே அவனுக்குப் பிரதானம். இன்று முதல் அப்பமும், நொய்க் கஞ்சியும் நிவேதனத்தில் கண்டிப்பாக இருக்க வேண்டும்'' என்று கூறினார்.

இன்றும் தங்கக் கொட்டாங்கச்சியில் நொய்க்கஞ்சியும், அப்பமும் உடுப்பி கிருஷ்ணருக்கு நிவேதிக்கப்படுகிறது.

கனகதாசரின் கீர்த்தனைகளுக்கு 'மோகனதாரங்கா' என்று பெயர். கனகதாசர் நூறு ஆண்டுகள் வாழ்ந்து கர்நாடகம் முழுவதும் கேசவனது புகழைப் பாடிப் பரப்பினார்.

திருப்பதி சென்று தன் ஆயுள் அங்கேயே முடிய வேண்டும் என்று பிரார்த்தித்தார். அவர் விருப்பம் நிறைவேறியது.

நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இந்த மகானின் உண்மையான பக்திக்கு 'கனகதாசர் ஜன்னல்' இன்றும் அடையாளமாக இருக்கிறது. ●





வண்ண வனப்பே! எழிற்கிளியே!
வற்றா அழகே! மொழி அமுதே!
உண்ணக் கனிகாய் தேடிடுவாய்
உயிர்கள் மடியாய்க் கூடிடுவாய்.

ஆலின் பழமுன் வாயழகு
அத்திக் கொழுந்துன் மேனி நிறம்
மாவின் இலை நேர் கூர் நீள்வால்
மணத்தக் காளி சீர்விழிகள்.

சொன்ன மொழியைத் திருப்பி நிதம்
சொல்லும் மழலைத் திருவினர்போல்
கன்னல் மொழியில் நெஞ்சினிக்கக்
கன்னித் தமிழில் கொஞ்சிடுவாய்.

மன்னர் மணிமா மாடத்தும்
மற்றோர் தாழ்ந்தோர் கூடத்தும்
அன்பர் அளிக்கும் உணவேற்பாய்
அறியாய் பேதம் குணக் குன்றே!

கொஞ்சும் வஞ்சி இன்துணையாம்,
குறிஞ்சி நிலப்புள் மென்கிளியாம்
வஞ்சம் அறியா விலங்குகள் மேல்
வளர்ப்போம் பாசம் நலம் சேர்ப்போம்.

- மு. குழந்தைவேலு

கொஞ்சும் கிளி!



முயன்றால் முயலையும் வரையலாம்!



தவளைச் சுட்டிக் காட்டுங்கள்



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 * Registered as a Newspaper in Srilanka

ALOHA

MENTAL ARITHMETIC

(ABACUS LEARNING OF HIGHER ARITHMETIC)

• AUSTRALIA • CHINA • INDIA • INDONESIA • MALAYSIA • OMAN • PHLIPINES • SINGAPORE • THAILAND



CHALLENGE THE CALCULATOR!

BALANCE THE BRAIN!!



The latest ALOHA training, for developing the whole brain at the right age - 5 to 13 years.

Without Calculator, Abacus, Pen and paper, your child can Solve

123 + 456 + 13 - 48 + 534 = ?
12 x 36 - 17 x 15 = ?
6288 + 24 - 13 x 17 = ?
in 5 seconds.



- Only 2 hours per week
- Your child shows growth in academics
- Your child improves concentration
- Computes faster than a computer

Would you like to become an ALOHA Franchisee?

Call **KK ACADEMY (P) LTD.,**

32, 1st Main Road, R.A. Puram, Chennai - 600 028.
Phone : 24613262, 24616268 Fax : 52108090
E-mail : kkacademy@vsnl.net Web : www.alohama.com

For Registration At Chennai :

Adyar	: 9884190450
Anna Nagar (E)	: 9841032238
Anna Nagar (W)	: 9841126275
Avadi	: 9841149527 26555489
Adambakkam	: 22457368,
Ayanavaram	: 9840225568 26444236
Chetpet	: 28202991
Egmore	: 28202989
Gopalapuram	: 9840098216
Mylapore	: 9841044889
Nungambakkam	: 28202988
Perambur	: 9841258244
R.A.Puram	: 24613262 / 6268
T.Nagar	: 9841074220
Thiruvanmiyur	: 56107172
K.K.Nagar	: 9841089001
Kilpauk	: 26443090
Vadapalani	: 9841258244
Valasarawalkam	: 9840438689

Other City :

Coimbatore(0422)	: 2543173
Rajapalayam	: 9842156489

Other States :

Bangalore (080) :

Basavangudi	: 9845124425
Richmond Town	: 9845124425
Rajaji Nagar	: 5449668
Jaya Nagar	: 5320337
Malleswaram	: 5449534
Indira Nagar	: 9845309396
Koramangala	: 5449668
Kammannahalli	: 9845124425
Hyderabad (040)	: 7001354

Centers coming shortly at : Chennai : Shenoy Nagar, Aminjikarai, Mugappair, Nanganallur, Ashok Nagar, Veppery, Chrompet,
Out station : Pondicherry, Kanchepuram, Karaikudi, Trichy, Madurai, Salem, Dharmapuri,
Cochin, Trivandrum, Port Blair (Andaman)